உ

கணபதிதுணை

யாழ்ப்பாணத்து அரசரும்
தமிழை விருத்தி செய்தவரும்
மஹாவித்துவானுமாகிய
செகராசசேகரமஹாராஜாவினால்
இயற்றுவிக்கப்பட்ட

# செகராசசேகரமாலை
# மூலமும், உரையும்.


யாழ்ப்பாணம்
வண்ணார்பண்ணை
ஜோதிஷர்
வி. சபாபதிஐயரால்
பரிசோதித்து
தமது
ஸ்ரீபாஸ்கர யந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

கலி ருOOச. சுபகிருது ௵ ஆனி ௴.

# முகவுரை

இவ்வியாழ்ப்பாணத்து அரசரும்,மஹா வித்துவானுமாகிய செகராஜசேகர மாஹாராஜாவானவர், இத்தேசத்திலே, கல்வியை விருத்தி செய்தல் வேண்டுமென்று மிகு முயற்சியுள்ளவராய், இமயமலை வரை ஆங்காங்குள்ள அரிய கிரந்தங்களை அருமையாகத்தேடி, அவற்றையெல்லாம் சேதுக்கரை மதுரை முதலிய இடங்களிலே, எழுதவும், திருத்தவும் அங்கே பலரை நியோகித்து, அவர்களுக்கு வேண்டிய நிப ந்தங்களை அமைத்து, அவற்றை யெல்லாம் இந்நாட்டிலே கொண்டு வந்து சேர்த்து, ஒரு தமிழ்ச்சங்க முண்டாக்கி, அச்சங்கத்திலே ஆரியம், தமிழ் என்னும் இருபாஷை களிலும்வல்லபல பண்டிதர்களை ஏற்படுத்தி, அதிலே தாமு மொருவராக முத்தமிழை முன்னாள் வளர்த்த பாண்டியன் போல இருந்து இந்நாட்டுக்குத் தமிழறிவுறுத்திய அரசராது நாம தேயத்தையே இந்நூல் 'செகராச சேகர' மெனக் கொண்டிருத் தலானும்,ஆதிகாலத்திலே ஈசுரனால் அருளிச்செய்யப்பட்ட, நான்குவேதங்களுக்கு அங்க மாகிய ஆறு சாஸ்திரங்களுள், பிரதான அங்கமாகும் கண்ணாகிய சோதிட சாஸ்திரம் இது ஆகலானும், இதிலே இவ்வரசர் அனேக தரும சாஸ்திரங்களிலும், சோதிட சாஸ்திரங்களிலும் உள்ள பல அரிய விதிகளை, மிக விரிவாக அமையச் செய்திருத்தலானும், இதில் அடங்கிய விஷயங்களாவெனில், பெண்கள் முதல் ருதுவாகுங் காலத்தில் உண்டான வாரம், திதி, நக்ஷத்திரம்,காலம் ஆதியானவைகளுக்கும்,தனித்தனி உள்ள பலன்களும், விவாகப்பொருத்தங்களிலே இவையிவை மிகமுக்கியமானவைகளென்றும், அவற்றிற்குரியபலன்களும், கருப்பஸ்திரீகளின் நியதிகளும், சிசுக்களின் ஜனனகால அரிஷ்டமும் யோகமும், அவற்றின் பகுப்புக்களும், நோய்வந்தால் அப்போ

துள்ள நக்ஷத்திராதிகளைக்கொண்டு நோயின் சாத்திய அசாத்தியங்களும், பிராயச்சித்தமும், இன்ன இன்ன ரோகங்களுக்கு இன்னநாட்களிலே மருந்துண்ண வேண்டுமென்பதும், தகனம் சஞ்சயனம், சிராத்தம் முதலியவைகளின் காலநியதிகளும், புதுவஸ திரந்தரிக்க நாளாதிகளும் பலனும், கோசரங்களின் நன்மை தீமைகளும், அவற்றின் விசேஷபலனும், பிரயாணத்துக்குரிய பல விதசிறப்புவிதிகளும், பிராயச்சித்தமும் மனைவகுத்தற்குரிய விதிகளும் பலனும், கமத்தொழிலுக்கும் நாற்கால் மிருகங்களுக்கும் உரியபலவித நாட்களும் இராஜாக்களுக்குரிய பல கருமங்களுக்கு நாட்களும், பிள்ளைகளின்பலன் எதுவரை பிதா மதாவுக்குள்ளதென்றும், இன்னும்பல விஷயங்களும், மற்றைய சோதிடநூல்கள் ஒவ்வொன்றிலே விரிவாகக் காணப்படாத பல அரியவிதிகள் இந்நூலிலே விரிவாகக்கூறப்படுதலாலும், இது கல்வி அறிவுள்ள ஆண், பெண் என்னும் இருபாலருக்கும், மிக உபயோகமாகுமென்று இதை அச்சிடுவித்தேன்.

சச- எ-௧௯௦௨

இங்ஙனம்
ஸி. சபாபதிஐயர்
ஜோதிஷர்

கணபதிதுணை

# யாழ்ப்பாணச்சரித்திரம்.

உக்கிரசிங்க மகாராசனுடைய மகன் வாலசிங்க மகாராசன்
செங்கடகநகரியிலிருந்து இலங்கையை அரசுசெய்யுங்காலத்திலே
இரண்டுகண்ணுங் குருடனாகிய கவிவீரராகவன் அவனிடம்போய்
யாழ்வாசித்து அவனை மகிழ்வித்து அவனிடம் பரிசாகப்பெற்ற
நாடு யாழ்ப்பாணம் எனப்படும். அக்கவிவீரராகவன் வடதேசத்
திலிருந்து சில தமிழ்க்குடிகளைக் கொண்டுவந்து இங்கேயிருத்தி
ச் சிலகாலம் அரசாண்டு பின் இறந்துவிட்டான். மாவிட்டபுரக்
கந்தசுவாமி கோயிலை ஆதியிற் கட்டுவித்த மாருதப்பிரவல்லியெ
ன்னும் அரசியுடைய சகோதரி பிள்ளையாகிய சிங்கையாரியன் எ
ன்னும் அரசன் யாழ்ப்பாணத்தின் நிலைமை கேள்வியுற்று, புவ
னேகவாகுவென்னும் மந்திரியோடு இங்குவந்து நல்லூரை இரா
சதானியாக்கி, அதற்கு நாற்றிக்கினும் வெய்யிலுவந்தபிள்ளையார்
கோயில் சட்டைநாதர்கோயில் வீரமாகாளியம்மைகோயில், கை
லாசபிள்ளையார்கோயில் என்னும் நான்குகோயில்களையுமுண்டா
க்கி, வடதேசத்தரசருக்குக் கடிதமெழுதி அங்குநின்றும் பலகுடிக
ளை அழைத்து யாழ்ப்பாணத்தின் பலவிடங்களிலும் குடியேற்றி,
அரசுசெய்தான். புவனேகவாகுவென்னும் மந்திரி அந்தக் காலத்
திலே பழைய நல்லூர்க் கந்தசுவாமிகோயிலை கட்டிச் சாலிவாக
ன ௮௭0ல் பிரதிட்டைசெய்தான். அப்படியரசுசெய்யுங்காலத்தி
லே, ஒருநாள் பரமசிவன் சிங்கையாரிய மகாராசனுக்குச் சொப்ப
னத்திலேதோன்றிக் கட்டளையிட்டருளிய பிரகாரம், அம்மகாரா
சன், கைலாசபிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்திலே, சிவாலய
மொன்று மிகு சிறப்பாகக் கட்டி, இராமநாதபுரத்துச் சேதுபதி
வழியால் திருக்கேதாரத்தில் மன்மதன் பூசித்த ஆதாரலிங்கத்தை
யழைத்துப் பிரதிட்டைசெய்து, கைலாசநாதர் கோயிலென அ

தற்குப் பெயரிட்டு, அந்தப்பிரானை வழிபட்டுவந்து சிவபதமடைந்தான்.

அதன்பின், சிஙகையாரியனுடைய மகன் குலசேகரசிங்கையாரியனும், அவனுக்குப்பின் அவன்மகன் குலோத்துங்கசிங்கையாரியனும், அவனுக்குப் பின் அவன் மகன் விக்கிரமசிங்கையாரியனும், அவனுக்குப்பின் அவன் மகன் வரோதய சிங்கையாரியனும், அவனுக்குப்பின் அவன் மகன் மார்த்தாண்ட சிங்கையாரியனும், அவனுக்குப்பின் அவன் மகன் குணபூஷண சிங்கையாரியனும், அவனுக்குப்பின் அவன் மகன் வீரோதய சிங்கையாரியனும், அவனுக்குப்பின் அவன் மகன் செயவீரசிங்கையாரியனும், முறையே அரசுசெய்துவந்தார்கள். இவன் சாலி. 1380 முதல் 1392 வரை இலங்கைமுழுதையும் ஒருகுடைக்கீழ் அரசுசெய்து அதன்பின் கண்டிநாட்டைப்பராக்கிரமவாகு என்பவனிடம் கொடுத்துத் திறைபெற்றுக்கொண்டுவந்தான். இவனுக்குப்பின் இவன் மகன் குணவீரசிங்கையாரியனும், அவனுக்குப்பின் அவன் மகன் கனகசூரிய சிங்கையாரியனும் அரசுசெய்தார்கள். இக்கனகசூரிய சிங்கையாரியன் கண்டிநாட்டரசனுக்குப் பயந்து மனைவியையும் பரராசசேகரன் செகராசசேகரன் என்னும் இருமக்களையுங்கொண்டு இரவில் வடதேசம்போய்விட, விசயவாகுவென்னும் சிங்கள அரசனே 17 வருஷகாலம் அரசுசெய்தான். ஒளித்தோடிப்போன கனகசூரியசிங்கையாரியன், பிள்ளைகளைத் திருக்கோவலூரிற்கல்விகற்க வைத்துவிட்டு, காசி கோகர்ணம் முதலிய சிவஸ்தலங்களுக்குப்போய் சுவாமிதரிசனஞ் செய்து சிவராத்திரிவிரதமனுட்டித்து வரும்போது, சிவபெருமான் சொப்பனத்திலே தோன்றி அருளிச்செய்தபிரகாரம் திரும்பித் திருக்கோவலூருக்கு வந்தனன். அங்கே தன்பிள்ளைகள் படைக்கலப்பயிற்சி முதலியவெல்லாங் கற்றுத் தங்களுடையசத்துருவைச்செயித்துத்தேசத்தையாள நினைந்து முயல்வதைப் பிதாவானவன்கண்டு மிக்கமகிழ்ச்சியுற்று, அவர்களோடும் மதுரைக்குப்போய் அங்கே சில படைகளைச்சேர்த்

துக்கொண்டு யாழ்ப்பாணம் வந்து, விசயவாகு என்பவனோடு போர்செய்து அவனைக் கொன்று, முன்போல அரசனானான். கலகத்துக்குக் காரணராயிருந்த சிங்களவர் பலரைப் பரராசசேகரன் கொன்றமையால் எஞ்சிய சிங்களவர் கண்டிப் பகுதியைநோக்கிஓடிப் போய்விட்டார்கள். கனகசூரிய சிங்கையாரியன் சில காலமரசுசெய்து இறந்துவிட்டான். பரராசசேகரன் அப்பொழுது அரசனானான். இவனுடைய காலத்திலே யாழ்ப்பாணத்தில் தமிழ் மிக மேலோங்கி வளர்ந்தது.

பரராசசேகரனுடைய தம்பியாகிய செகராசசேகரன் வடதேசத்திருந்து பலநூல்களை வருவித்தும், தமிழ்ச்சங்கமொன்று தாபித்தும், அநேகநூல்களைச் செய்வித்தும், சில நூல்களைத் தானாகச் செய்தும், தமிழை இனிதுபரிபாலித்து வந்தான். இந்தக்காலத்திலேயே பரராசசேகரனுடைய மருகனாகிய புலவர்சிகாமணி அரசகேசரியால் தமிழ் இரகுவம்மிசம் பாடப்பட்டது. செகராசசேகரமென்னும் சோதிட நூலும் பரராசசேகரமென்னும் வைத்திய நூலும் இக்காலத்திலே செய்யப்பட்டன. பரராசசேகரனும் செகராசசேகரனும் பாண்டியர்களைப்போலவே தமிழை வளர்த்து வந்தார்கள். அந்தக் காலந்தொட்டு இன்றுவரையும் யாழ்ப்பாணம் தமிழ்க்கல்விக்கு உறைவிடமாயிருக்கின்றது.

பரராசசேகரன் சிதம்பரம் இராமேச்சுரம் முதலாகிய தலங்களிலே பலதிருப்பணிகள் செய்வித்தும், கட்டளைகளையும் மடங்களையும் ஏற்படுத்தியும், அந்தத்தேசத்திலும் தன்னுடைய புகழைநாட்டினான். சிறிதுகாலம் சோழராசன் பரராசசேகரனுக்குத் திறைகொடுத்து அச்சோழதேசத்தை ஆண்டதினாலே பரராசசேகரன் சோழதேசத்துக்கும் அரசனாயிருந்தான்.

பரராசசேகரனுக்குஇரண்டுமனைவியரும் ஒருகாமக்கிழத்தியுமிருந்தார்கள். மூத்தமனைவி வயிற்றில் சிங்கவாகு பண்டாரம் என்னும் இரண்டு பிள்ளைகளும், இரண்டாம் மனைவி வயி

றபல் பரநிருபசிங்கம் முதலிய நான்குபிள்ளைகளும், காமக்கிழத்தி வயிற்றில் சங்கிலியென்னும் ஒருபிள்ளையும் பிறந்தார்கள். சங்கிலியென்பான் மூத்தமனைவியின் பிள்ளைகளுட் சிங்கவாகுவைக் கொன்றுவிட்டான். பரராசசேகரன் அடுத்தமகனாகிய பண்டாரத்தை முடிசூட்டி அரசனாக்கிவைக்க, அவனையும் சங்கிலி கொன்றுவிட்டான். அதன்பின் சங்கிலியும் இரண்டாம்மனைவியின் புத்திரனாகிய பரநிருபசிங்கமும் ஒத்துவாழ்வார்போலச் சில காலம்வாழ்ந்தும, பின்பொருந்தாமையினால் இருவர்க்கும் கலகமுண்டாக, பரநிருபசிங்கம் இராச்சியத்தைப் பறங்கிக்காரருக்குப்பிடித்துக் கொடுத்தான். அவர்கள் சங்கிலியைக்கொன்றுவிட்டார்கள். இவைகளையெல்லாமறிந்த பரராசசேகரன் வன்னிக்காடுக்குப்போய்விட்டான். அதுமுதல் யாழ்ப்பாணம் பறங்கிக்காரருக்கு ஆயிற்று

பறங்கிக்காரர் யாழ்ப்பாணத்திலே கோட்டையொன்றைக் கட்டியும் பறங்கித்தெரு என்று இப்போதும் சொல்லப்படும் இடங்களைச் செவ்வைசெய்தும் அவைகளில் வீடுகள் கட்டியும் சைவாலயங்கள் பலவற்றை இடித்தும் அநேகவருஷ மரசுசெய்தார்கள். ஒருநாள் அவர்கள் களிகொண்டிருக்கும்போது ஒல்லாந்தர் களவழியேவந்து கோட்டைக்குள் நுழைந்து அவர்களை வெட்டிக்கொன்று தங்கள் அரசரானார்கள். இவர்களும் சமய இடையூறுகள் பலசெய்து [illegible] வருஷகாலம் அரசுசெய்ய, இங்கிலிசுக்காரர் 1718 [illegible] ஷ [illegible] ந்து இவர்களைவென்று தம்முடையகொடியை இங்கே கட்டியிருக்கிறார்கள்.

# விஷயவநுக்கிரமணி.


| விஷயம் | பக்கம் |
|---|---|
| கடவுள்வாழ்த்து | ௧ |
| மகளிர்வினைப்படலம் | ௭ |
| மைந்தர்வினைப்படலம் | ௧௫ |
| மணவினைப்படலம் | ௩௮ |
| கூழ்வினைப்படலம் | ௫௬ |
| பலவினைப்படலம் | ௬௬ |
| வேந்தர்வினைப்படலம் | ௮௬ |
| கோசரப்படலம் | ௯௫ |
| யாத்திரைப்படலம் | ௧௦௨ |
| மனைவினைப்படலம | ௧௧௭ |
| சிறப்புப்பாயிரம் | ௧ |
| விநாயகர்வணக்கம் | ௩ |
| சிவஸ்துதி | ௪ |
| விட்டுணுஸ்துதி | ௪ |
| சரசுவதிஸ்துதி | ௫ |
| முதனூலாசிரியர்வணக்கம் | ௬ |
| அவையடக்கம் | ௬ |
| **மகளிர்வினைப்படலம** | |
| நிஷேகவிதி | ௭ |
| கருப்போற்பத்திக்குக்கால நிர்ணயம் | ௮ |
| பிரதமார்த்தவவிதி (முதல்ருது) | ௯ |
| தெசுட்சியின் திதி நக்ஷத்திராதிபலன் | ௯ |
| இருதுகால ஆருடலக்கணம | ௧௧ |
| இருதுகாலவஸ்திரப்பலன் | ௧௧ |
| இருதுகாணும்பலன் | ௧௨ |
| பும்சவனம் | ௧௩ |
| சீமந்தம் | ௧௩ |
| விஷ்ணுபலி | ௧௪ |
| சூதிகாக்கிரகம் | ௧௪ |
| சூதிகாக்கிரகசக்கரம் | ௧௪ |
| **மைந்தர்வினைப்படலம்** | |
| சாதகன்மம் | ௧௫ |
| மாதா அரிட்டம் | ௧௫ |
| பிதா அரிட்டம் | ௧௬ |
| மாதுலர் அரிட்டம | ௧௬ |
| சர்வாரிட்டம் | ௧௭ |
| நக்ஷத்திராரிட்டம் | ௧௭ |
| கெண்டாந்தசெனனபலன் | ௧௮ |
| உற்பாதசாதம் (அங்கவீனம்) | ௧௯ |
| அரிட்டபங்கம் (சகலதோஷநிவாரணம்) | ௧௯ |
| உச்சக்கிரகபலன் | ௨௦ |
| பஞ்சாயுதந்தரித்தல் | ௨௦ |
| காப்புத்தரித்தல் (யமனாலேவருந் தோஷநிவாரணம்) | ௨௧ |
| நாமகரணம் | ௨௧ |
| துத்தபானம் | ௨௨ |
| (பாலூட்டல்) | ௨௨ |
| தொட்டிலேற்றல் | ௨௩ |
| கர்ணவேதனம் | ௨௩ |
| ஆதித்த சந்திர சோ. தரிசனம் | ௨௪ |
| அன்னப்பிராசனம் | ௨௪ |
| ஆண்டு நிறைவு | ௨௫ |
| சௌளம் | ௨௬ |
| சௌளம் கருப்பஸ்திரி புருஷருக்கு ஆகாதகாலம் மற்றையோர்க்குஆகுங்காலமும் | ௨௭ |
| பல் உகிர். மயிர்வினைக்கு விசேஷகாலம் | ௨௮ |
| மனைவிகருப்பமாயிருக்குங்காலத்திலே செய்யத்தகாதவை | ௨௮ |

| விஷயம் | பக்கம் |
|---|---|
| சௌரம் இன்னகாலத்திற் செய்யிற் றீங்குவருமென்பது | ௨௮ |
| சௌரத்துக்குமாதபலன் | ௨௯ |
| சார்த்திசைவிளக்குநிர்ணயம் | ௨௯ |
| கிருத்திகாதீப காலத்தில் செய்யுஞ் சுபகன்மங்கள் | ௩௦ |
| யாத்திராவிரதம் | ௩௦ |
| அக்ஷராம்பம் வித்தியாரம்பம் | ௩௧ |
| நிலவெழுத்து | ௩௧ |
| சகலகலாரம்பம் | ௩௨ |
| சாரதாயோகம் | ௩௩ |
| உபநயனம | ௩௩ |
| உபநயனத்துக்கு கோசரதோஷநிவாரணம் | ௩௪ |
| உபநயனத்துக்குக்காலம் | ௩௪ |
| உபநயனத்துக்குநாளாதியன | ௩௫ |
| மௌஞ்சிபந்தனம் | ௩௫ |
| உபநயனத்துக்குராசியாதிகள் | ௩௫ |
| உபாகன்மம் | ௩௬ |
| வேதாரம்பம் | ௩௬ |
| வேதாங்கம் ஆறுக்கும் ஆறங்கம் | ௩௭ |
| அசத்தியயாகம் | ௩௮ |

மணவினைப்படலம்

| விஷயம் | பக்கம் |
|---|---|
| விவாகசுத்தி | ௩௮ |
| சமாவர்த்தனம் | ௩௯ |
| சூத்திரர்சமாவர்த்தனம் | ௩௯ |
| விவாகசம்பிரதாயம் | ௪௦ |
| தசப்பொருத்த அனுகூலவிதி | ௪௦ |
| தினப்பொருத்தம் | ௪௦ |
| சென்மாதி(தாரா)பலம் | ௪௧ |
| ஏகதினவிவாகம் | ௪௨ |
| ஏகவிராசிவிவாகம் | ௪௨ |
| கணப்பொருத்தம் | ௪௨ |
| மகேந்திரப்பொருத்தம் | ௪௩ |
| ஸ்திரீதீர்க்கப்பொருத்தம் | ௪௪ |
| யோனிப்பொருத்தம் | ௪௪ |
| இராசிப்பொருத்தம் | ௪௫ |
| இராசியதிபதிப்பொருத்தம் | ௪௬ |
| சத்துரு மித்துரு உதாசீனம் | ௪௬ |
| தற்காலசத்துருமித்துருஉதாசீனம் | ௪௭ |
| வசியப்பொருத்தம் | ௪௮ |
| இரச்சுப்பொருத்தம் | ௪௯ |
| இரச்சுச்சக்கரம் | ௪௯ |
| ஏகரேகாரச்சுப்பலன் | ௪௯ |
| வேதைப்பொருத்தம் | ௫௦ |
| பொருத்தங்களின் அநுகூலம் | ௫௦ |
| வன்னகூடம் | ௫௧ |
| நாடிகூடம் | ௫௧ |
| பூதகூடம் | ௫௨ |
| அநுகூலசேதம் | ௫௨ |
| பொருத்ததோஷாபவாதம் | ௫௨ |
| ஒருவயிற்றிற்பிறந்த சகோதரர்க்குக் காலவர்ச்சிதம் | ௫௩ |
| விவாகத்துக்கேதுவானகாலம் | ௫௪ |
| விவாகமாதம் | ௫௪ |
| சேட்டபுத்திரர்க்காதமாதம் | |
| விவாகத்துக்கு ஆகும்நாளும் ஆகாவாரமும் | ௫௫ |
| விவாகலக்கினமும் கிரகங்கள் நிற்குமிடமும் | ௫௫ |
| ஸதிரிபுருஷர்களின் சென்மத்திரயவிஷேவிதி | ௫௫ |
| வாயசநிமித்தம் | ௫௬ |

சூழ்வினைப்படலம்

| விஷயம் | பக்கம் |
|---|---|
| அக்கினியாதானம் | ௫௬ |
| பூமிப்பிரவேசம் | ௫௭ |
| கிருஷியாரம்பம் | ௫௭ |
| அலப்பிரவாகம் | ௫௮ |
| கலப்பைச்சக்கரம் | ௫௯ |
| பீசாவாபனம் | ௫௯ |
| கிழங்குவகையுண்டாக்க | ௬௦ |
| கொடிவகையுண்டாக்க | ௬௦ |
| விருக்ஷங்களுண்டாக்க | ௬௧ |
| புகையிலைக்கன்றுநட | ௬௧ |
| வெற்றிலை செங்கழுநீர் ஆதியானவை உண்டாக்க | ௬௨ |
| கரும்புநட புன்பயிர்செய்ய | ௬௨ |
| பனை, கமுகு, வாழை, மா, உழுந்து பயறு உண்டாக்க. | ௬௨ |
| சகல பீசாங்குரங்களுக்கும் இராசி | |

| விஷயம் | பக்கம் |
|---|---|
| தானியசங்கிரகம் - | சுச |
| புவனுந்தயோகம் - | சுச |
| தானியபருவதம் - | சுச |
| தானியவிரயம் — | சுரு |
| நவபோசனம் - | சுரு |
| நவபலபுஷ்பாதிகளுக்கு ராசி - | சுரு |
| **பலவினைப்படலம்** | |
| திரவியசேமம் | சுசு |
| கிரயவிக்கிரயம் | சுசு |
| ஆடு, மாடு, கொள்ளல் | சுஎ |
| நவவஸ்திரந் தரித்தல் | சுஎ |
| நவவஸ்திரந்தரிக்க இராசிபலம் | சுஅ |
| நவவஸ்திரந்தரிக்கத்தினபலம் | சுஅ |
| நவவஸதிரந்தரிக்க வாரபலம் | சுகூ |
| தலைக்கட்டு, சிரவேட்டி | சுகூ |
| சாமரை, செலபாத்திரம் | சுகூ |
| நவவஸ்திரதாரணத்துக்கு, விசேஷவிதி | எ0 |
| நவபூஷணம் | எ0 |
| இருணமோசனம் (கடன்தீர்த்தல்) | எக |
| நோய் ஆரம்பிக்கும் நக்ஷத்திரங்கள் ஒவ்வொனறின் பலனும் பிராயச்சித்தமும் எக-எஉ-எ௩-எச | |
| ரோகமரணயோகம் | எரு |
| நோய்வரினும் விஷந்தீண்டினும் ஆசாநாட்கள் - | எரு |
| ஔஷதமுட்கொள்ளல் - | எரு |
| சுரத்துக்கும் சன்னிக்கும் ஔஷதமுட்கொள்ளநாள். — | எசு |
| சஞ்சீவினி மருந்து உட்கொள்ள | எசு |
| வாதபித்தசிலேஷமரோக ஔஷதமுட்கொள்ளநாள் — | எஎ |
| சதுவகைபிரமேகம் குஷ்டம் இவைகளுக்கு மருந்துட்கொள்ளநாள் | எஎ |
| பெருவயிறு, பித்தம், க்ஷயம், சர்வவியாதிகட்கு ஔஷதமுட்கொள்ள | எஎ |
| சத்திரமிட, காரமிட, சுட நாள் | எஅ |
| அட்டைவிடநாள் — | எஅ |
| தயிலாப்பியங்கம் (முழுகல்) | எகூ |
| ஸ்திரீபுருஷர்களுக்கு எண்ணெயிடநாளும் தோஷநிவாரணமும் | எகூ |
| வியாதியாளர் சிசுக்கள்முதலியோர்க்கு எண்ணெயிடநாள் | எகூ |
| ரோகஸ்தர் ஸ்நானஞ்செய்ய ஆகாத நாள் | அ0 |
| நோய்மாறிக்குளிக்கநாள் - | அ0 |
| ஆயிரம்பிறை — | அ0 |
| சதாபிஷேகம் - | அக |
| சிராத்தம் - | அஉ |
| பிரேதகருமம் - | அஉ |
| மரணம், தகனம் — | அ௩ |
| பாஷாணஸ்தாபனம், அஸதிசஞ்சயனம் | அ௩ |
| ஏகோதிட்டம், சபிண்டீகரணம் | அச |
| இன்னமரணத்துக்கு நாளாதிவேண்டாமென்பது | அச |
| நாராயணபலி | அரு |
| சாந்திகபௌடிகம் | அரு |
| **வேந்தர்வினைப்படலம்.** | |
| இராசாபிஷேகம் — | அசு |
| பட்டங்கட்டல் முத்திரை மோதிரங்கொடுத்தல் | அஎ |
| மங்கலங்கேட்டல் | அஅ |
| நவகரம் (திறைவாங்கல்) | அஅ |
| இராசதரிசனம் | அகூ |
| இராசதரிசனத்துக்கு விசேஷவிதி | அகூ |
| இராசசேவை | அகூ |
| அத்திரசத்திராப்பியாசம்ரதாரோகணம் | கூ0 |
| வில், வாள், முதலியவற்றின்பிரமாணம் | கூ0 |
| மானவிதானம் | கூக |
| கட்சானுகூலியம் | கூக |
| துவசாதிகளின்பலன் | கூக |
| கேசகர்மம் | கூஉ |
| யானையேற அங்குசம்பிடிக்க | கூஉ |
| சதுர்ப்பாதசாலை | கூஉ |

| விஷயம் | பக்கம் |
|---|---|
| அசுவசன்மம் | கூஉ |
| பால்கறத்தல்: ததிநாட்டல் தயிர்கடைதல் | கூ௩ |
| சுவாதிசம்பாதியோகம் | கூ௩ |
| அசுவசாந்தி. கெஜசாந்தி | கூ௪ |
| திருவாண்டெழுதல் | கூ௪ |
| அகத்தியபூசை | கூ௪ |
| **கோசரப்படலம்** | |
| யாத்திரைக்குக்கோசரசுபம் | கூரு |
| கோசரவிதி சென்மமுதல் | கூரு |
| சந்திரலக்கினகோசரவிதி | கூரு |
| சசிபலன் | கூசா |
| சனி, செவ்வாய், ராகு, கேதுபலன் | கூசா |
| புதன்பலன் | கூசா |
| குருபலன் | கூஎ |
| சுக்கிரன்பலன் | கூஎ |
| சூரியகோசரவேதை | கூஎ |
| சந்திரகோசரவேதை | கூஅ |
| புதகோசரவேதை | கூஅ |
| குருகோசரவேதை | கூகூ |
| சுக்கிரகோசரவேதை | கூகூ |
| கோசரசுபாசுபகாலங்களிலே செய்யத்தகுவனவும் செய்யத்தகாதனவும் | ௧00 |
| கோசரமிரண்டின்நியாயம் | ௧00 |
| கிரகசாரசங்கிலயயும் பலன் செய்யுங்காலமும் | ௧00 |
| வக்கிராதிசாரபலன் | |
| புத்திரர்பலன்கள் பெற்றிருக்கும் | ௧0௧ |
| தமக்கு மனுபவிக்குங்காலம் | ௧0௧ |
| இவ்விவர்களைக்கிரகதோஷந்தீண்டாவெனல் | ௧0௨ |
| **யாத்திரைப்படலம்** | |
| யாத்திரைமாதவிதி | ௧0௨ |
| யாததிராதித்சூலம் | ௧0௨ |
| யாத்திராநக்ஷத்திரசூலம் | ௧0௩ |
| பரிகச்சக்கரம் | ௧0௩ |
| யாத்திரைக்குவாரவிசேஷம் | ௧0௩ |
| யாத்திரைக்குராசி | ௧0௪ |
| யாத்திரைக்குராசிவிசேஷம் | ௧0௪ |
| யாத்திரைக்குவேண்டுமிராசிசுத்த. | ௧0௪ |
| **யாத்திரைப்படலம்** | |
| நக்ஷத்திரதிசாசூலம் | ௧0௫ |
| சூலதோஷப்பிரத்தியக்ஷம் | ௧0௫ |
| வாரசூலம் | ௧0௬ |
| திசையாத்திரையின்பலன் | ௧0௬ |
| யாத்திராதிக்குவிசேஷமும பக்ஷணமும் | ௧0௬ |
| நக்ஷத்திரபக்ஷணம் | |
| திதிவாரபக்ஷணம் | ௧0எ |
| யாத்திரைபுறப்படும்விதம் | ௧0அ |
| பிரயாணமுகூர்த்தபலனும் பிரதானதிரவியமும் | ௧0அ |
| பிரயாணமாய் இத்தனைநாட்களுள்புறப்படவேண்டுமென்பது | ௧0அ |
| சுபசகுனம் | ௧0கூ |
| துன்னிமித்தம் | ௧0கூ |
| தும்மல்விதி | ௧0கூ |
| ஸதிரீகள்யாத்திரை | ௧௧0 |
| சலயாத்திரை | ௧௧0 |
| சேயாத்திரை | ௧௧௧ |
| நாற்கால் இருகால் உள்ளவைசட்டு யாத்திரைவிதி | ௧௧௨ |
| யுத்தயாத்திரை | ௧௧௨ |
| யாத்திரையில் வெற்றியடையும் லக்கினம் | ௧௧௩ |
| | ௧௧௪ |
| | ௧௧௫ |
| | ௧௧௬ |
| இருள்வெளி | ௧௧௬ |
| **மனைவினைப்படலம்** | |
| பூபரீக்ஷை | ௧௧எ |
| இராசிகளிலேதுயில்வன, நடப்பன, நிற்பன, இருப்பன | ௧௧அ |
| குழிலக்ஷணம் | ௧௧கூ |
| வாஸதுவின் னியாசம் | ௧௧கூ |
| மனைப்பொருத்தம் | ௧௨0 |

உ

கணபதி துணை.

# சிறப்புப்பாயிரம்.

---

எழில்வாய்ந்தமணிமௌலித்துளவணிமாறசரதன்சேயெனவந்தெய்தித், தொழில்வாய்ந்தவிளவலொடுசென்றுமுனிவோனினருள்சுரந்துகாத்துப், பொழில்வாய்ந்தமிதிலைநகர்வில்லிறுத்துத்திருவைமணம்புரிந்துவெண்சங், குழிவாய்ந்தமணிகொழிக்குந்தன்னகர்வந்தன்னைதருமுரையையேண்டி. (க)

வேறு.

மின்னுடனெடியகானகம்புகுந்துவிராதனைமாயமாரீசன், றன்னைவாலியையேழ்மராமரங்களைவெஞ்சாயகமொன்றினாற்றடிந்து, மன்னுநீர்வேலையடைத்தடலிலங்கைவளநகர்புகுந்தெழிற்கும்ப, கன்னனையரக்கர்கோவினைச்செயித்துக்கமலநாயகிசிறைகடிந்து. [உ]

கருங்கடற்சேனைவெள்ளமுந்தானுங்கந்தமால்வரைப்புறத்தணுக, விருங்கதத்தரக்கன்சாயைவிட்டகன்றவியல்பினைத்திருவுளத்தெண்ணி, யருங்கலைப்பொதியமாமுனிக்குரைப்பவவனுமத்தலத்தினதியல்பைப், பெருங்கதைப்படுத்தவதிசயித்தந்தப்பெருங்கதையாதரம்பிணிப்ப. (௩)

அந்தமாதலத்திலரன்றனைத்தாபித்தருச்சனைபுரிந்துதன்னுமஞ், சிந்தையாலருளியப்பதிதனக்குத்திருப்பெயரன்னதேயாக்கி, நந்தலில்பஞ்சக்கிராமவேதியராய்நான்மறைப்பொருளுளம்பிரியாப், பைந்தொடைப்பாசுபதர்களைஞ்ஞூற்றுப்பன்னிருவரைவரவழைத்து. (௪)

பூசனைசெய்ம்மினீரெனக்கருணைபுரிந்தவர்தங்களிலிருவர், காசினிதாங்கும்படிவரங்கொடுத்துக் கமழ்செழுந்துளபமாலிகையு, மாசறுசுருதியாரியவேந்தென்றணிமணிப்பட்டமுங்கொடுத்துத், தேசுறுகுடையுமொற்றையும்வெற்றி திகழ்விடைத்துவசமுநல்க. (௫)

வேறு.

அன்றுமுதற்சதுர்யுகநாலாறிற்புவிபுரந்தவரசர்தம்மில், வென்றிதிகழ்மீனவன்முன்செப்பேடங்கத்தழைக்கும்வேத வேந்து

ஞ், சென்றுகருநாடகரையந்தரவல்லியிற்பொருதுசெயித்தவேந்தும், கன்றிவருமதவேழக்கரந்துணித்துப்போசலனைக்கடிந்தவேந்தும். (௬)

அடற்கரிமூவாயிரத்தோடெழுநூறுபாவலருக்களித்தகோவும், விடைக்கொடியுஞ்சேதுவுநீள்கண்டிகளொன்பதும்பொறித்துமிகைத்தகோவும், வடக்கெழுவாடைக்குமிளந்தென்றலுக்குந்தன்குலப்பேர்வழங்குகோவுங், கடக்கலுழியத்திதனையிரவலர்தங்கட்களித்தகருணைக்கோவும். (௭)

மற்றுமுள்ளபெருந்தகைமையிக்குலத்துப்புவிபுரந்தமன்னர்தாமும், வெற்றிதருதிருப்புயத்துப்பரித்தபடிதனிதரித்தவிஞ்சைவேந்தன், கற்றதிறன்மற்படையைத்துரந்துகச்சாய்த்துறையினில்வெங்கண்டவாளான், கொற்றமிகுவட்கருயர்தென்றிசைக்குச்செலவிடுத்தகுருதிவேலான். [௮]

கோமாறன்கரகமலமோடைபட்டங்குளமீதுருவியக்கண்டு, மாமாரிமதக்கலுழிக்கிளையானை செம்பொனுடன்வழங்குவேந்தன், பாய்மாவுநிதிக்குலமும்பட்டமுநீடரசுரிமைப்பதியுமிக்க, தேமாலைபுனைபுயத்தேமத்தையர்கோன் றனக்களித்த செங்கைவேந்தன். (௯)

சேகரிக்குமணிமவுலிப்பாரரசர்செம்பொனுடன்றிகழ்ந்தவென்றிப், பாகரிக்குங்கரியானைத்திறையளித்துப்பதாம்புயங்கள்பணிந்துவாழ்த்த, மோகரிக்குஞ்சலஞ்சலங்கண்முழங்குகடற்கலைப்புவனிமுழுதுந்தந்த, மாகரிக்குஞ்சேடனுக்கும்பொறைநீக்கிப்புரந்தபுகழ்வரைந்தமார்பான். [௧௦]

ஐந்தருவுநவநிதியுங்குலமணியும்பொன்முகிலுமாவுமொன்றாய், வந்தனையகொடைக்குரிசில்வரியளிகளிசைகுலவுவனசத்தாமன், சந்ததமுந்தருமநெறிகோடாததவப்பெருமான்றழைத்தகீர்த்திக், கந்தமலையாரியர்கோன்செகராசசேகரமன்கங்கைநாடன். [௧௧]

தன்கடவுட்சுருதிகளின்மனமெனுஞ்சோதிடமதனைத்தலத்தின்மீது, மின்குலவுதென்கலையாற்றருகவெனவருள்புரியவிருத்தப்பாவாற், பொன்குலவுசெகராசசேகரமாலையைச்செய்தான்பொருந்துமேன்மைத், தொன்குலவுமிராசவிராமேசனருள்சோமனெனுஞ்சுருதியோனே. [௧௨]

பாயிரம் முற்றிற்று.

உ

கணபதி துணை.

# செகராசசேகர மாலை.

## கடவுள்வாழ்த்து.

### விநாயக வணக்கம்.

எழில்வாய்த்தமணித்திகிரித்திருநெடுமாலுந்தியின்வந்திணங்குமாதித், தொழில்வாய்த்தசதுர்முகத்தன்றிருச்சுருதிப்பொருளாகுந்துய்யகார்வண், டெழிவாய்த்ததேனிதழிச்சிவனருளுமைங்கரத்தானுலகமெல்லாம், பொழில்வாய்த்தமலர்சொரிந்துவாழ்த்தெடுக்கும்பதமலர்கள்புகழ்தல்செய்வாம்.

(இதன்பொருள்.) அழகுபொருந்தியகௌத்துபமணியையும், சுதரிசநமென்னுஞ் சக்கரத்தையுமுடைய அழகிய விட்டுணுமூர்த்தியின் உந்திக்கமலத்தினின்றுந் தோன்றி அவருடைய காத்தற்றொழிலோடியைந்த சிருட்டித்தொழில் கிடைக்கப்பெற்ற பிரமதேவராற் சொல்லப்பட்ட வேதப்பொருளாகிய சுத்தமாகிய கரியவண்டு தன்னிடத்தே மாட்சிமைப்பட்ட தேன்பொருந்திய கொன்றைமாலையைச் சூடிய சிவனாலே பெற்றருளப்பட்ட ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக்கடவுளினது உலகத்தார் யாவராலும் சோலையிலுள்ள பூக்களைச் சொரிந்து துதிக்கப்படுகின்ற திருவடிகளாகிய செந்தாமரை மலர்களை யாமுந் துதிப்பாம் என்றவாறு.

இட்டசித்திகளை இடையூறின்றி இனிதுமுடித்தல் பற்றி யாவராலும் வாழ்த்தப்படுங்கடவுள் இப்போது வாழ்த்தும் எமக்கும் எடுத்துக்கொண்ட இந்நூல் இனிதுமுடிய அருள்செய்வாரென்பது கருத்து. எல்லாமணிகளினுங் கவுத்துப்மணி சிற

ப்புடையதாயிருத்தல் பற்றி எழில்வாய்த்தமணி என்றார். ஆதித்தொழில் - சிருட்டி. சுருதிப்பொருளாகும் சிவனெனவும், ஐங்கரத்தான்பதம் எனவும் இயையும். நாம் என்னும் எழுவாய் மறைந்துநின்று புகழ்தல்செய்வாம் என்னும் பயனிலை கொண்டது. (க)

## சிவபெருமான்.

சங்கரனைப்பிறைவேணிப்பிணையிருங்கைப்பிரசநறுந்தாமத்தாம, வங்கணனைப்புரமெரித்தவாடகவான்கோதண்டத்தானைமானோர், பங்கினனைக்கடுத்துளிக்குந்துளையெயிற்றுப்பஃறலைவெம்பகுவாய்நாக, கங்கணனைக்கனலுநுதற்கண்ணனைவிண்ணவனைக்கருத்தில்வைப்பாம்.

(இ—ள்.) சங்கரனும், பிறையையணிந்த சடையினையும், மான்கன்றைத்தரித்த பெருமையாகிய திருக்கரத்தினையும், தேன்பொருந்திய நறிய கொன்றைமலராலாய மாலையையுமுடைய அங்கணரும், முப்புரங்களையுந் தகித்த பொன்மலையாகிய பெரிய வில்லுடையவரும், உமாதேவியாரை ஒருபாகத்திலுடையவரும், நஞ்சினைத் துளிக்கின்ற துளைபொருந்திய பற்களையும் பலவாகிய தலைகளையும் வெம்மையாகிய பகிர்ந்த வாயையுமுடைய சர்ப்பகங்கணரும், கனலுகின்ற நெற்றிக்கண்ணுடையவரும், ஆகாசரூபியுமாகிய சிவபிரானைத் தியானிப்பாம் எ-று.

ஆன்மாக்களுக்குச் சுகங்கொடுப்பவர் என்பதனைச் சங்கரன் என்னும் பதத்தினாலும், அவ்வாறருளிய செயல்களைப் பிறைவேணி முதலியவைகளாலும் விளக்கினார். அங்கணன் - அழகிய கண்ணுடையவர். அம் ஈண்டு அருள். அருட்கண்ணரென்றவாறு. தாமம் - கொன்றைமாலை. இங்கே அநுக்கிரகமும் நிக்கிரகமுமாகப் பலசெயல்கள் கூறப்பட்டன. இவ்வியல்புடைய கடவுள் நாமெடுத்துக்கொண்ட நூலினையும் இடையூறு நீக்கி இனிதுமுடிப்பாரென்பது கருத்து. (உ)

## விட்டுணு.

நாரணனைப்பயோததியினனந்தலைவாயனந்தமுடிநாகப்பாய்வாழ், ஆரணனைப்பிரசமுறையணிகமலத்திருப்பூத்தவாக

த்தானைப், பூரணனைமலர்ப்பூவைப்பொருவுருவப்பொற்போனைப் புணரிப்பாரேழ், பாரணனைத்திகிரிவிடாப்பங்கயக்கைப்பெருமானைப்பணிதல்செய்வாம்.

(இ-ள்.) நாராயணமூர்த்தியும், பாற்கடலின் நடுவிலே அளவில்லாத தலைகளையுடைய பாம்பாகிய படுக்கையிலே அறிதுயில்செய்கின்ற ஆரணரும், வண்டுகள் தங்கப்பெற்ற அழகிய செந்தாமரையாசனியாகிய இலக்குமிபொலிந்திருக்கும் மார்பினையுடையவரும், பூரணரும், காயாமலரையொத்த திருமேனிப் பொலிவுடையவரும், கடலாற் சூழப்பட்ட பூமிகளேழையும் உண்டவரும், சக்கராயுதத்தைத் தரித்திருக்கின்ற செந்தாமரைப் பூப்போலுந் திருக்கரங்களையுடைய பெருமானுமாகிய விட்டுணுமூர்த்தியை வணங்குவாம் எ-று.

நாராயணன் என்பது நாரணன் என விகாரமாயிற்று. நாராயணன்—என்பது நரசம்பந்தமான சரீரமடைந்தவர் எனவும், நீரிலிருப்பவர் எனவும், சொற்பிறத்தற்கிடமானவர் எனவும் பொருள்படும். பயோததி வடநூன்முடிவு. அனந்தமுடிநாகம் — ஆதிசேடன். ஆரணன் — வேதப்பொருளாயிருப்பவர். பூரணன்—எங்கும் நிறைந்தவர். [௩]

## சரசுவதி.

படிகநிறத்திருமேனிப்பவளவிதழ்ச்செங்காந்தட்பைம்போதங்கைக், கடிகமழ்பூங்கருங்கூந்தலிணைச்செந்தாட்குவளைவிழிக்கற்பின்பொற்பார், வடிவுளவெண்டரளநகைக்கமலமலர்ப்பீடிகைவாழ்மங்கைதுங்கப், பொடிமலராலயனுவிற்புக்கிருப்பாளெமக்கன்புபுரிவாடானே.

(இ—ள்.) பளிங்கின் நிறமாகிய வெண்மைபொருந்திய அழகிய மேனியையும், பவளம்போன்ற செம்மையாகிய வாயையும், செங்காந்தளின் பசிய பூவையொத்த அழகிய முன்கையையும், வாசனைகமழுகின்ற பூக்களையணிந்த கரிய கூந்தலினையும், இரண்டாகிய சிவந்த திருவடிகளையும், குவளைப்பூப்போலுங் கண்களையும், கற்பின் பொலிவையும், நிறைந்த வடிவுள்ள வெண்மையாகிய முத்துப்போன்ற பற்களையுமுடைய வெண்டாமரைப்பூ

வாகிய ஆசநத்திலே வீற்றிருக்கின்ற பெண்ணும், உயர்ந்த மக ரந்தப் பொடிகளையுடைய பதுமாசனனுகிய பிரமாவின் நாவில் இருப்பவளுமாகியசரசுவதிதேவி எமக்குஅன்புசெய்வாள் எ-று

வெண்ணிறமென்பது போதர படிகநிறம் என்றார். பிர மாவின் நாவிலே வீற்றிருந்து சகல வேதங்களையுஞ் சொல்லு விப்பவளாகிய சரசுவதி என்னுடைய நாவிலும் இருந்து இந்நூ லையுஞ் சொல்லுவிப்பாளென்பது கருத்து. (ச)

## முதனூலாசிரியர் வணக்கம்.

காசிபன்வசிட்டனத்திரிபைலன்கௌதமனிறுசீகனுராயர்,
தேசுறுபட்டர்திவிக்ரமரகத்தியன்சியவனனம்பொன்னேபிருகு
மாசில்கல்யாணவன்மனுரதன்சீர்வற்சனேகற்கநல்வராகன் [வாம்
பூசுறுதேவராதனென்றினையோர்பொன்னடிசென்னிமேற் புனை

(இ—ள்.) காசிபர், வசிட்டர், அத்திரி, பைலர், கௌதமர், இறுசீகர்,[வேதநாமமுடையராகிய]வேதவாகு வேதசிராமுதலி யவர், [தேஜஸ்] என்னும் ஒளியின் நாமமுடையராகிய தீப்திமா ன் சோதிஷ்மான் அக்கினிதேசர் முதலியோர், [ஆகாயசஞ்சாரி எனப் பொருள்படும் நாமமுடைய] நபசர் நபோகர்முதலியோர், அகத்தியர், சியவனர், பிரகஸ்பதி, பிருகு, சிவவருமர், நாரதர், வியாசர், கற்கர், வராகர், தேவராதர் முதலிய மகான்களினுடைய பொன்போலுந் திருவடிகளைச் சிரமேற்கொண்டு வணங்குவாம். எ—று. (ரு)

---

# அவையடக்கம்

---

வேறு.

வனைந்துமாமுனிவோர்சொன்னவடகலைச்சோதிடத்தைப்
புனைந்ததென்கலையாற்சட்டைபூட்டியவிதனைக்கேட்டு
முனிந்திடவேண்டாநல்லோர்முற்றுமாராய்ந்துகுற்ற
நினைந்தவையகற்றிநன்காய்நிச்சயித்திடுகைநீரே.

(இ—ள்.) அலங்கரித்துப் பெரிய முனிவர்களாற் சொல் லப்பட்ட வடமொழியிலுள்ள சோதிடநூல்களின் பொருள்க ளுடையதாய அலங்கரிக்கப்படுகின்ற தென்மொழியாலே சட்டை பூட்டப்பட்டிருக்கின்ற இந்நூலைக் கேட்டு வெறுக்கவேண்டா;

கல்வியறிவிற்சிறந்த நல்லோராயுள்ளார் முழுமையுமாராய்ந்து குற்றமாக நினைக்குங்கருத்தை நீக்கி நன்மையுடையதாக நிச்சயித்திடுதல் குணமாகும். எ-று.

முனிவோர் என்றது மேலேகூறியகாசிபன்முதலியோரை. அவர்களுடைய நூல்களிலுள்ள பொருள்களுக்கும், தாம் கூறுகின்ற இந்நூலிலுள்ள பொருள்களுக்கும் பேதமில்லை என்பதும், பொருளை உணர்த்தும் மொழியே அவர்க்கு வடமொழியுந் தமக்குத் தென்மொழியுமாகப் பேதமுடையதென்பதும், வடமொழியை விட்டு அப்பொருளைமாத்திரம் எடுத்துத் தென்மொழியான் மூடி யலங்கரித்தல் ஒருவனுடைய சட்டையை நீக்கி வேறொருசட்டையினால் அவனை அலங்கரித்தலை ஒக்குமென்பதுந் தோன்றச் சட்டைபூட்டிய என்றார். [சு]

# மகளிர்விணைப்படலம்

## * நிஷேகவிதி.

புண்ணியவேதாகமங்கள்புகல்காலத்திருவோரும்பொருந்துவேலைக், கண்ணியசீர்க்கருவழியாவகைவாசிகரணமுதற்காவல்பண்ணி, யெண்ணியவன்னதுக்குலகோரிசைத்தபரிகாரமுடனிறையோன்பூசை, திண்ணியமந்திரமருந்துகனலியற்றிநிஷேகவிதிசெய்யவேண்டும்.

(இ--ள்.) புண்ணியங்களையே பிரதானமாகப் புகலாநின்ற வேதாகமங்கள் விதித்திருக்கின்ற சம்பிரார்த்தமான காலத்தில் ஸ்திரீபுமான்களிருவோருடைய அத்தியுச்சநீசங்களாற் கருப்ப அழிவுவாராதவண்ணம் பரிகாரார்த்தமாகச் சொன்ன வாசீகரணமுதலான காவல்களும் பண்ணி மலடிப்பிரயோகமான சிவார்ச்சனை மந்திர ஔஷத ஓமங்களுஞ் செய்து சிரத்தையோடு கருப்பாதானம் பண்ணுதல் முறைமை எ-று. [க]

அத்தமுருடேரோணமனுஷமிரேவதிமூலமனிலஞ்செக்கோ, டுத்திரமூன்றுத்தமமான்றலைபுரவிகரும்பவிட்டமுறைதேர்பூசஞ்,

* நிஷேகம் — கருப்பாதானம்.

சித்திரைமத்திமமிவைகளொழிந்தவையாடவன்றன் சென்மமூன்று, மெத்தியநான்கெட்டாறீரேழிரண்டாம்பக்கமிவைவேண்டாவென்னே.

[இ—ள்.] அத்தம் உரோகிணி திருவோணம் அனுஷம் இரேவதி மூலம் சோதி சதயம உத்தரத்திரயங்கள் உத்தமம் மிருகசிரிடம் அச்சுவினி புனர்பூசம் அவிட்டம் பூசம் சித்திரை மத்திமம். இவையொழிந்த நட்சத்திரங்களும் புருடசென்மத்திரயமும் சதுர்த்தி அட்டமி சதுர்த்தசி அமாவாசை பூரணை இவைகளும் நிஷேகத்துக்கு விலக்கு எ—று. [உ]

வேறு.

ஏறுகேசரிவணிகன்கடகந்தண்டிருங்கன்னிசாபமீனெழுநற்கோட்கள், பேறுறுகண்டக்தன்னிலொன்பானைந்திற்பிறங்கவிருநாலுசுத்தம்பெருகநாளும், கூறுமிராசியும்பொருந்தச்சோமன்புந்திகுருவெள்ளியிவர்வாரங்கூடமற்ற, மாறுறுபாபோதயங்கள்மருவாவண்ணம்வகைதெரிந்தாதானவிதிவழுத்துவாமே.

(இ—ள்.] இடபம் சிங்கம் துலாம் கர்க்கடகம் மிதுனம் கன்னி தனு மீனம் என்னும் முகூர்த்தங்களிற் சுபர் கண்டகோணத்துற அட்டமசுத்தியுற நாளும் இராசியும் அனுகூலமுற சந்திரன் புதன் குரு சுக்கிர வாரோதயாம்சங்களுறக் கருப்பாதானஞ்செய்யிற் சற்புத்திரப்பேறுண்டு எ—று. [௩]

## காலநிர்ணயம்.

வேறு.

பூப்புறுநாட்டொடுத்தீரெட்டவையுட்கர்ப்பம்பொலியுமெனமறைகற்றபெரியோர்சொற்றார், நீப்பிதன்முன்னொருநான்குஞ்சுத்தநாளாநிகழுமிதிலாதானநேருங்காலைக்,காப்புறுவாணுண்மகவுமற்றுமெல்லாங்கனங்குழையாய்குன்றுமுயர் பிதிர்கட்கன்றி, மீப்பயிலுந்தேவகன்மமதற்கைந்தாநாள்மிக்கவதிற்குறையொண்ணுவிளம்புங்காலை.

[இ—ள்.] ருதுவான தினந்தொட்டுப் பதினாறுதினத்தினுள் ஸ்திரீகளுக்குக் கர்ப்போற்பத்தி உண்டென்று பெரியோர்

சொற்றனர். இவற்றில் முதல் நாலுநாளும் அசுத்தம். இவற்றுள் ஆதானம் நிகழில் ஆயுவும் பிரசையும் தனமும் எனவுங் குன்றும் பிதிர்கன்மங்களுக்கும் தேவகன்மங்களுக்கும் ஐந்தாநாள் மிக்கது, அதிற்குறையில் ஆகாது. எ-று.

பெண்ணானவள் ருதுதினம் முதலாக ச-ம் நாளில சுத்தமாகின்றாள் என்றும் ரஜஸு காணப்படாதாயில் அன்றே தேவ பிதிர் கன்மங்களுக்கு உரியளென்றும் சில ஸ்மிருதி நூல்கள் கூறுகின்றன. (௪)

## * பிரதமார்த்தவவிதி.

ஆண்டிருநான்கினிற்கவுரிமும்மூன்றுகுமரட்கரிலுரோகிணியீரைந்துகன்னி, கூண்டவதன்மேலிரச்சுவாலையென்றுகுறித்தனர்சோதிடவிதிகள்குலவுநல்லோர், வேண்டுபகன்முதற்பத்துத்தமகடுப்பத்துவிளங்குங்கால்மத்திமம்பிற்பத்தோடாய், நீண்டவிராவதமநல்லோர்வாரமாயினெடுங்கண்ணாய்நல்லதெனநியமிப்பாரே.

(இ-ள்.) ஸ்திரீகளுக்கு எட்டுப்பிராயம் கவுரி என்றும், ஒன்பதுபிராயம் ரோகிணி என்றும், பத்துப்பிராயம் கன்னி என்றும், அதன்மேற்படின் இரச்சுவாலையென்றுங் குறித்தனர். பிரதமார்த்தவந் தோன்றியவிடத்துப் பூர்வான்ன முத்தமமென்றும் மத்தியான்னம் மத்திமமென்றும் அபரான்னம அதமமென்றுஞ் சொல்லப்படும். இவற்றில் அபரான்னமும் இரவும் சுபவாரமுறில் தோஷமில்லை. எ-று. (௫)

## தெருட்சி.

பதிமரிப்புச்சுகம்வாழ்வுமக்கட்பேறுபயில்மகவுகுணம்புதல்வர்மகச்சாக்கண்ணி, துதிகருமக்கேடணைதையாணிமைந்தர்துலங்குதல்மாதாவகத்தற்றாய்த்தலென்றே, விதிமுதலாந்திதியாதிஞாயிறுதிமிக்கமகவின்மைகுணம்வீயுங்காந்தர், முதிர்மகவுபலநன்மைசுகங்கேடென்றேமொழிந்தனரிப்படிப்பலன்கண்முன்னுவாயே.

(இ-ள்.) பிரதமார்த்தவத்துக்கு பிரதமை புருஷஹானி, துதியை சுகம், திருதியை வாழ்வு, சதுர்த்தி புத்திரசம்பத்து, பஞ்சமி பிள்ளைப்பேறு, சஷ்டி நற்குணம், சத்தமி புத்திரலாபம் அஷ்டமி புத்திரஹானி, நவமி அஞ்ஞை, தசமி சிலுகு, ஏகாதசி துக்கம், துவாதசி விசனம், திரயோதசி மானியம், சதுர்த்தசி

* பிரதமார்த்தவம்—முதல்ருது.

புத்திரஹானி,பூரணை அமாவாசியையமாதாக்கிரகத்திலிருப்பு.ஞாயிறு மகவில்லை. திங்கள் குணம், செவ்வாய் பதிமரணம், புதன் புத்திரவர்த்தனை, வியாழன் சகல நன்மை, வெள்ளி சுபம், சனி அசுபம் என்று திதி வார பலன்களையறிவது. எ—று. (௬)

அனலாதிநாலுமூன்றடைவிலெண்ணியரும்புதல்வர்நோய் வாழ்வுமகவிலத்த,நினைபதிசாவிதவைகுணமின்மையென்றேநே டுகமேடாதிபலநிகழ்த்துங்காலை,வினையமுறுசாகசம்பேரசதிமை ந்தர்மிகல்குலக்கேடறைசெய்சாவாழ்வுநன்மை, வனையுமெழிற் பரத்தைகுணமின்மைநோய் மெய்வாழ்விலிசேர்மடந்தையென வழங்குவாயே.

(இ-ள்.) கார்த்திகையாதி அபிசித்துக்கூட்டி, ஏழுபலனை யும் நாலுபரிவிருத்திபாக்கியெண்ணிக் கண்டதொகை ஒன்றாகில் மகப்பேறு, இரண்டு வியாதி, மூன்று போகவதி, நாலு மகச்சாவு, ஐந்து தனபதி, ஆறு விதவை, ஏழு குணகினம்;(ஆறு பத்தாமரணம் ஏழு விதவை என்று குணுகுணமறிக எனவும் சிலர் சம்மதம்.) மேடமாகில் மனத்திடம, இடபம் அசதி, மிதுனம் புத்திரவதி, கர்க்கடகம் வம்மிச ஆனி, சிங்கம் புத்திரநாசம், கன்னி தனபதி, துலாம் சுபயௌவனி, விருச்சிகம் பரத்தை, தனுதுர்ச்சனி, மகரம் வியாதி, கும்பம் பிரியமில்லாள், மீனம் அழகுடையளென்று பலன்களையறிவது. கார்த்திகைமுதல் அபிசித்துக்கூட்டி ௪ பரிவிருத்தியாக்கி எண்ணும்போது கார்த்திகை முதலாகவும் மகம் முதலாகவும் அனுஷம் முதலாகவும் அவிட்டம் முதலாகவும் மகப்பேறு முதலிய ஏழுபலன்களையும் அறிக. அனுஷம் முதலாக எண்ணும்போது உத்தராடம் முதல் மூன்று கால் ௫ உத்தராடம் ௪-ம் காலும் திருவோணம் முதற்காலும் ௬ திருவோணம் பின் முக்கால் ௭ ஆகக்கொண்டு பலனறிக.எ—று.

நல்லசுபோதயமம்சம்பார்வைமிக்கநன்மைகளாங்கதிருதய மரிப்புத்திங்கள், சொல்லினுறுமாதாவகத்திருக்குஞ்செவ்வாய்சு தரின்றிப்புந்திமகச்சிறக்கும்வாழ்வா, மல்லலுறுங்குருவெள்ளி நன்மைசாலவருக்கன்சேய்சண்டையிரண்டரவுந்தோன்றிற், புல்லியதீங்கெனவுளத்திற்கொள்வாய்தீயோர் பொருந்துதையவர்க் கமெலாம்பொல்லாவென்றே.

(இ-ள்.) இருதுவான லக்கினத்தைச் சுபர்நோக்கினு மடையினும் அவரது அம்சமுறினும் மிகநன்மை• [பாபருதயநோக்கம் அம்சங்க ளுறிற் றீமை] உதயத்துறுவோர் பலன்களாவன•

ஆதித்தோதயம் மரணம், சந்திரோதயம் மாதாவகத்திருப்பு, செவ்வாயுதயம் புத்திரஹானி, புதோதயம் புத்திரவிருத்தி, வியாழனுதயம் வாழ்வு, சுக்கிரோதயம் நன்மை, சனியுதயம் விரோதம, பாம்புகளுதையம் தீமை எ—று. [அ]

## ஆரூட லக்கணம்.

வச்சிரனின்மகவைந்துவெள்ளையாடைவன்னியிருமூன்றுகறுப்பியமனெட்டு,நிச்சயஞ்சேர்கோடிமடிநிருதிவந்திநிகழ்மலினங்கலைவருணனீடுவெள்ளை, மெச்சுமகவாறுமருத்தைந்துசெம்மைமிகுபுடைவைகுபேரனிரண்டைந்துமக்கள், தச்சபழஞ்சீலைபதினொன்றுமக்கடலைமெழுத்துக்கலையீசன்சாற்றினனே.

(இ—ள்.) இருதுபலன் வினவுபவன் கிழக்குநிற்பிற் பிள்ளை ரு. புடைவை வெண்மை, அங்கியாகிற் பிள்ளை சு. புடைவை கறுப்பு, தெற்காயிற் பிள்ளை அ. புடைவை கோடி, நிருதியாகிற் பிள்ளையில்லை, புடைவை யழுக்கு. மேற்காகிற் பிள்ளை சு. புடைவை வெண்மை, வாயுவாகிற் பிள்ளை ரு. புடைவை சிவப்பு, வடக்காகிற் பிள்ளை கO. புடைவை பழையது, ஈசானமாகிற் பிள்ளை கக. புடைவை எழுத்துள்ளது என்று திக்குப்பலன்களைத் தூதர்நிலையாற் சொல்லுவது எ—று. [கூ]

## வஸ்திரபலம்.

கலையினில்வெள்ளைசுகங்கறுப்பாடைகாந்தனுக்கழிவதாங்கோடி,நிலைபெறுசதியாமழுங்கெனில்மிடிமைநேருநல்வெண்மைமேனிகழ்ந்த, மலிபதிவிரதைசெம்மைநோய்பழையதலைமகன்றுர்ப்பதியெழுத்துத், தலைபடுகலையேலரசிவைவாழ்வுகருமெனவறிந்திவைசாற்றே.

[இ—ள்.] வஸ்திரம் வெள்ளையாகிற் சோபனம். கறுப்பாகில் விதவை. கோடியாகிற் பதிவிரதை. அழுக்காகிற் றரித்திரம். வெள்ளையாயிற் கற்புடையள். சிவப்பாகில் நோயள். பழையதாயிற் துர்ப்பதி. எழுத்துளதாகில் அரசமங்கைபோல் வாழ்வள் எ—று. [கO]

## ருதுபலம்.

மூன்னுறத்தானேகண்டிடிற்றுக்கமுதிர்விலாக்கன்னியர்காணில், மன்னியசெல்வம்புருடரேற்றீதாமங்கலமங்கலமடவார், பன்னுவைதவமாம்விதவையர்காணிற் பதிக்குநோய்நோயினரென்னிற், றுன்னியசார்வோரெனின்மிடிபிறரேற்சுகமெனத்துடியிடைசொல்லே.

(இ—ள்.) இருதுவான லாஞ்சனையைத் தானே கண்டாற் றுக்கம், கன்னியர்காணில் வாழ்வு, புருஷர்காணிற் பொல்லாங்கு, மங்கல ஸ்திரீகாணின் மங்கலம், விதவையர்காணில் விதவை, நோயினர்காணிற் பதிக்குநோய், மித்திரர்காணில் மிடி, ஏனையோர் காணிற் சோபனம் எ—று.

லாஞ்சனை அடையாளம். [கக]

உயர்பெனிலுபர்பாம்வாகனநதன்னிலோங்கியவாகனமுண்டாம், பயமுறுநதியின்கரையிடைக்காணிற்பண்ணியதனம்பலபலிக்குந், துயர்வறுபுணர்வின்கண்ணெனிலமாந்தூயதன் வீடெனிற்சுகமாம், நயமுறுபுறமேல்வழக்கதாய்வாய்தனல்மகவழிவெனநாடே.

(இ—ள்.) உயர்ந்தவிடத்திற் காணின் அதிகபலன், வாகனத்தின்மேற் காணில் வாகனப்பேறு, நதிக்கரையிற்காணிற் திரவியப்பேறு, புணர்ச்சியிற்காணிற் பூமிப்பேறு, கிருகத்தினுட் காணிற் சுகம். புறம்பிற்காணில் வழக்கு, வாய்தலிற்காணிற் புத்திரானி எ-று. (கஉ)

தலைபடுமெண்ணெய்நேரத்திற்காணிற்சாற்றியமரணமாமுழுகு
நிலையினின்மிடியாம்போசனகாலநிகழ்சுபபோசனநேரு
முலைவுறுசயனமெனிற்பிதாமரிக்குமோங்கியநடைபதிநாசம்
நலவிரைநோயாம்பணிவெனிற்சுபமாய்நாட்டினர்வடகலைநரரே.

(இ—ள்.) எண்ணெய்வார்த்த நேரத்திற் காணின் மரணம். முழுகும்நேரத்திற்காணின் மிடி. புசிக்கும்நேரத்திற்காணிற் போசனனுகூலம். சயனத்திற் காணிற் பிதா மரணம். நடக்கும்போ

து காணில் ஸ்தானநாசம். இருக்கையிற் காணில் வியாதி. தாழ்ந்தபூமியிற் காணில் வெகுசோபனம் என்று வடநூலாசிரியர் சொல்லினர் எ-று. [சரு]

## பும்சவனம்.

வேறு.

மூன்ற்றுநான்கெட்டாந்திங்கட்பின்முழுமதியின்பெலந்தோன்றப்பூசத்தோணத், தான்றுபவலவனொடுதண்டுகன்னியல்லாதராசிகளினுன்கோடொன்பா,னேன்றுபன்னுன்கிருவாக்கள்போக்கியிசைக்துறுநற்பக்கத்தில்வாரம்வெள்ளி, வான்றுவுபுதன்திங்கள்குருவிற்பும்சவனமிருநான்கிடஞ்சுத்தம்வாய்ப்பச்செய்யே.

(இ-ள்.) ௩-௬-௪-௮ ஆகிய திங்கள் யாதிலேனும் கருப்பம் பிரசித்தமானகாலத்திலே சந்திரன் பெலமேறிய பூசம் திருவோணங்களில் சதுர்த்தி நவமி சதுர்த்தசி பூரணை அமாவாசை இவையொழிந்த திதிகளில் சுக்கிர புத சந்திர வியாழ வாரோதயாம்சங்களுறக் கடக மிதுன கன்னியொழிந்த ராசிகளுதிக்க, அட்டமசுத்தியுறப் பும்சவனம் முடிக்கலாம் எ-று. ()

## சீமந்தம்.

மன்னுமுதற்கருப்பமதற்§குரியமாதவகையானுன்காறெட்டாமாதந்தம்மி, லுன்னரியமறையோர்க்குத்தகுஞ்சீமந்தமுலகுதனிற்செய்யவிதியுளதாமோணங், கன்னிகுருப்புனர்தமிரேவதிதேர்மும்மீன்கருதியமூன்றுத்திரத்திற்கலமாறிங்கள், பொன்னுறுவாரத்தரிதேணிக்கிப்பக்கம்பொருந்தியசித்திரையிருத்தைபோக்கிக்கொள்ளே.

(இ-ள்.) முதற் கருப்பத்துக்குரிய நான்கு ஆறு எட்டு ஆன மாதங்களிலே பிராமணருக்குத் தகும் விதிப்படி சீமந்தஞ் செய்யவேண்டும். அதனைத் திருவோணம், அத்தம், பூசம், புநர்பூசம், இரேவதி, உரோகிணி, மிருகசீரிடம், உத்தராத்திரயம் இந்நாட்களிற் சுக்கிர, புத, சந்திர, வியாழ, வாரோதயாம்சங்களிற் பக்கச்சித்திரையும் இருத்தையுமொழிந்த திதிகளில், சிங்க விருச்சிகமொழிந்த லக்கினங்களிற் செய்யலாம் எ-று.[கடு]

---

§ இரவிமாதமெனவும் பாடம்.

## விட்டுணுபலி.

சிறந்ததிங்களிருநான்கின்முற்பக்கத்துச்செப்பியவேழீரா
ருந்திதிகடம்மி, லறந்தருநாடிருவோணமாதல்வையமாதலிவை
சம்பவிக்கவறக்கார்நீக்க, யறைந்தபகற்பூருவான்னத்தாலன்றி
மந்திரானத்துள்ளேயாதல், நறுங்குழலார்வயின்கர்ப்பம்பிறக்க
விண்டுநல்லபலியிடுவதற்குநவின்றதாமே.

(இ-ள்.) எட்டாம் மாதத்துப் பூருவபக்கச் சத்தமி, துவாதசி, சம்பவிக்க, திருவோணம் உரோகிணிகளிற் பகல் இருபது நாழிகைக்குள் வேதோக்தமான மந்திரத்துடன் விட்டுணுபலியிட்டால் ஸ்திரீகளுடைய கருப்பஞ் செவ்வையாய் வளருமென-று. (கசு)

## சூதிகாக்கிரகம்.

நவ்விகரும்பிரேவதிமான்றலைசேர்சோதிநற்றலைமுத்தமூ
ன்றுதியோணஞ், செவ்வியசித்திரையிவையிற்குடந்தேளன்றிச்
சிறந்தொழிந்தவிராசிகளிலிருத்தைபோக்கிக், கவ்வையறுநற்
றிதியிற்காரிதிங்கள்கவிகுருமால்வாரமிவையனுகூலிக்க, வெவ்
வமினற்கோளுதயஞ்சேரநோக்கமெழச் சூதிகைக்கிரகத் தேகு
வாயே.

(இ-ள்.) அத்தம், புநர்பூசம, இரேவதி, மிருகசீரிடம், உரோகிணி, சோதி, அனுஷம், உத்தரத்திரயம், அச்சுவினி, திருவோணம், சித்திரை இந்நாட்களில், இருத்தையொழிந்த சுபதிதிகளிற் சனி சந்திரன் சுக்கிரன் வியாழன் புதவாரோதயங்களிலும் அவர்கள் அம்சங்களிலும், கும்ப விருச்சிகங்களையொழித்துச் சுபர் நோக்குறுகின்றவேளையிற் சுபலக்கினங்களிற் சூதிகாக்கிரசப் பிரவேசம் பண்ணலாம் எ-று. [கஎ]

## சூதிகாக்கிரக சக்கரம்

கண்ணியவக்கிரகத்தையறைபன்னிருக்கிக்கண்டதனினடுநா
ன்குநீக்கிமீது, பன்னியவைசாந்நியத்தின்மீனந்தன்னைப்பாரித்
துமேடமுதல்வலமாய்வைத்து, நண்ணியவிவ்விராசிகளின்மகர
ஞ்சிங்கநண்டுதுலையாறெட்டுநான்மூன்றுகா, திண்ணியவரொ

ழிந்தவைகணன்றமென்று தெய்வவடநூலுணர்ந்தோர் செப்பி னூர்.

[இ-ள்.] முன்பு பிரவேசித்த சூதிகாக்கிரகத்தைப் பதினாறு பாகமபண்ணியதின் நடுநான்கு பாகம் நீக்கி மேலே பிரதக்ஷிணமாகநின்ற பன்னிரண்டுபாகத்தில் ஈசானியகோணத்தின் மீனத்தை வைத்து அடைவே பன்னிரண்டிராசியுங் கண்டு அதில் மகரஞ் சிங்கங் கடகந் துலாம இவை நான்குஞ் சென்ம ராசிக்கு ஆறு எட்டுப் பன்னிரண்டாம் இராசிகளுந் தவிர்த்து மற்றைய விராசித்தானங்களிலே பிரசவிப்பது நன்று. எ—று. ()

மகளிர்விணைப்படலம் முற்றிற்று.

ஆகவிருத்தம் ௬௬.

---

# மைந்தர்விணைப்படலம்.

---

## சாதகன்மம்.

சாற்றியிடுநற்புதல்வன் சாதமானதற்காலத்திரணமதுதணத்தல்வேண்டி, யேற்றமிகுதந்தைதிதிவாரநாட்களின்றி மகக்காண்பதுலகியல்பதன்றி, மாற்றரியநாட்களிந்தாற்சுபகாலங்கண் மதித்துமகக்கண்டுமனமகிழநாபி, தேற்றமுறவரிவதன்முன்சாதகன்மஞ்செய்ததற்பினரிட்டவிதிதெருவாயே.

(இ-ள்.) எவரொருவர்க்குப் புத்திரன் பிறந்த நேரத்திலே யிரணசம்பந்தங்க ளறும்படி பிதா திதி வார நட்சத்திராதி வர்ச்சித்துப் புத்திரதரிசனம் பண்ணவேண்டும. சிலநாட் கழிந்தாற் சுபகாலங்களிலே தரிசிக்கவேண்டும. நாபிசேதனத்திற்கு முன் சாதகன்மஞ்செய்து பின்பு முகூர்த்தபலன்களை ஆராய்வது.

## மாதா அரிட்டம்

பிறந்தனுறுமோரைக்கெட்டேழிற்பாவர்பிறங்கவவர்நோக்குறினுமன்றிச்சென்மத், துறப்பெறுமோரைக்கெட்டிராறே

மூாறிலுதித்திடினுஞ்சுபர்மகவினோடுமாதா, விறத்தலுறுமாறிரா றினைவிடும் பாபரெழின்மாதாவின்றிமகவிறக்குமேமெழட், டறிந் கையு வருமின்மைந்தரின்றியாங்கிடைமாதாமரிக்குமணங்க ளே.

(இ-ள்) ஜென்மலக்கினத்துக்கு அ-ல் எ-ல் பாபருறில் மற்றிலன்றி அ-ல் கஉ-ல் எ-ல் கூ-ல் சுபருறின் மகவோடு மாதாமரிக்கும். கூ-கு0-கஉ-ல் பாபருறில் மகவு மரிக்கும். எ-ல் அ-ல் பாபருறில் [illegible] றிப் பெற்றதாய் மரிக்கும். எ-று.

## பிதா அரிட்டம்.

திரவன்றனிராசிக்கெட்டதனின்மந்தன்காசினிசேய்கலந்து சுபாவிழிப்புமின்றி, முதிர்வுறுமக்காலத்துப்பிறத்தல்செய்யின் முன்னியதாதாமரிக்குமுடவன்செவ்வாய், கதியுறுமச்சரராசியி டையிற்சார்ந்துதணட்பின்றிவிழிகருங்காற்ப தேசத்துப், பிதிர கல்வனெனவடநூல்கற்றறிந்தபெற்றியினோர்சொற்றபடி பேசுவா மே.

(இ-ள்) சூரியன்நின்ற இராசிக்கு அ-ல் சனி செவ்வாய் நிற்கச் சுபர் பார்வையுமின்றெனிற் பிதா மரிக்கும். சனி செவ்வா ய் சரராசியினின்று பார்க்கிற் பிதா [illegible] லன். எ-று.

## மாதுலர் அரிட்டம்.

சென்மத்திலீராறேழெட்டிற்ப பர்திகழுங்கால்மாதுலர்க் குத்தீதாம்பத்தி, னன்மொய்த்தகதிர்மதியநான்கிற்பாபர்நணிமேய மில்வெள்ளியுறினைசம்வெந்து, தொன்மைத்தாஞ்சனியைந்தும தலைக்காகாசொற்றிடுமப்பிதாவரிட்டஞ்சொலலுங்காலை, யன் மொய்த்த குழன்மடவாயஞ்சிற்றில்வாயனை வெதுதாமனைக்கரு நியறைந்திடாயே.

[இ-ள்.] சென்மலக்கினத்திலும் கஉ-ல் எ-ல் அ-ல் பாப ருறில் மாதுலர் அரிட்டம். க0-ல் சந்திராதித்தரும், ச-ல் பாப ரும் எ-ல் வெள்ளியுமுறில் பந்துவர்க்கத்துள் அரிட்டம். ரு-ல் சனியுறில் மசவரிட்டம். இலக்கினத்துக்கு ரு-ல் செவ்வாயுறிற் பிதாவரிட்டம். எ-று.

## சர்வாரிட்டம்.

தந்தைதாய்சகோதரமாதுலன்ருய்தாயர்தகைவில்பிதாச்சுதரென்றடைவேவெய்யோ, னிந்துகுசன்புதன்கனகன்வெள்ளிகாரியிவர்கோணத்துறிலவர்களவர்கட்காக, முந்தயனமுகூர்த்தநிசாவிருதுமாதமூவைந்துநாள்வருடமுறையேசெவ்விப், பைந்தொடியாய்கதிர்முதலாமரிட்டமெல்லாம்பலித்திடுங்காலங்களிவைபகருங்காலே.

(இ—ள்.) சென்மலக்கினத்துக்குத் திரிகோணங்களில் ஆதித்தியன் நிற்கிற் பிதாவுக்கும், சந்திரன் நிற்கிற் தாய்க்கும், செவ்வாய் நிற்கிற் பிராதாவுக்கும், புதன் நிற்கில் மாதுலனுக்கும், வியாழன் நிற்கில் மாதாவின்மாதாவுக்கும், வெள்ளி நிற்கிற் பிதாவின்பிதாவுக்கும், சனி நிற்கிற் சுதனுக்கும் அரிட்டமாம். சூரியாரிட்டம் அயனத்துள்ளும், சந்திராரிட்டம் இரண்டுநாழிகைக்குள்ளும், குசாரிட்டம் ஒருநாளினுள்ளும், புதாரிட்டம் இரண்டுமாதத்துள்ளும், குருவரிட்டம் ஒருமாதத்துள்ளும், சுக்கிராரிட்டம் பதினைந்துநாளினுள்ளும், சனியரிட்டம் ஒருவருடத்துள்ளும் பலிக்கும் எ-று. (ரு)

## நக்ஷத்திராரிட்டம்.

மூலத்தின்முதற்காலிற்பிறத்தல்செய்யின்முன்னியவாண்டிருநான்கதளவுந்தாதா, ஞாலத்தின்மைந்தர்முகங்காணவாகாகண்ணிரண்டுதாயருக்குநலத்ததன்று, சீலத்தின்மூன்ருங்கால்பொருட்குச்சேதஞ்செப்பியநான்கென்னின்மிகுசிறப்பாமன்றி, வேலொத்தகண்மடவாய்செல்லாமூலமிகக்கொடிதீங்கிதுபோலவின்ம்பராவே.

(இ—ள்.) மூலம் முதற்காலிற் பிறந்த மகவைப் பிதா எட்டாண்டளவுந் தரிசிக்கல் ஆகாது. இரண்டாங்காலெனின் மாதாவுக்கு ஆகாது. மூன்ருங்கால் அர்த்தஹானி, நாலாங்கால் மிக நன்மை. *நாழிகைசெல்லாத மூலம் மிகவும் பிதாவுக்கு ஆகாது. ஆயில்ய பாதபல துர்ப்பலங்களும் இதனையொக்கும் எ—று. [சு]

* "கேட்டை—யைவிட்டு மதி குருகேற" வெனப் பிறர் கூறுதலுங் காண்க. குருகு - மூலம்.

பூசத்துக்கடகத்துப்பிறத்தல்செய்யிற்புதல்வர்பிதாயாதர்க்குப்பொல்லாதாகும், ஏசற்றமுதற்காலிற்பிதாவாமர்றைமயெனிலன்னைமூன்றுமைந்தனுன்குமாமன், மாசுற்றமரிப்புடையரத்தமூன்றில்மரித்திடுந்தாதாச்சலநாட்சாபங்கூடிற், பேசுற்றபிதாமரிக்குங்கால்களெல்லாம்பிறங்கியபூசப்படியேபேசுவாயே.

(இ-ள்.) பூசநாளிற் கடகலக்கினமுறப் பிறக்கிற் புத்திரர்க்கும், பிதாவுக்கும், மாதாவுக்கும் ஆனி. மற்றை ராசிகளுறப் பிறந்தால் முதற்கால் பிதாவுக்கும், இரண்டாங்கால் மாதாவுக்கும், மூன்றுங்கால் மகவுக்கும், நாலாங்கால் மாமனுக்கும் ஆகாது. அத்தம் மூன்றிற் பிறக்கிற் பிதா மரிக்கும். பூராடந் தனுக்கூடிற் பிதாவுக்கு ஆனி. தனுக் கூடாதாகில் பூசம்போலக் கால்களெல்லாம் பகுத்தறிவது எ-று. [எ]

பரணியின்மூன்றுங்காலிற்பிறக்கிற்றுதாபயின்மாதாமரிப்பறுவைபயற்றிலாதி, விரவியசால்பிதாவிரண்டுமாதாச்சாவாமென்கொடியாளுதிக்குங்காற்பூசம்போலுங், கருதியிடுமுத்தரத்தின்முதற்காலொன்றிற்கண்ணியமாதாமரிப்புமற்றுமெல்லாம், புரையறுவேல்விழியுடையாயரிட்டமெல்லாம் புகல்நூலிற்சொன்னபடிபோக்குவாயே.

(இ-ள்.) பரணியின் மூன்றுங்காலிற் பிறந்தாற் பிதாவுக்கும் மாதாவுக்கும் ஆகாது. சித்திரை முதற்கால் பிதாவுக்கும், இரண்டாங்கால் மாதாவுக்கும் ஆகாது. கன்னிலக்கினஞ் சம்பவிக்கிற் சித்திரைபோல் உத்தரத்தின் முதற்கால் மாதாவுக்கு ஆகாது. ஏனையவைகளையெல்லாம் [அரிட்டநவநீதம், அரிட்டசாதகம், காலவிதானம் முதலிய] நூல்களிற் கண்டுணர்க எ-று. [அ]

## கெண்டாந்தம் குளிகாதிதோஷம்.

உருத்ததிதிநட்சத்திரகெண்டாந்தத்திலுற்பவிக்கிற்றுய்தந்தைக்காகாவிட்டி, பெருத்தமிடிகுளிகனிலுற்பாதகாயம்பிறங்கியமகண்டகனிற்பங்கிருத்தையென்னிற், பொருத்தலியாம்வெதிபாதத்தங்கவினம்புகல்பரிகஞ்சுதர்சாவைதிருதியேற்றந்தை, மரித்திடுஞ்சூலஞ்சகலநாசமந்தம்மருவியநாள்குலமனைத்தும்வாழுமன்றே.

(இ-ள்.) திதி நட்சத்திர கெண்டாந்தத்திற் பிறந்தாற் பிதா மாதாக்களுக்கு ஆகாது. விட்டியிற் பிறந்தாற் றரித்திரம். குளிகனிற் பிறந்தால் விகிர்தசரீரமாயிருக்கும். யமகண்டனிற் பிறந்தால் முடமாம். இருத்தைகயிற் பிறந்தால் அலியாம். வெதிபாதத்திற் பிறந்தால் அங்கவீனம். பரிகத்திற் பிறந்தால் புத்திரநாசம். வைதிருதியிற் பிறந்தாற் பிதா மரிக்கும். சூலத்திற் பிறந்தாற் சகலநாசமுமுண்டு. அந்தநாளின் அந்தத்திற் பிறந்தாற் குலம் வாழும் எ-று. [கூ]

## உற்பாதசாதம்.

கூடியசீர்மதியிழியுங்காலத்தோன்றிற்குருடாகுமங்கமிவைகுறைபிலேறில், நேடுமிருசந்திகளிற்பருவந்தன்னிலிருங்காலமுனைத்தழிவுநிகழுமன்றிப், பீடுறுபல்லொடுபிறப்பிற்காலாற்சாதம்பிறக்கிற்சொற்சாந்திகன்மம்பெருக்கவேண்டும், வீடுறுநாளஞ்சுற்றிப்பிறப்பின்மெத்தவிபரீதமாய்ப்பிறப்பின்வேந்தர்க்காகா.

(இ-ள்.) க்ஷீணசந்திரகாலத்திற் பிறக்கிற் குருடு. அங்கவீனமாய்ப் பிறப்பினும், அங்கம் அதிகமாய்ப்பிறப்பினும், உதயாஸ்தமயனசந்திகளிற் பிறப்பினும், பர்வத்திற் பிறப்பினும் எல்லாவரிட்டமும் உண்டு. தந்தத்தோடு பிறப்பினுங், கால் முன்னாகப் பிறப்பினும் அந்தத்தோஷத்துக்குச் சாந்திகன்மஞ் செய்யவேண்டும். கொடிச்சுற்றிப் பிறப்பினும், உற்பாதசரீரமாய்ப் பிறப்பினும் இராசாக்களுக்குப் பொல்லாதது எ-று. [க0]

## அரிட்டபங்கம்.

விளங்குபெலத்தோடுசெம்பொன்கேந்திரத்துமேவினுங்கோணத்துறினுமிகுத்தநல்லோர், கிளத்தவரிட்டத்தொகைகள்முற்றுந்தாமேகெடும்புகரோன்றனக்குமதுகிளரேழ்நீக்கி, வளம்புனையும்புர்த்தியினலன்றிப்பொன்போல்மன்னுகினுஞ்சென்மத்தில்மலிந்தசோமன், றுளங்குகிலுங்கோளணைத்துந்தந்தமாட்சிதோன்றிடினுமரிட்டமெல்லாந்தொலைந்துபோமே.

(இ-ள்.) கிரகவுச்ச மித்திரத்தான அம்சங்களிலே பந்தமாக நின்ற பிரஹஸ்பதி உதயம் ௪-எ-க0-ல் உதிப்பினும், ௫-கூ-ல் நிற்பினும், சுக்கிரன் பெலமுடனே ஏழொழிந்த கேந்தி

ரத்தானங்களிலே நிற்பினுங், திரிகோணங்களிலே நிற்பினும், புதன் நாலொழிந்த கேந்திர திரிகோணங்களில் நிற்பினும், பூரணசந்திரன் சென்மலக்கினத்தில் நிற்பினும் சர்வாரிட்டநிவாரணமாம் எ-று. [கக]

## உச்சம்.

சூரியவோர்கோளுச்சங்குற்றம்போக்குங்கோளிரண்டேலரசாக்குங்கோள்மூன்றுச்சங், பாரியசொற்சமூகரெனப்படுத்தும் நான்குபயில்வேள்விக்குரித்தாக்கும்பஞ்சோச்சங்கள், சீரியவேற்பரநிருபரிறைஞ்சும்பொற்றாட்செகராசசேகரமன் சிங்கை தங்கு, மாரியர்கோனெனக்குடைக்கீழவனியெல்லா மடக்கியொரு கோலோச்சவளிக்குமாதே.

(இ-ள்.) ஒருகிரகம் உச்சத்துறின் சர்வாரிட்டம் நீக்கும். இரண்டுறிற் கிராமாதிபதியாக்கும். மூன்றுறில் சமூகபதியாக்கும். நாலுறில் இராசசூயாதிவேள்விக்கு உரியனுக்கும். அஞ்சுறிற் செகராசசேகரன்போல ஏகசத்திரத்தின்கீழ் வைத்து ஏக சக்கிரஞ் செலுத்திப் பூமண்டல முழுதையும் புரக்கும்படி செய்விக்கும் (உச்சம் பங்கமுறாதாயின்) எ-று.

எஉகூ தேரும், எஉகூ யானையும், உகஅஎ குதிரையும், ஈகூசடு காலாளுமுடையர் ஓர் சமூகரெனக்கூறுதலுமொன்று.

## பஞ்சாயுதம்.

நற்குழவிபிறந்தவந்நாட்கைந்தாந்நாளுநாடியவவ்வாரமுமைந்தாகுங்காலைப், பொற்பொலிந்தசூத்திரத்துவட்டஞ்சேர்த்துப் பொருந்திடுபஞ்சாயுதங்கள்பொறித்துநாபி, முற்படவேசுபமுகூர்த்தமதனில்வேதமொழிபிறங்கத்தரித்திடுகின் முன்னோர்சொன்ன, வற்புதமாங்கிரகபயமெல்லாந்தீர்ந்தங்காயுமிகப்பெற்றுமகிழ்வழ்கிதாமே.

(இ-ள்.) பிள்ளைபிறந்த ஐந்தாந்தினமும், ஐந்தாம்வாரமுஞ் சம்பவிக்கப் பொன்னாற்செய்த பஞ்சாயுதத்தைச் சுவர்ணசூத்திரத்திலே கூட்டி நாபியளவுந் தாழச் சுபமுகூர்த்தத்திலே தெய்வப்பிராமணர்களால் நிகழும் மந்திரோச்சாரணத்துடன் தரி

த்தால் அந்தச் சிசுவுக்குச் சாயாக்கிரகமுதலிய சகல கிரகதோஷங்களும் நிவாரணமாய் வளரும் - எ—று. [கங]

## காப்புத்தரித்தல்.

சாதமுறுந்திவசத்துக்கேழாநாளிற்றக்கபகலேகுழவிதனக்குச்சால, வேதமுறுநமனுலென்றறிந்தக்காலத்திருக்காப்புத்தரித்ததற்பினந்திநேரம், ஓதுமறைவிளங்கவருகணேசனுக்கன்புறுபூசைபுரிந்துமணிமுசலமேந்தித், தீதறுசிப்பிடுங்கதவிற்புடைக்கநன்மைதிகழ்ந்தமகவுய்யுமெனத்தேருவாயே.

(இ—ள்.) பிள்ளைபிறந்த ஏழாந் தினத்துப் பகலிலே அப்பிள்ளைக்கு யமனுலே கண்டம்வரும், அக்காலத்திலே சுவர்ணத்தினுலே காப்புத்தரித்துத் தெய்வப்பிராமணரால் இரட்சையுந் தரித்துப் பின் அந்தியிலே விக்கினேஸ்வர பூசைபுரிந்து முசலத்தினுலே தாழ்செறித்த கதவிற்புடைத்து மீளவு மிரக்ஷை செய்தால் அத்தோஷந்தீர்ந்து சிசு வாழும் எ-று. [கச]

## நாமகரணம்.

வேதியர்க்குச்சென்மாதியிராறுதல்விளங்கியவீரைந்தாதல் வேந்தர்க்கீரா, றேதியவீரெட்டாதல்வைசியர்க்குநாலைந்துடனிருபத்திரண்டாதல்சூத்திரர்க்குப், பேதமிலாறைந்தாதல்நாலெட்டாதல்பெறுநாளிற்சுபமுகூர்த்தம்பிறங்கநற்கோ,ளதிலராயுச்சமவையடைந்துநன்றுய்ச்,செப்பியநன்னுமகன்மஞ்செய்திடாயே.

(இ-ள்.) பிராமணருக்குச் சென்மாதி க0—கஉ—ம் நாளிலும், க்ஷத்திரியருக்கு கஉ-ககூ-ம் நாளிலும், வைசியருக்கு உ0—உஉ-ம் நாளிலும், சூத்திரருக்கு ங0—ஙஉ-ம் நாளிலும் சுபமுகூர்த்தத்திலே நல்லோரின் உச்சநோக்குண்டாகத் தத்தம் வேதகோஷமுற நாமந்தரிக்கில் முன்னோர்கூறிய கிரகதீமைகள் அகலும் எ—று. [கரு]

இதுவுமது.

பேசியதற்காலமதில்வாரமாதிபிறங்கியசாமானியமாமெனினுநன்று, மாசறுநன்முகூர்த்தமொன்றேபமையுமச்நாளவைக்ழிந்தாலனுஷமகங்கரும்பவிட்டம், பூசமதியுத்தரமூன்றனிலநவ்

விடைபரோணநற்சகடுதோணியீசன், காசறுமிந்நாட்களின்மால் செம்பொன்றிங்கள்கவிவாரோதயாம்மிசங்கள்கண்டுகொள்ளே.

(இ-ள்.) பிராமணாதி நால்வருணத்தாருக்கும் விதித்த தினங்களிலே நாமகரணஞ் செய்யுமிடத்துத் திதிவாராதி விசாரியாது முகூர்த்தங்கொண்டு செய்யவேண்டும். அத்தினங்கள் கழிந்தால் அநுஷம் புநர்பூசம் அவிட்டம் பூசம் மிருகசிரிடம் உத்தரத்திரயம சோதி அத்தம் சதயம் திருவோணம் ரோகிணி ரேவதி திருவாதிரை இந்நாட்களும், புதன் வியாழன் சந்திரன் சுக்கிர வாரோதயாம்சங்களுமுறக் கொள்ளல்வேண்டும் எ-று.

இதுவுமது.

பக்கந்திலாறெட்டுநான்கீராறுபன்னான்கொன்பான் பர்வமிரண்டுநன்றன், றெருக்குமிராசியிற்றிரமேநன்றுமற்றவுபயமுமா மொழிக்தசரமொன்றுமாகா, தக்கவர்கடிரிகோணகண்டந்தன்னிற்சாரவவரோரைபெறவெட்டேசுத்த, மிக்கமுதற்பகன்மத்தியானத்துள்ளேவேண்டும்திநுதன்மருங்குன்மின்னனாளே.

(இ-ள்.) பூர்வ அபர பக்கமிரண்டிலும் சட்டி அட்டமி சதுர்த்தி துவாதசி நவமி அமாவாசை பூரணை ஒழித்தொழிந்த திதிகளிலே பூர்வான்னத்திலே மத்தியானத்துள்ளே நாமகன்மவிதி முடித்தல்வேண்டும் எ-று. [௧எ]

## துத்தபானம்.

சென்மாதிமுப்பத்தொன்றமைந்தநாளிற்றிகழிரண்டாஞ்சன்மத்திலநுகூலித்த, பொன்மாலோன்வெள்ளிநிறைமதியின்னோக்குப்பொருந்துதயந்திருந்துசுபமுகூர்த்தத்தங்க, ணன்மாசிலவணியுடன்மதிக்குப்பூசைநல்கிப்பாலூட்டிவைக்கநன்றேபரமிக், கன்மமதற்குரைத்தநாட்கழிந்தாலூட்டுக்கல்யாண விதிப்படியேகருதிச்செய்யே.

(இ-ள்.) பிள்ளைபிறந்த தினத்துக்கு முப்பத்தொன்றாந் தினத்திலே அல்லது சிசுவினுடைய இரண்டாவதுமுறைவரும் சென்மநக்ஷத்திரத்திலே வியாழன் புதன் சுக்கிரன் பூரணசந்தி

ரோதய நோக்குண்டாகிய சுபமுகூர்த்தத்திலே பூமி, சந்திரன் இரண்டுக்கும் பூசைசெய்துபாலாடைவைக்க. இவ்வெல்லை தவறினல் அன்னப்பிராசனத்துக்குச் சொல்லிய விதிப்படிசெய்க எ-று. [கஅ]

## தொட்டிலேற்றல்.

சாதமுதற்பதிஞறிற்பத்திராறிற்சாற்றியநாலெட்டினின்மே ஞெக்கதாக, வோதியநாளதனிலன்றிச்சரநாள்தன்னிலூர்த்துவ சரராசியையநுகூலிக்க,வேதமறுசுபதிதியிற்சுபர்வாரத்தெதமுசுபர்களவர்நோக்குண்டாகவோரை, தீதிலதாப்பொற்கால்கள்சிறக்கத்தொட்டிற்சிசுக்களேயேற்றுதற்குநன்றுதிருவன்னுயே.

(இ-ள்.) சன்மாதி க0-கஉ-கசு-௩உ என்னுந் தினங்களிலே சுப திதி வாரமும், ஊர்த்துவசர நட்சத்திரமும், ஊர்த்துவ சரராசிகளும், சுபர்நோக்கும், சுபரம்சகாலவோரைகளும் பொருந்தச் சிசுவைத் தொட்டிலேற்றலாம் எ-று. [கசு]

## கர்னவேதனம்.

ஈரெட்டிலாறிரண்டாநாளின்மாதமிருமூன்றிலிருநான்கிலேழினல்ல, பேருற்றமாதங்கள்சம்பவிக்கப்பிறைவளரும்பக்கத்துப் பகன்முற்பத்தி, னேருற்றவிருபதினுட்டிதியுநாளுநிறைந்துலவச்சுபர்பெலமுண்டாகநாட்டிக், காருற்றவிரவுடனேராசிசந்திகழித்துணர்ந்துமக்களுக்குக்காதுகுத்தே.

(இ-ள்.) சன்மாதி பன்னிரண்டாம் நாளில் அல்லது பதினறும் நாளிலாதல் சன்மமாதம் முதல் சு-எ-அ ஆனமாதங்களிற் சுபமாதங்களில் பூருவபக்கத்திற் பகல் இருபதுக்குள்ளே இரவு மிராசிசந்தியுங் கழித்துத் திதியும் நட்சத்திரமுஞ் சுபமாகச் சுபக்கிரகபெல முகூர்த்தமுண்டாகச் சிசுக்களுக்குக் கர்னவேதனஞ் செய்யவேண்டும் எ-று. [உ0]

இதுவுமது.

ஓணமிரேவதிசெங்கைகரும்பூசமுத்தரமூன்றுதிபனேயவிட்டமும்மீன், பாணியுடன்சித்திரையிந்நாளிற்கும்பம்பயிலரிதே

ளொழித்தோரையெழமாறிங்கள், சேணவிர்பொன்வெள்ளியிவ ர்வாரஞ்சாரத்திருந்துமிவர்லக்கினத்துத்திகழப்பக்கம், வாணுத லாயுவாவிருத்தைதள்ளி யெட்டாய்வருமிடமுஞ்சுத்தமுறவெண்ணங் இக்கொள்ளே.

(இ—ள்.) திருவோணம் இரேவதி திருவாதிரை புநர்பூசம் உத்தரத்திரயம் அச்சுவினி அனுஷம் அவிட்டம் மிருகசீரிடம் அத்தம் சித்திரை இந்நாட்களிலே இருத்தை பர்வம் ஒழிந்த திதிகளும், புதன் திங்கள் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங் களும், கும்பம் சிங்கம் விருச்சிகமொழிந்த இராசிகளும், அட்டம சுத்தியும்பொருந்த தெய்வவழிபாடுசெய்துகாதுகுத்துவதுஎ-று

## ஆதித்திய சந்திர கோ தரிசனம்.

நாட்டியநற்றிங்களொருமூன்றிற்சென்மநாளாதல்வாரமுத லெல்லாநல்லோ, ரூட்டுதற்குச்சொன்னபடியதனிலாதலுறுமுகூ ர்த்தத்திரவிதரிசனமுநாலாங், கோட்டமறுதிங்களினிலன்னத்தி ற்குக்குறித்தபடிநாளாதிகொண்டுதிங்கட், பூட்டியகோதரிசன மும்பண்ணனன்றுபொருவிலியநலசமுலைப்பொன்னனுளே.

[இ—ள்.] சென்மமாதம் முதல் மூன்றும் மாதத்திற் சென் மநாளிலாதல் அன்னப்பிராசனத்துக்குச் சொன்ன நட்சத்திரா திகள் எல்லாம் நிச்சயித்த சுபதினத்திலாதல் அனுகூலித்த சுபலக்கினத்திற் சிசுக்களை ஆதித்தியதரிசனமுஞ், சென்மாதி நா லா மாதத்தில் அன்னப்பிராசனத்துக்கு விதித்த சுபகாலத்தில் சந்திர பசு தரிசனமும் பண்ணுவிக்கலாம் எ—று. [உ௨]

## அன்னப்பிராசனம்.

திங்களிருமூன்றிலிருநான்கிற்பத்திற்றிறம்பெறுமாண்டொ ன்றதனிலூட்டிற்காகு, அங்கதனினூற்றெண்பதன்றிநானூற் றைம்பதெனவாகுநாட்கழியல்வேண்டுக், தங்கியவாண்பிள்ளைக்கு மாதாப்பான்மைசாற்றிரட்டியாமறுவில்பெண்ணுக்கென்னில், ம ங்கலமாமொற்றிக்கிலொன்பான்மாதமன்னியவாண்பிள்ளைக்குமதிக்கலாமே.

(இ—ள்.) சென்மாதி சு-அ-க௦—க௨-ம் மாதங்களிலும் அ ன்னம் ஊட்டலாம் அதுசெய்யுமிடத்து க௮௦ நாளாதல்

செல்லல்வேண்டுமே. விசேஷமாய் ஆணுக்கு இரட்டித்த மாதமும், பெண்ணுக்கு ஒற்றித்த மாதமும் நல்லன. ஒன்பதாமாதம் ஆணுக்கு மிகவும் நன்று எ-று. [உக]

இதுவுமது.

கரும்புகுருமதியவிட்டம்விளக்குச்செக்குக்கன்னியயப்போந்தைசசுடோணந்தோணி, திரும்புகுருகவிருமூறம்வாய்ககாலோடுசித்திரையுத்திரங்களெனச்சிறந்தநாளில், வரும்புதன்பொன்வெள்ளிசசிவாரங்கால்களுவாபக்கச்சித்திரைகடள்ளியெட்டு, விரும்புகுசன்மும்மூன்றிளைமாலேழ்வெள்ளிமேடங் தேண்மீனமிவைவிலக்குவாயே.

(இ-ள்.) புநர்பூசம் பூசம் மிருகசீரிடம் அவிட்டம் சுவாதி சதயம் அத்தம் அனுஷம் உரோகிணி திருவோணம் இரேவதி மூலம் விசாகம் மகம் சித்திரை உத்திரம்மூன்று இந்நாட்களிலே, புதன் வியாழன் சுக்கிரன் சந்திரன் இவர்கள வாராம்சகளுறப் பக்கச்சித்திரை ஒழிந்த திதிகளுஞ் சம்பவிக்கச் செவ்வாய் அ-லும், புதன் கூ-லும், வெள்ளி எ-லும் சேராதிருக்க மேடம் விருச்சிகம் மீனம் ஒழிந்த லக்கினங்களிற் கொள்ளலாம் எ-று. [உச]

## ஆண்டுநிறைவு.

வளந்தசீர்மகவினுக்குச்சௌரமாதவகையாஙீர ாறுதிங்கட்கழிந்துமற்றை, விளங்கியவாண்டினிற்சென்மமாதநாளில்வேண்டுசுபராசிகடாமனுகூலிக்கத், துளங்கியநன்னீராட்டிச்சாந்திபண்ணித்தூயநவாம்பரமரையிற்றொடுத்துச்செம்பொன், களங்கமறவமைத்தகடிசூத்திரத்தைக்கட்டிமனமகிழ்ந்திருக்கக்கழறுவாயே

(இ-ள்.) சென்ம மாதாதி சௌரமாதவகைபாற் பன்னிரண்டு மாதமுஞ் சென்று மற்றவருடத்திற் சென்ம மாத நட்சத்திரத்திலே சுபலக்கினம்பொருந்தச் சிசுவை முழுகுவித்துச் சாந்திபண்ணிக் கும்பசலம் புரோட்சித்துக் கோடிவஸ்திரமுடுத்துச் சுவர்ணத்தினாற் செய்த கடிசூத்திரந் தரித்து ஆண்டு நிறைவுபண்ணலாம் எ-று. [உரு]

## சௌளம்.

ஆண்டொன்றிலந்தத்தின்மூன்றிலேந்திணுகியமுக்கூற்றின் மேலாகுஞ்சௌளம்,*வேண்டியபெண்மகவினுக்கேழைந்தாமன் றிவிளங்கியவைந்திரட்டித்தவருடமெல்லாங், சாண்டகுமாடவர்க் காகுஞ்செம்பொனேடுகேவியிவைகளத்தமியாக்காலந்தன்னி, வீ ண்டியவுத்தராயணத்துக்காலநன்றாயிருந்திடச் சௌளச்சடங்கு க்கியம்புவாயே.

(இ—ள்.) பிள்ளைபிறந்த ஓராம்வயதின் அந்தத்திலும், மூ ன்றாம் ஐந்தாம் வருடங்களிலும், மூன்றுகூறு சென்றபின்பு சௌளம் பண்ணலாம். பெண்மகவுக்கு ரு-ம். எ—ம். வருடங் கள் உத்தமம். ஆணுக்கு ஐந்துவருடத்தின்மேல் இரட்டித்த வருடங்களுஞ் சௌளத்துக்கு ஆகுமென்பர். சௌளகாலம் குரு சுக்கிராஸ்தமயனம் இல்லாமையும், உத்தராயணமும் ஆகாயசு த்தமுமாயிருத்தல்வேண்டும் எ—று. [உசு]

இதுவுமது.

புனிதமதியவிட்டமுடனேணந்தோணிபுரவிகுருசித்திரையு ங்கரமிந்நாட்க, ளினியனதேருத்திரங்கள்விளக்குச்செக்கோடி வையுரைக்கின்மத்திமமாமோராறெட்டு, வினவியநான்கிரேழு மும்மூன்றொன்றுவிளம்பாதநாள்களிவைவேண்டாந்திங்கள், க னவியபொன்வெள்ளிபுந்திநல்வாராதிகருதுவெள்ளி°சாவபனங் கண்ணுதென்னே.

(இ—ள்.) புநர்பூசம் மிருகசீரிடம் அவிட்டம் திருவோணம் இரேவதி அச்சுவினி பூசம் சித்திரை அத்தம் இந்நாட்கள் சௌ ளத்துக்கு உத்தமமென்றும், உரோகிணி உத்தரத்திரயம் சுவா தி சதயம் மத்திமமென்றும், இவையொழிந்த நாட்களும் சட் டி அட்டமி சதுர்த்தி சதுர்த்தசி நவமி ஈருவா பிரதமை இந் தத் திதிகளும் ஆகாவென்றும், சந்திரன் வியாழன் சுக்கிரன் புதன் வாரங்கள் நல்லனவென்றும், சுக்கிரவாராஞ்சா வப ணத்துக்கு ஆகாதென்றுங் கொள்க எ-று. [உஎ]

இதுவுமது.

குளிர்மடவாடண்டுதுலைசுறுமீனேறுகூமிடிஹுத்தமமாகுஞ் சிங்கமாடு, வளைதனுத்தேளிவைபொல்லாக்கோளினற்கோண்மன்

---

* வேண்டியபெண்மகவு. என்றதனுல் சௌளம் செய்யவேண்டிய நியதியுள்ள பெண் ணுக்குமாத்திரம் இவ்விதி.

° சாவபனம்—பிரேதகருமஞ் செய்வோர்குவபனம்.

ணிலவர்நோக்குறிலாங்கும்பகல்லோர், அளவில்பெலமுண்டெ
ணினுந்தீயதாகுமட்டமத்தில்வெள்ளியொழிந்தாகார்மற்றோர், ஒ
ளியிரவிசேய்பளிங்குசனியேழ்நன்றென்றுரைத்தவிதி*அதோவ
பனமொன்றனன்றே.

(இ-ள்.) கடகம் கன்னி மிதுனம் துலாம் மகரம் மீனம் இடபம் இவை உத்தமம். சிங்கம் மேடம் தனு விருச்சிகம் இவைநாலுஞ் சௌளத்துக்கு வர்ச்சிக்கப்படும். இவற்றிற் கும்பம் சுபருதிப்பினும் நோக்கினுமாகாது. ஏனைய மூன்றுஞ் சுபருதய நோக்குண்டெனில் கொள்ளலாம். லக்கினத்துக்கு அட்டமத்திற் சுக்கிரனொழிந்தோரும், எ-ல் ஆதித்தியனும் செவ்வாயும் வெள்ளியும் சனியும் ஆகார். இதுவும் அதோவபனத்துக்குக் கொள்ளலாம் எ-று. [உஅ]

## சௌளம், கருப்ப ஸ்திரீபுருஷருக் காகாதகாலமும் மற்றையோர்க் காகுங்காலமும்.

ஆதானமுதற்சாதமந்தமாகவன்னைபிதாவிருவருக்கும்விலக்
கலாகுஞ், சூதார்ந்தமுலையாருக்கீரைந்தாகுஞ்சொல்லிடிலாட
வர்தமக்குமூவைந்தாமற், றேதாதவலியவர்க்குத்தினமாங்க
ற்பமுறிலன்னைசிசுக்கடனக்கோதார்சந்தி, யாதாந்தநிசிoகுதபகா
லமெண்ணெய்வருமுணவுபிணிபொருந்தின்மன்றெதென்னே.

[இ-ள்.] கெர்ப்பாதானம் முதலாக மகப்பிரவேசமளவும் மாதாப் பிதா வபனஞ் செய்விக்கலாகாது (அல்லாதகாலத்திலே) பெண்ணுக்குப் பத்துநாளில் ஒருநாளும், ஆணுக்குப் பதினைந்துநாளில் ஒருநாளும், அலிகட்கு அனவரதமும் வபனம்பண்ணல் நன்று. மாதாக் கருப்பவதியாயிருக்கின்ற காலத்திற் சிசுக்களுக்குச் சௌளகன்மஞ் செய்யலாகாது. சந்தியாகாலத்திலும் மாதாந்தத்திலும் நிசியினுங் குதபகாலத்திலும் தைலாப்பியங்கத்திற் பின்னும் போசனஞ்செய்தபின்னும் வியாதியானகாலத்தினும் வபனஞ்செய்யலாகாது எ-று. [உகூ]

* அதோவபனம்—காரியார்த்தமாகச் சரீரத்தின் கீழ்ப்பாகத்திற் செய்யும்வபனம், அது "கர்த்தரகண்டாதுபரிவபனம்." என்பதுபோல.

o குதபகாலம்—பகலை. கரு பாகம் செய்ததில் அவது பாகமாகிய நாழிகை. கரு க்குமேல் கசு இறுதியாயுள்ள காலம் சூரியன் பூமியைத் தபிக்கிற காலமென்பது பொருள்.

## பல்லுகிர் மயிர்வினைக்கு விசேடகாலம்.

மறையவருக்கிரவிசெவ்வாய்மன்னர்க்கிந்துமங்கையர்க்குச் சூத்திரர்க்குமந்தன்றநந்தங், கறையகற்றவுகிர்சுத்திபண்ணநன்று ங்காவல்விடிலுபதேசங்கருதினல்ல. நிறைமகுடஞ்சூடியுறுபூசைபண்ணில்நியமமுறுவிரதத்திற்சூதகத்தி, லிறையவர்பூசுரருறையினுள்வாராதியேதெனுமாங்கடிவினைகளுமிவ்வாறுமே.

(இ-ள்.) பிராமணர்க்கு ஆதித்தவாரமும், அரசர்க்குச் செவ்வாய்வாரமும், ஸ்திரீகளுக்குச் சோமவாரமும், சூத்திரர்க்குச் சனிவாரமும் பல் நகம் சுத்திபண்ணல் நன்று. சிறைவிடுங் காலத்திலும், தீக்ஷாகாலத்திலும், அபிடேககாலத்திலும், பூசாகாலத்திலும், விரதநிடமகாலத்திலும், மரணசூதகத்திலும், இராசாக்களாற் பிராமணர்களாற் பேறுபெற்றகாலத்திலும், விவாககாலத்திலும் சர்வாங்கவபனமும் தந்தசுத்தி நகச்சேதனம் முதலியனவும் திதி வாரம் நாளாதி விசாரியாமற் செய்யலாம் எ-று. [௫0]

## மனைவியின் கருப்பகாலத்திற் செய்யத் தகாதவை.

நகமறுத்தல்கடலாடல்சிராத்தமுண்டல்நண்ணுசவத்தின்பிறகோடத்தல்மேவு, மகமெடுத்தலதற்கானகருமஞ்செய்தலழுதல்பிறிதொருமணமுண்டாக்கலன்றிப், புகல்மிகுத்தநெடுந்தூரம்போகன்மேனிபொருந்துமயிர்வினைகேசம்போக்கலெல்லாம், மகிழ்வுறத்தன்மனையாள்சூல்சாரிற்செய்யவழக்கலவாயுளுங் குறுகவருமென்றாரே.

(இ-ள்.) மனையாள் கருப்பவதியாயிருக்கின்ற காலத்தில் நகச்சேதனம்பண்ணலும்சமுத்திரதீர்த்தமாடலும் சிராத்தபோசனமும் சவத்தின்பின் போதலும் கிரகாரம்பமுதலாக அதற்குரியவைகள் செய்தலும் வேறுவிவாகம் செய்தலும் தூரயாத்திரை போதலும் ரோமம் களைதலும் கேசங்களைதலும் ஆகாவாம். செய்யில் ஆயுள்குன்றும் எ-று. [௫க]

## சௌளம், இன்னகாலத்திற் செய்யிற் றீங்குவருமென்பது.

மகமைந்துமூன்றனுஷமுருடேரெட்டுவென்னியிருமூன்றுரு நான்குத்தரத்துத், தகைமைபெறுமயிரகற்றிலாண்டுநான்கிற்

சார்ந்திடுநோயாயுசுவுஞ்சமிக்குமன்றி, நிகரில்புரட்டாசியொடு மாடிமாசிநிகழ்த்துறுமார்கழியிவையினினைக்கலாகா, வகவிழியா ய்செயிற்பிதிர்களுரோமமெல்லாங்கைப்பற்றிநுகர்வரெலக் கணி ப்பர்தாமே.

(இ—ள்.) ஐந்துதரம் மகத்திலும் மூன்றுதரம் அனுஷத் திலும் எட்டுத்தரம் உரோகிணியிலும ஆறுதரம் கார்த்திகை யிலும் நாலுதரம் உத்தரத்திலும் சௌளஞ் செய்வித்தால் நா ன்குவருடத்துள் வியாதியுமுண்டாய் ஆயுளுங் குறையும். புரட் டாதி ஆடி மாசி மார்கழி இம்மாசங்களிற் கிரகஸ்தன் சௌ ளஞ்செய்விப்பின் பிதிர்கள் அவ்வுரோமங்களைப் புசிப்பர், ஆ தலால் அம்மாதம் நாலும் சௌளத்துக்கு ஆகாவாம் எ—று. ()

## மாதபலம்.

சித்திரைகைப்பொருள்வென்றிமிகும்வைகாசிதிகழானிகு லம்பெருகுமாடிநோயாம், மெத்தகிளைக்காகாவாவணிபொல்லா ங்குவிளைத்திடுமெப்புரட்டாதிதனக்கேயாகா, புத்திரக்கேடைப்பசி யில்வெந்துநாசம்பொருந்துதேழ்தனச்சிதைவாம் மார்கழிதைந ன்றும், சுத்தமறுசஞ்சலமாமாசிநன்மைசுரந்திடு பங்குனிவபன ஞ்சொல்லுங்காலே.

(இ—ள்.) சௌளம் சித்திரையிற் செய்வித்தால் கைப்பொ ருளுண்டு. வைகாசியிற் செயமுண்டு. ஆனியிற் குலம்விருத்தி. ஆடியிற் பிணி. ஆவணியிற் குலநஷ்டம். புரட்டாதியிற் றன க்கே தீது. ஐப்பசியிற் புத்திரக்கேடு. கார்த்திகை பந்துநா சம். மார்கழி தனனி, தை பலநன்மை. மாசி சஞ்சலம். பங் குனி ஆரோக்கியமுண்டாம் எ-று. [கூடு]

## கார்த்திகைவிளக்கு.

சொல்லியவாண்டோரைந்தில்மூன்றுதன்னிற்றுடங்கியதே ள்மாதத்தைம்மூன்றும்பக்கத், தெல்லியனல்லுறவோரையனுகூ லிக்கவிளங்குமரர்க்கருந்தீபமெடுக்கலாகு, மல்லதிருபக்கமுன்பி ன்னுளுடனேபாறுவமமைந்துறகின்மத்திமமாம்பறுவமின்றே, ன ல்லதன்றுமரசர்மனைசிவாலயத்துநவின்றனரேறெழவிளக்கு நல த்ததன்றே.

(இ-ள்.) சென்ம வருஷாதி சௌரமாதவகையால் மூன்றாண்டிலாதல் ஐந்தாண்டிலாதல் கார்த்திகைமாசத்துப் பூரணையுங் கார்த்திகையுங் கூடினதினத்து இரவில் சுபமுகூர்த்தத்திலே சிசுக்களுக்கு விளக்குப்பிடிக்க உத்தமம். பரணியாதல் உரோகிணியாதல் பூரணையுடன் சம்பவித்தல் மத்திமம். பூரணை கூடாதிருப்பின் அதமம். இராசகிருகத்துக்கும் சிவாலயத்துக்கும் மற்றைய புண்ணியதலங்களுக்கும் இடபமுகூர்த்தமெழத் தீபாரோகணம்பண்ணலாம் எ-று. [௩௪]

## கிருத்திகாதீபத்திற் செய்யத்தகுவன.

வேறு.

புகருறுதீமைசாரினுந்திருதிபொருந்தியசுபமதின்றெனினும்
வகையுறுகுற்றம்பிறபலவரினுமன்னுதீபோற்சவகாலத்
துகள்கயல்விழியாய்கடிவினைசாலையுட்புகலாதியாயுரைத்த
தகுசுபமெவையும்பண்ணலாமென்றுசாற்றினர்முனிவரர்தாமே.

(இ-ள்.) சுக்கிராஸ்தமனம் முதலிய தோஷமுண்டாயினும் பஞ்சாங்கசுத்தமின்றெனினும் வேறுபல குற்றஞ்சாரினும் கிருத்திகதீபாரோகண காலத்திலே விவாகம் கிரகப்பிரவேசம் ஆதியான சுபகன்மங்கள் செய்யலாமென்பது முனீஸ்வரர்களது சம்மதம் எ-று. [௩௫]

## யாத்திராவிறுதம்.

சாபமெழுகாலத்துக்கதிரோனுகச்சசிநிறைந்துபக்கதியாழ்சம்பவிக்கத், தூபமுறுங்குழலார்க்குத்தனுமாறுரைதோன்றநறு நீராடல்சொற்றார்கற்றோர், கோபமறுமனுகூல முகூர்த்தத்தூசல் கொண்டாட்டநன்றுரைத்தபக்கமின்றிப், பாபமறுநாளொன்றில்நடுவாமன்னுற்பயிலாதுபறுவமுறிற்பழிப்பதாமே.

(இ-ள்.) மார்கழிமாசத்துப் பூரணையும் திருவாதிரையும் சம்பவிக்கத் தனுவாதல் மகரமாதல் உதிக்கக் கன்னிகைகளை நீராடப்பண்ணுதல் உத்தமம், நாட் பிரதானமாகக்கொள்ளில் யாத்திராவிறுதமத்திமகெதியாம். நாளன்றிப் பறுவமே பிரதானமாகக் கொள்ளில் அதமகெதியாம். இப்படி நீராடப்பண்ணுவிப்பின் அனுகூலித்த சுபமுகூர்த்தத்திலே டோளாரோகணம் பண்ணுவித்தால் மதனப்பிரியமுஞ் சௌக்கியமுமுண்டாம் எ-று. (௩௬)

## வித்தியாரம்பம்.

வேறு.

ஐந்தாறுமாண்டதனின்நெடுங்கதிர்சேர்வெய்யோன்மைக் துறவுத்தராயணகாலத்தமையுங்கும்ப, மூந்துறநீத்தல்லாதமாத ந்தன்னில்முதற்பக்கத்திரவகற்றிப்பகற்காலத்துத், தந்திமுகற் கெட்புயமுேதனஞ்செல்பாறேன்சருக்கரைநைவேதித்துவணங்கி வாழ்த்தி, மைந்தர்களுக்கமைந்தமுதலெழுத்தாரம்பமருவுவித்து க்குருசித்தமகிழ்விப்பாயே,

(இ—ள்.) சென்மாதி ஐந்தாம்வருஷத்து உத்தராயணத்து மாசியொழிந்த மாதங்களில் பூருவபக்கத்தில் இரவொழித்துப் பகலிலே விக்கினேசுரனுக்கு எள் பயறு இவைகளையும், சுக் கிலான்னம் முதலிய வோதனங்களையும், பால் தேன் சருக்கரை இவைகளையும், நைவேதித்து நன்றாகப் பூசித்து வணங்கித் துதித்துப் பிள்ளைகளுக்கு அக்ஷராம்பம் பண்ணுவித்து உபாத்தி யாயருக்கு நவரத்தின வஸ்திரபூஷணங்கள் கொடுத்து உபசரி த்து அவரை மகிழும்படி செய்யவேண்டும் எ—று. [௩௭]

## நிலவெழுத்து.

கரமதிதிவிளக்கோணம்பெண்ணேதோணிகாமாரியைப்பசி சித்திரையிந்நாளிற், குருமதிமாலிரவிகவிவாரங்கால்கள்கூடமற் றோர்வாரமுதற்குறியாயாகித், திரமுபயமெழப்பக்கமொன்பா னெட்டுத்திகழாறீரேழுநான்கொன்றுநீக்கித், விரவியநற்றிதிக ளிஞ்ஷிரண்டேசுத்தமிருக்கநிலவெழுத்திடற்குவிளம்புவாயே.

(இ—ள்.) அத்தம் புநர்பூசம் சோதி திருவோணம் அனுஷ ம் இரேவதி திருவாதிரை அச்சுவினி சித்திரை இந்நாட்களி லே வியாழன் சந்திரன் புதன் சூரியன் சுக்கிர வாரோதயாம் சங்களும் திர உபயராசிகளும், நவமி அட்டமி சட்டி சதுர்த்தி சதுர்த்தசி பிரதமை ஒழிந்த திதிகளும் சம்பவிக்க அட்டமசுத் தியுண்டாக நில்வெழுத்தெழுதலாம் எ-று. [௩௮]

## சகலகலாரம்பம்.

சோதிகரும்போணமுருடேர்போர்பூதஞ்சொற்றவிவைமல் வித்தைதொடங்கற்காகும், ஓதுகரம்பனைபூசமவிட்டம்வாசியுத்

கரங்கள்பிண்டிகண்ணைன்சோதியின்ன, வேதியர்சோதிடப்படிக்கநன்றும்நெய்மீன்வேண்டியவுத்தரமூன்றுமாசிசெங்கை, தீதறுகுலம்புரவிகன்னிகௌவைசெப்புகுருமருத்திவையிற்சிற்பந்தேரே

(இ—ள்.) சோதி புநர்பூசம் திருவோணம் உரோகிணி சதயம் பரணி மல் வித்தியாரம்பத்துக்கும். அத்தம் அனுஷம் பூசம் அவிட்டம் அச்சுவினி உத்தரத்திரயம் புநர்பூசம் பூசம் திருவோணம சோதி இவைகள் சோதிடவித்தியாரம்பத்துக்கும். சித்திரை உத்தரத்திரயம் மகம் திருவாதிரை இரேவதி அச்சுவினி அத்தம் ஆயிலியம் பூசம்சோதி இவைகள் சிற்பசாத்திராரம்பததுக்கும் நன்றும் எ-று. [ருகூ]

இதுவுமது.

சாற்றுகுருகரம்பிண்டிதயங்குசேர்திசௌமியன்பொன்வாராதிசத்தநூற்காங், தோற்றியவாவணிநவ்விபூசம்பெண்ணேசுரேசனுள்போர்நாவாய்மூன்றுத்தரங்கள், வேற்றுமைசேர்நடனகலையெவைக்குமாகுமிக்கபுதஸ்வாராதிவிட்டமத்த, மாற்றில்பணிகேட்டைகுருகுன்றுதோணிவாத்தியகீதந்தொடங்கமதிக்கலாமே.

(இ—ள்.) பூசம் அத்தம் புநர்பூசம் சோதி இட்நாட்களும் புதன் வியாழன் வாரோதய லக்கினங்களும் பொருந்தச் சப்த சாத்திரமாரம்பிக்கவும், அவிட்டம் அத்தம் பூசம் அனுஷம் கேட்டை சதயம் இரேவதி உத்தரத்திரயம் இந்நாட்களில் நடனகலை ஆரம்பிக்கவும் புதன்வாரமும் திரராசிகளும் அவிட்டம் அத்தம் அனுஷம் கேட்டை பூசம் சதயம் இரேவதி இந்நாட்களும் வாத்தியகீதகலை ஆரம்பிக்கவும் நன்றும் எ—று. [சo]

இதுவுமது.

பிண்டிகரம்பவனமுடனோணந்தோணிபிறழ்செங்கைசித்திரையாய்ப்பேசுநாளிற், றண்டருமம்புலியுதயங்கால்களாதிசாற்றியவர்கடகலைகடரிக்கலாகும், பண்டையரனடுப்பரவங்குன்றுகேட்டைபண்ணியமுப்பூரமொடுகுருநகின்னாளு, மெண்டருமண்சேய்வாரமாதியாவுமிஞ்சந்தனவாங்கொடியவிஞ்சையியற்றுங்காலே.

(இ—ள்.) புநர்பூசம் அத்தம் சோதி திருவோணம் இரேவதி திருவாதிரை சித்திரை இந்நாட்களும் சந்திரவாரோதயா

ம்ச ராசிகளும் பொருந்த வைத்திய நூல் ஆரம்பிக்கலாம். திருவாதிரை பரணி ஆயிலியம் சதையம் கேட்டை முப்பூரம் மூலம் இந்நாட்களும் அங்காரவாரோதயாம்ச ராசிகளும் பொருந்த உக்கிர வித்தியாரம்பஞ் செய்யலாம் எ-று. [௪௧]

## சாரதாயோகம்.

வேறு.

நவ்விநாற்பதமவற்றுண்மால்பெறுபதகயந்த
செவ்விமாலவன்வாரமதுறவதிற்றிருமால்
கௌவைதீர்மதியுடனெழிலன்னதுகல்விக்
கெவ்வநீங்கிய§சாரதயோகமாமென்னே.

(இ-ள்.) அத்தம் நாலாம்பாதத்திலும், புதனம்சமாகிய மூன்றும்பாதத்திலும் புதன் நிற்பப், புதவாரமும் கூடக் கன்னிலக்கினத்திலே புதனுஞ் சந்திரனுங் கூட நிற்கில் அஃது சாரதயோகமென்னும் பெயராம். அதிலாரம்பித்த வித்தை அதிக விருத்தியாகும் உ-று. [௪௨]

## உபநயனம்.

மன்னுவேதியர்க்காண்டிருநான்குடன்வசந்த
முன்னுமன்னர்க்குமற்றதனோடுபன்னொன்று
மன்னுவைசியர்க்கிரண்டொடுசரமழகா
மின்னலெண்ணிரண்டிருபதோடையந்தினெழிலே.

(இ-ள்.) வேதியர்க்குக் கருப்பவாண்டாதி எட்டாம் ஆண்டிலும் வசந்தருதுவிலும், க்ஷத்திரியர்க்குப் பதினோராம் ஆண்டிலும் கிரீஷ்மருதுவிலும், வைசியர்க்குப் பன்னிரண்டாம் ஆண்டிலும் சரருதுவிலும், உபநயனங்கொள்வது. வேதியருக்குப் பதினாறுக்குமேலும் க்ஷத்திரியருக்கு இருபதுக்குமேலும் வைசியருக்கு இருபத்தைந்துக்குமேலும் கொள்ளலாகாது, இவற்றுள் கொள்ளவேண்டும் எ-று. [௪௩]

இதுவுமது.

நாட்டுமூவர்க்குமுத்தராயணமதுநன்று
மீட்டுமச்சிசுவிராசிகட்கிரண்டிலேந்தேழிற்

§ சாரதா — சரசுவதி.

கோட்டுமொன்பதிற்பன்னொன்றிற்குருநிற்கவென்று
காட்டினருபநயனத்துக்கருமறைகற்றோர்.

(இ-ள்.) முன்சொன்னவிதமன்றி மூவர்க்கும் உத்தராயண முத்தமம். குமாரனுடைய ஜென்ம சந்திர லக்கினங்கட்கு ௨-ல். ௫-ல். ௭-ல். ௯-ல். ௧௧-ல். குரு நிற்குங்காலம் உபநயனம்பண்ணவேண்டும். ஒழிந்தவிடங்களி னிற்பின் அக்காலமாகாது எ-று.

## உபநயனத்துக்குக் கோசரதோஷ நிவாரணம்.

ஆட்சியோடுநல்லுச்சத்தின்மித்திரரகத்தி
லேட்சியாகியமூலத்திரிகோணத்திலிலங்கும்
கோட்சிறந்தவக்குருநிற்பிற்குருவின்கோசரங்கள்
தாட்சியெய்தினுநன்றெனச்சாற்றினர்தக்கோர்.

(இ-ள்.) பிரகஸ்பதி ஆட்சியிலேனும் உச்சத்திலேனும் நட்பிலேனும் மூலத் திரிகோணத்திலேனும் நின்றால் பிரகஸ்பதி கோசரம் பிழைக்கினும் உபநயனம் செய்யலாம் எ-று. [௬௫]

## உபநயனத்துக்குக்கு வேதாதிபதிக்கிரகங்கள்.

இருக்காதியநான்கிற்குமதிபதியிசைப்பின்
குருச்சிறந்தவக்கவிபுதன்சனியென்க்கொள்க
தரிக்குமிம்மறையோர்க்கிவர்கண்டங்களுறினும்
புரக்கலாமன்றிவாரமுமாமெனப்புகலே.

(இ-ள்.) இருக்குவேதத்திற்கு அதிபதி வியாழன். யசுருக்கு அதிபதி சுக்கிரன். சாமத்துக்கு அதிபதி புதன், அதர்வணத்துக்கு அதிபதி சனியாதலால் அவ்வச்சாயைகளை யுடையார்க்கு அவ்வக்கிரகங்கள் கேந்திரத்துறினும் அவரவர் வாரமுறினும் உபநயனம் செய்யலாம் எ-று. [௬௬]

## உபநயனத்துக்குக் காலம்.

### வேறு.

சுத்தவேதியன்றன்னொடுசுக்கிரனிவர்க
ளத்தமின்றியேயம்பரத்தொளிர்வுறுங்காலம்
வைத்தவெண்சுதைக்கதிர்மதிபெலமுறவானம்
நத்தநீங்கிடப்பகறனிலிருபதுநன்றே.

[இ-ள்.] வியாழன் வெள்ளி இருவரும் அஸ்தமயனமடையாது பிரகாசிக்க சந்திரன் பெலமேற ஆகாயம் நிர்மலமாக நற்தினத்திற் பூருவான்னத்திலும் [முகூர்த்தம் விசேஷமாயின்] பகல் ௨௦ நாழிகைவரையும் உபநயனம் செய்யலாம் எ-று. [௪௭]

## உபநயனத்துக்கு நாளாதியன.

புரவிமான் றலைபுட்பணிசித்திரைபூசங்
கரமிரேவதிகண்ணன்மூன்றுத்தரங்கரும்போ
டுரையுரோகிணிசோதியிந்நாட்களுமுயர்மால்
குருவிருங்கவிவாரமுங்கால்களுங்கொள்ளே.

(இ-ள்.) அச்சுவினி மிருகசீரிடம் அவிட்டம் அனுஷம் சித்திரை பூசம் அத்தம் இரேவதி உத்தரத்திரயம் திருவோணம் புனர்பூசம் உரோகிணி சோதி இந்நாட்களிலும், புதன் வியாழன் சுக்கிரன் வாரோதயாம்சங்களிலும் செய்யலாம் எ-று. [௪௮]

## மௌஞ்சிபந்தனம்.

திங்கள்வெய்யவன்வாரங்கண்மத்திமஞ்சிறந்த
வங்கண்மாமதியுதயவம்சங்களுமன்ன
தங்குமட்டமியிருத்தைகளுவாவிவைதவிர்ந்து
மங்கலம்பெறுதிதிகளினூலிடல்வழக்கே.

(இ-ள்.) சோம சூரிய வாரங்கள் மத்திமம். சந்திரோதயாம்சங்களும் மத்திமம். திதிகளில் அட்டமி இருத்தை பூரணை அமாவாசை ஒழிந்த சுபதிதிகளிலும் மௌஞ்சிபந்தனத்துடன் உபநயனஞ் செய்யலாம் எ-று. [௪௯]

## உபநயனத்துக்கு ராசியாதிகள்.

பூசனுதிபன்சனியுறைராசிகள்பொல்லா
மாசிலேறுவிற்குளிர்துலைதண்டுமீன்மங்கை
பேசிவ்வோரையிலட்டமஞ்சுத்தியேபெறநாட்
டேசுமேவியவிராசிகள்பொருந்திடச்செய்யே.

(இ-ள்.) இடபம் தனு கர்க்கடம் துலாம் மிதுனம் மீனம் கன்னி இவ்விராசிகளில், ஆதித்தியன் சனி அங்காரக வாரோதயங்களை வர்ச்சித்து அட்டமசுத்தம்பெற்ற ராசியும் நாளும் அநுகூலிக்க உபநயனஞ்செய்வதே முறையாம் எ-று. [௫0]

## உபாகன்மம்.

### வேறு.

ஆவணியாதியிரண்டினுமாடியாதியாயந்தமேமுரசாய்த்
தாவினுளெவையும்பூரணதிதியுஞ்சாரினன்றத்தமைந்துடனே
மேவினுமாதமிரண்டினுநன்றாமிக்கவருரையுமீதன்றிக்
காவியங்கண்ணாய்சூத்திரத்தியல்புங்கண்டுபாகன்மநீகருதே.

(இ-ள்.) சாந்திரமாந ஆவணி புரட்டாதி இரண்டுமாதத்திலும் உத்தராடம் முதல் உத்திரட்டாதி அந்தமான நாட்களும், பூரணையுஞ் சம்பவிக்கினும் இந்த இரண்டு மாதத்தினுள் அத்தமும் பஞ்சமியுங் கூடினும் உபாகன்மத்துக் காகுமென்று மேலோர் சொற்றனர். அவரவர் சூத்திரங்களிற் சொன்னபடியே கொள்ளலாமென் றறிக எ-று. [௫௧]

### இதுவுமது.

ஆவணியோணம்பூரணையவிட்டமானிமாலத்திதிபுரட்டை,
மேவியமாயன்முரசுபூரணையுமிளிர்கரஞ்சோணையாம்புதனிற், சேவணிதுவசன்சிங்கையெங்கோமான்செயசெகராசசேகரமன்,பூவணிபுகழான்பயில்சதுர்மறைக்குப் பொருந்துபாகன்மமாம்பொன்னே.

(இ-ள்.) சூத்திரங்களிற் சொன்னபடியாவன, சுத்த ஆவணிமாதத்தில் திருவோணமும். பூரணையும் உத்தராடமும் திருவோணமும் அவிட்டமும். பூரணையும் திருவோணமும் பூரட்டாதியும் உத்தரட்டாதியும். பூரணையும் அவிட்டமும் அத்தமும் திருவோணமும் புதன்கிழமையும், இவ்விதம் நிரனிறையே சிங்கையூரிலிருக்கின்ற செகராசசேகரன் பயிலும் இருக்காதிவேதங்களுக்குரிய உபாகன்மம்புரிவது எ-று. [௫௨]

## வேதாரம்பம்.

அத்தமைப்பசிபணிவிளக்கரியரனறைதருமான்றலைபூசம்,வைத்தசித்திரைபுநர்தமென்றின்னவைமதித்திடினுத்தம முருடே,

ருத்திரங்கண்மூன்றிரேவதிமத்திமமுவாவிரண்டட்டமியிருத்தை,
கைத்தலசத்தமியொடுபதின்மூன்றிவை கழிவெனக் கனங்குழை
காணே.

(இ—ள்.) அத்தம் அசுவதி அனுஷம் சோதி திருவோணம் திருவாதிரை மிருகசீரிடம் பூசம் சித்திரை புநர்பூசம் இப்பத்துநாளும், பிரதமை துதியை திருதியை பஞ்சமி சட்டி தசமி ஏகாதசி துவாதசி இந்தத் திதிகளும் உத்தமம். உரோகிணி உத்தரத்திரயம் ரேவதி இந்நாட்களும் மத்திமம். சத்தமி திரயோதசி இவைகளும், பூரணை அமாவாசை அட்டமி இருத்தைகளும் வேதாரம்பத்துக்கு ஆகா. எ—று. [ருங]

இதுவுமது.

புந்திவெள்ளிபொன்வாரங்களாதிகள்புகன்றிடிலுத்தமமிரவி
சந்திரன்பெறுவாரமதாதிகள்சாற்றிடில்மத்திமந்தானு
நந்தலின்றியவிராசியிலுபயங்கணன்றுமத்திமஞ்சரராசி
வந்தசுத்தியேழுறமறையங்கமுமறைகளும்பயில்வதுவழக்கே.

(இ—ள்.) புதன் வெள்ளி வியாழ வாரோதயாம்சங்களும் உபயராசிகளும் உத்தமம். ஆதித்தியன் சந்திரன் வாரோதயாம்சங்களும் சரராசிகளும் மத்திமம். [குசன் சனி வாரோதயாம்சங்களும் திரராசிகளும்] ஆகா. இலக்கினத்துக்கு ஏழாமிடஞ் சுத்தமுற வேத வேதாங்கங்களை யாரம்பிக்கவேண்டும் எ-று. [ ]

## வேதாங்கமிவையென்பது.

சந்தசாத்திரங்காலுசிசாற்றியசிட்சைநாசிநாட்ட
முந்துசோதிடமாய்ச்சொற்றமுதுமொழிப்பனுவல்கன்னம்
புந்திசெய்நிருத்தங்கற்பம்புன்கையானனமுன்பெற்ற
வந்தமில்சத்தநூலிவ்வாறும்வேதாங்கமாமால்.

(இ—ள்.) சந்தோவிசிதி கால். சிக்ஷை நாசி. சோதிடங் கண். நிருத்தங் காது. கற்பங் கை. வியாகரணம் - வாக்கு. இவ்வாறும் வேதபுருஷனுடைய சடாங்கமாகையால் இவைகளையும் வேதாரம்பத்துக்குச் சொன்னபடியே கொள்ளவேண்டும் எ—று. [ருரு]

## அநத்தியயனம்.

வேறு.

ஆகுமைப்பசிசித்திரைப்பிறப்பினையறிந்தவர்விஷுவெனவ றைவர், ஏகுமிவ்விஷுமுன்பினுங்கடிகைகளெண்ணிரண்டவை யிரண்டயனப், பாகுபட்டதையாடியிப்பிறப்பினிற்பயின்முன்பி னாலேந்துகடிகை, தோகையட்டமியுவாக்களுஞ்சந்தியுந்தொன்ம றையோதுகிற்றுகளே.

(இ—ள்.) ஐப்பசி சித்திரை இவ்விரண்டுமாத சங்கிரமங்க ளையும் விஷுக்களென்பர். இவைகட்கு முன்னும் பின்னும் ப தினாறுநாழிகையும் அயனமிரண்டிற்கு முன்னும் பின்னும் இரு பதுநாழிகையும் அட்டமி பூரணை அமாவாசைகளும் மூன்றுசந்தி யாகாலங்களும் வேதாத்தியயனத்துக்கு வர்ச்சிக்கப்படும் எ-று.

இதுவுமது.

ஒன்றுமேழிருபக்கமுந்திரயோதசியுடனுறுநிசிமுகமும்
அன்றிவானகமுழங்கியகாலமுமழலிடிவிழுந்தவப்பொழுதும்
நன்றலாதவுற்பாதமாநாளினுநற்குருயோகிகளரசர் [பொன்னே.
பொன்றுநாளினும்வேதவேதாந்தங்கள்புகன்றிடாரறிந்தவர்

(இ—ள்.) பிரதமை சதுர்த்தசிகளினும் திரயோதசிகூடிய பிரதோஷ நிசிப்பிரதம சாமத்தினும் மேககோஷத்தினும் இடி விழும்பொழுதும் உற்பாதங்கள்தோன்றின நாளினும் குரு யோ கி யரசர் மரித்தகாலத்தும் வேத வேதாங்கங்களை அறிந்தோர் அத்தியயனஞ் செய்யார் எ—று. [௫௭]

மைந்தர்வினைப்படலம் முற்றிற்று.

ஆ விருத்தம் ௬௩.

---

## மணவினைப்படலம்.

முறையினேதியமணவினைசெயினதன்முன்பதாய்மறைபுக ல்விரதம், குறைவதின்றியேசெய்வதுவிதியெனக்குலவலாற்சது ர்விதவிரதம், நிறைவதாகவேயமைந்தபின்பூசுரர்நிகரில்கோவது போக்கி, விறையில்சுத்தனுமிதற்குநாளாதிகளியம்பியமயிர்வினை யிடத்தே.

(இ—ள்.) விவாகஞ்செய்யுமிடத்து முன்னை விரதங் கொள்ளவேண்டுமென்ற விதியால் பிராஜாபத்தியவிரதம் செளமியவிரதம் ஆக்கினேயவிரதம் வைசுவதேவவிரதம் என்னும் நான்கினையும் முன் கொண்டு அவற்றிற் கனந்தமாகக் கோதானம்பண்ணிச் சரீரசெளக்கியஞ் செய்தல்வேண்டும் இதற்கு நாளாதிகள் செளளத்துக்குச் சொல்லியவைகளாம் எ-று. (௧)

## சமாவர்த்தனம்.

வேறு.

கூலமோணமுருடேர்கரும்புமதிசுரர்குருக்களிறுசொற்றநற்
றுலமேவுதிரியுத்தரங்களிவைதம்மில்வெள்ளிகுருவாதவன்
மாலவன்சசியிவ்வாரமாதியில்மதித்தவட்டமியுவாக்களோ
டேலவொன்றுடனிருத்தைதள்ளிமுதலிருபதிற்பகலிசைந்திடே

(இ—ள்.) ரேவதி திருவோணம் ரோகிணி புநர்பூசம் மிருகசீரிடம் பூசம் அத்தம் அனுஷம் உத்தராத்திரயம் இந்நாட்களிலே சுக்கிரன் வியாழன் சூரியன் புதன் சந்திர வாரோதயாம்சங்களில் அட்டமி யுவா இருத்தைகள் நீக்கிப் பகல் ௨௦ நாழிகைக்குள்ளாகச் சமாவர்த்தனஞ் செய்யவேண்டும் எ—ம். ()

இதுவுமது.

கத்துமேறு துலைஞெண்டுமீனமொடுகன்னிகும்பமுனிதண்டுமான்
சுத்தமாமிவைகடம்மில்மேடமரிதுய்யதேளிவைகடள்ளியே
நத்தமானமதுவன்றியெட்டிடமமைந்தசுத்திபெறநற்சமா
வர்த்தமாவதுபுரிந்துகொள்கநெடுவானகின்மலமதிக்கவே.

(இ—ள்.) இடபம் துலாம் கடகம் மீனங் கன்னி கும்பந் தனு மிதுனம் மகரம் இந்த இலக்கினங்களிலே அட்டமசுத்தியுண்டாகக் கொள்ளவேண்டும். மேஷம் சிங்கம் விருச்சிகங்களும் இராக்காலமும் வர்ச்சித்து நற்றினத்திலே கொள்க எ—று.

## சூத்திரசமாவர்த்தனம்.

ஓதுசூத்திரர்தமக்குமிவ்விதியுரைப்பினற்றிவசமுற்றதிற்
பேதமற்றகடிமுன்புதாயதுபிறங்குநல்லறலின்மூழ்கியே
யேதமற்றவிருகோடிசுற்றிவசியேந்தியேகியெழுசூரியன் [ணுய்.
நீதின்மெய்ப்பரவுகாளிபூசையதுசெய்வதென்றுரைசெய்தேன

(இ-ள்.) சமாவர்த்தன காலத்திலே சுத்தசலத்தில் மூழ்கி இரண்டு நவவஸ்திரமுடுத்துக் கையில் வாளேந்திச் சூரியனுக்கும் பத்திரகாளிக்கும் பூசைசெய்வது எ-று. [ச]

## விவாகசம்பிரதாயமுதலியன.

மர்தர்மைந்தரிவர்சம்பிரதாயமும்வரும்பொருத்தமுநிமித்தமுமி
மோதுகோசரமுமொன்றநன்மணமதுறுதனன்றெனவிசைத்தலா
சேதுகாவலவன்விஞ்சைவிஞ்சுசெகராசசேகரன்மெய்திகழ்வதற்
கேதுவானவருமலர்முகத்தெரிவையிவ்விதிப்படியிசைத்திடே.

(இ-ள்.) ஸ்திரீ புருஷர்கள் இருவருட் சம்பிரதாயமாக ஸ்திரீக்குச் சென்மாதி பத்துவயதுக்குள் விவாகமாம். அப்பால் யோக்கிய மன்றென்றும் செய்யில் வெகுவிதசம்பிரதாய விதிகளும் அநுகூலங்களும் நிமித்தங்களும் கோசரங்களும் நன்றாக வாராய்ந்து செய்தலே முறையென்று சொல்லுகையால் பிரதம விவாகத்துக்கு இப்படி அறிந்து செய்யவேண்டும் எ-று. (ரு)

## தசப்பொருத்த அனுகூலவிதி.

தினங்கணந்தரும்கேந்திரந்திரிகடீர்க்கம்யோனியதிராசியும்,
மனங்கொளோரை யதிபதி பொருத்தமுறு வசியம்ரச்சு வொடு
வேதையென், றிவங்கொள்பத்துமனுகூலமாமுழுதுமென்னின
னமைபலவோங்குமால், கனங்கொள்பாதியெனின்மத்திமந்திகள்
கனங்குழாய்குறையிலதமமே.

(இ-ள்.) தினம் கணம் மாகேந்திரம் ஸ்திரீதீர்க்கம் யோனி ராசி ராசியதிபதி வசியம் ரச்சு வேதை என்னுந் தசப்பொருத்தமும் அநுகூலமாயில் உத்தமம். பாதியேல் மத்திமம். இதிற் குறையில் அதமம் எ-று.

இனங்கொளென்றமையால் ஜாதிமுதலிய மற்றைய கo பொருத்தமும் அனுகூலமாயிருத்தல் வேண்டுமென்பது பெற்றும். ()

## தினப்பொருத்தம்.

குலவுமங்கையர்களுள்களாதியணிகுமரனுளளவுமெண்ணி
யே, யிலகுமூன்றுபரியாயமாகிவரவெண்ணியொன்றிரெண்டுமூன்
றுமைந், துலவுமேழுபரியாயமொன்றினிலொழிக்கமற்றதினுரை
த்தகா, லலநான்றறைவைநாசநாளொழியவர்குமற்றதிலரைந்த
தே.

(இ—ள்.) ஸ்திரீநாளாதி புருஷநாளளவும் எண்ணி யொன்பதொன்பதாக மூன்றுபரியாயமாக்கி முதற்பரியாயத்தில் க-ம். ங-ம். ரு-ம். எ-ம். நாள்கள் பொருந்தா. இரண்டாம்பரியாயத்தில் முதற்சொன்ன நாள்களிற் *சில கால்கள் தள்ளிச் சேர்க்கப்படும். மூன்றும் பரியாயத்தில் வைநாசிகமாகிய அ-ம் காலுற்ற நாள் நீக்கி ஒழிந்தவை நல்லனவாம் எ-று. [எ]

ஒன்றுசென்மமதிரண்டுசெம்பதுவிபத்துமூன்றுசேமநான்கதாம்.
நன்றியைந்ததுபிரத்தியயம்பகரினண்ணுமாறுபெறுசாதக
மன்றியேழுவதமெட்டுமித்திரமதாகுமப்பரமமித்திரந் [யே.
துன்றுமொன்பதுசிறந்தபத்துவைசெய்தூயசென்மமெனமங்கை

(இ—ள்.) முன்சொன்னபடியே எண்ணிக் கண்டவற்றுள் க சென்மம். உ சம்பத்து. ங விபத்து. ச க்ஷேமம். ரு பிரத்தியக்கு. சு சாதகம். எ வதம். அ மைத்திரம். கூ பரமமைத்திரம் க0 சென்மம என்றும் மீளவும் இவ்வாறே எண்ண இப்படியடைவே மூன்று பரியாய நட்சத்திரங்களும் பெயர்களைப் பெறுவனவாம் எ-று. [அ]

## சென்மாதிபலம்.

சென்மநோய்விபத்துநாசமாம்பதிசிறப்பிலைபகர்பிரத்தியயம், சன்மவீவுவதமொன்றுநான்குதிரிகால்கடள்ளினிவைமூன்றினு,நன்மைசாருமொழிபிறவெலாமிகவுநன்றெனச்சதுர்மறைப்பொருட், டொன்மைகண்டவர்கள்சொன்னதாமிதுதுணிந்துநீயுரைசெய்தோகையே.

(இ—ள்.) முதற்பரியாயத்திற் சென்மமாகில் வியாதி, விபத்தாகில் காரியநாசம், பிரத்தியயமாகிற் றலைவன்நாசம், வதமாகில் தனச்சேதம் என்று துர்ப்பலன்களை அறிக. இரண்டாம்பரியாயத்திற் சென்மமொழித்து ஆகாத விபத்துநாளுக்கு முதற்காலும் பிரத்தியயத்துக்கு நாலாங்காலும் வதத்துக்கு மூன்றுங்காலும் தள்ளிக் கொள்ளப்படும் எ—று. [கூ]

---

* இரண்டாம் பரியாயத்தில் ங—ம் நாளின் முதற்கால், ரு—ம் நாளின் ச-ம் கால், எ-ம் நாளின் ங-ம் கால்களையே சில நாளின் கால்களென்று கூறியது.

## ஏகதின விவாகம்.

அடுப்புநீர்கரமதிந்திரன்சதையமரவிளுட்பதிமடந்தையர்க், கெடுத்தவொன்றதெனினன்றுசாலுமிவை யெண்ணிலாமகமவி ட்டநற், பிடித்தபிண்டிகுருமூலமாதிரைகள்பேசிலொன்றதுறி ன்மத்திமம், தடுத்தநாளொருபதைந்திலேகமதுசாரினன்மைக ள்சமிக்குமே.

(இ-ள்.) பரணி பூராடம் அத்தம் கேட்டை சதயம் ஆ யிலியம் இவ்வாறும் ஏகமாயின் ஸ்திரீ புருஷர்கள் இருவருக் கும் நன்மை. இந்நாட்கள் ஏகாம்சங்களாய் இருப்பினும் நன் மை. மகம் அவிட்டம் புநர்பூசம் பூசம் மூலம் திருவாதிரை இவ்வாறும் ஏகமாயின் மததிமம். ஒழிந்ததினங்கள் கடும் ஏக மாயின் அதமம் இவை ஆகாவாம் எ-று. [கo]

## ஏகவிராசி விவாகம்.

குமரன்மங்கையிவர்தங்களோரைகள்குறித்தவொன்றதெ னின்முன்னதி, னமருநாளிறைவனுளதாகிலழகரிவைநாளெனில மங்கலம், சமையுமோரைகளிரண்டுமொன்றின்மிசைசாரின்முன் பதியிராசியே, உமையுநன்சிவனுமென்னவாமொழிகவோரைநா ளுமுடனென்றினே.

(இ-ள்.) ஸ்திரீ புருஷர்களுடைய இராசிகளிரண்டும் ஒன் றுபட்டிருக்குங் காலத்து புருஷன்நாள் முன்னும் ஸ்திரீநாள் பின்னும் இருப்பிற் சுகமாம். ஸ்திரீநாள் முன்னும் புருஷநாள் பின்னும் இருப்பின் அமங்கலமாம். இவ்விருவரிராசியும் ஒரு நட்சத்திரத்திற் கூடியிருப்பின் முன் புருடராசியும் பின் ஸ்திரீ ராசியுமாயிருந்தாற் பார்வதி பரமேசுவரர்போல் வாழ் வர். முன்னே ஸ்திரீ ராசியும் பின்னே புருஷராசியுமாயிருப் பின் நாளும் இராசியும் இருவர்க்கும் ஒன்றுயிரும்பினும் தீது எ-று. (கக)

## கணம்.

பூசமோணமநுஷங்கரம்புரவிபுநர்தமிந்தனிலமந்தநா
ளேசிதெய்வகணமரவமூலமுறமிந்திரன்வருணனங்கிபுள்
மாசிசித்திரையிராக்கதக்கணமதித்தபூதமுருடேர்விளங்
கிசன்மூன்றுபெறுபூரமுத்தரமிசைத்தமானுடகணங்களே;

(இ-ள்.) பூசம் திருவோணம் அனுஷம் அத்தம் அசுவினி புநர்பூசம் மிருகசீரிடம் சோதி ரேவதி இவை தேவகணம். ஆயிலியம் மூலம் விசாகம் கேட்டை சதையம் கார்த்திகை அவிட்டம் மகம் சித்திரை இவை இராக்கதக்கணம். பரணி உரோகிணி திருவாதிரை முப்பூரம் மூன்றுத்திரம் இவை மனுஷகணம் எ-று. (கஉ)

இதுவுமது.

இருவர்தங்கணமுமொன்றியேவிடினிசைந்தவுத்தமமதும்பர்தம்
விரவுநற்கணமுமானுடக்கணமுமேவின்மத்திமமரக்கராய்
மருவுமக்கணமுமும்பர்தங்கணமுமன்னுமேலதமமனுடனு
மரியவக்கணமுநிசிசரக்கணமுமாகின்மெத்ததமமாகுமே.

(இ-ள்.) ஸ்திரீ புருஷர்கள் இருவருக்குங் கணம் ஒன்றெனின் உத்தமம். தேவகணமும் மனுடகணமுமாகின் மத்திமம். இராக்கதகணமும் தேவகணமுமாகின் அதமம். மனுடகணமும் இராக்கதகணமுமாகின் அதமாதமமாம் எ-று. [கரு]

இதுவுமது.

ஏய்ந்தமங்கையர்கணிசிசரக்கணமெனிற்சிறந்ததலமைந்தர்தம், வாய்ந்ததங்கணமிராக்கதக்கணம்வரிற்பொருத்தநலதன்றியே, தோய்ந்தமங்கையர்கணிசிசரற்குரியசொற்கணம்பெறினு நல்லவாம், வேந்தனுளதறுநான்கின்மேலெனின்விதித்தநான்மறைவிதித்ததே.

(இ-ள்.) ஸ்திரீகளுக்கு ராக்கதகணமானால் ஆகாது. புருஷருக்கு இராக்கதகணமாயின் நன்று. விசேஷித்து; ஸ்திரீநட்சத்திரத்துக்கு உச ன் மேற் புருஷநட்சத்திரம் இருந்தால் ஸ்திரீ இராக்கதகணமாயிருப்பினும் பொருத்தமுண்டாம் எ-று.

## மாகேந்திரம்.

வேறு.

பிறைநுதன்மாமடமாதர்சென்மமாகப்பிறங்கியநாளதனுக்குநான்கேழையைந், துறைபதினுறையிரண்டுதிகழ்மூவொன்பா

ளுமிருபத்திரண்டுபன்மூன்றணிபத்தொன்பா, னிறையவனுளா கின்மகேந்திரமுண்டென்றுமிவையொழிந்தவென்னின்மகேந்திர மின்றென்று, மறையொருநான்கறிந்துணர்ந்தோர்கண்டார்செவ் விமதிவதனக்கிஞ்சுகவாய்மடநல்லாயே.

(இ-ள்.) ஸ்திரீநாள் முதலாகப் புருஷனுள் அந்தமாக எண்ணிவர நாள் ச-எ-உ௫-க௬-க௦-உஎ-உ௨-க௩-கக ஆகிய நாளாக வரின் மாகேந்திரப்பொருத்தம் உண்டென்றும் அல்லது இன்றென்றும் முனிவர்கள் சொன்னார்கள் எ-று. [க௫]

## ஸ்திரீ தீர்க்கம்.

சிறந்தமதித்திருவதனச்செவ்விநவ்விச்சிஞ்சிதப்பூண்மருட முலைத்தேனனார்கள், பிறங்கியநற்சென்மநாண்முதலாய்த்தாமப் பெருஞ்சிகரக்களபபுயப்பெம்மான்சென்ம, மறந்தருநாளளவா கக்குணிக்கிற்பன்மூன்றதற்குமேற்றிரிதீர்க்கநன்றுமன்றி, நிறை ந்தவொன்பான்மேலாகினவோங்கிழாய்நிற்பிற்றிரிதீர்க்கமிலை நிக ழ்த்துங்காலே.

(இ-ள்.) ஸ்திரீநாள் முதல் புருஷனுளளவும் எண்ண பதி ன்மூன்றுக்கு மேற்படின் ஸதிரீதீர்க்கம் உத்தமம். ஒன்பதுக்கு மேற்படின் மத்திமம். அதிற் குறைந்தால் அதமம் எ-று. [க௬]

## யோனி.

மாக்களிறுமறியுடனுணரவநாகம்வருஞமலிமார்ச்சாலந்தகர் வெருகுசிகரி, யாக்கியபெண்ணெலியெருதுமேதிபுலிப்போத்தா மடர்தருபெண்புலியுடன்மான்கலைமுவெல்குரங்கு, நீக்கியமைம் மைப்பசுவேமந்திபிணாச்சிங்கநிகழ்பெட்டைப்பரியினுடனெடுமே டங்கல்சுரபி,தூக்கியகைக்கரேணுவெனப்பரிமுதலாயோனிசொ ற்றனர்நற்சோதிடநூல்கற்றபெரியோரே.

(இ-ள்.) அசுபதிக்கு குதிரை, பரணிக்கு யானை, கார்த்தி கைக்கு ஆடு, உரோகணிக்கு ஆண்சர்ப்பம், மிருகசீரிடத்துக்கு பெண்சர்ப்பம, திருவாதிரைக்கு ஆண்நாய், புநர்பூசத்துக்கு பெண்பூனை, பூசத்துக்கு கடா, ஆயிலியத்துக்கு ஆண்பூனை, மகத்துக்கு ஆணெலி, பூரத்துக்கு பெண்ணெலி, உத்தரத்துக்கு

இடபம், அத்தத்துக்கு பெண்ணெருமை, சித்திரைக்கு புலி, சுவாதித்கு கடா, விசாகத்துக்கு பெண்புலி, அனுஷத்துக்கு பெண்மான், கேட்டைக்கு ஆண்மான், மூலத்துக்கு பெண்ணாய், பூராடத்துக்கு ஆண்குரங்கு, உத்தராடத்துக்கு மலட்டுப்பசு, திருவோணத்துக்கு பெண்குரங்கு, அவிட்டத்துக்கு பெண்சிங்கம், சதையத்துக்கு பெண்குதிரை, பூரட்டாதிக்கு ஆண்சிங்கம், உத்தரட்டாதிக்கு பசு, ரேவதிக்கு பெண்யானை, இப்படிச் சோதிடநூலை நன்குணர்ந்த பெரியோர்கள் சொல்லினர். எ-று. (கஎ)

இதுவுமது.

மடவரலாடவர்களாமிருவோருக்குமன்னியவொன்றுகினன்றுபின்னயோனி, நடுவைரமெனிலதமமாகுமீதுநவிலுங்காற்பசுபுலிதோல்சிங்கம்வாசி, யடுமெகிடமாடுகவிபூனையாகுவரிணநாயாமிவைகளைத்துமிச்சொற், படியிடத்தாடவர்மடவாரிவர்கண் மன்னர்பயிலெருழிலோர்க்குப்பொருந்தப்பார்த்துக்கொள்ளே.

(இ-ள்.) ஸ்திரீ புருஷர் இருவர்க்கும் ஏகயோனியாயின் உத்தமம். பின்னயோனியாயின் மத்திமம். விருத்தயோனியாயின் அதமம். அவையாவன பசு புலி யானை சிங்கம் குதிரை எருமை ஆடு குரங்கு பூனை எலி நாய் மான் என்பவைகளாம். இந்தவிருத்தயோனி ஸ்திரீ புருஷருக்கு ஆகா. ராசசேவையுடையோர்க்கு விசேஷித்துத் தவிர்க்கப்படும் எ-று. [கஅ]

இராசி

மதிமுகத்தாரோரைமுதல்மைந்தரோரைவரவெண்ணுந்தொகைமிகுந்துமைந்தர்தங்கள், புதுமையுற்றவோரைமுதல்மடவரோரைபுகவெண்ணுந்தொகைகுறைந்துவருகிலோரை, முதுமைபெற்றவனுகூலநன்றுமென்று மொழிந்தனர்க ளிருதொகையுஞ் சமமேயாகிற், கதுமையுற்றோர்நன்றெனவேகண்டார்செம்பொற்கனங்குழையாயிவ்விதியுங்கருதுவாயே.

[இ-ள்] ஸ்திரீராசிமுதற் புருஷராசிவரை எண்ணினதொகை மிகுந்து, புருஷராசிமுதல் ஸ்திரீராசிவரை எண்ணின தொகை குறைந்துவரினும், இருதொகையு மொத்திருக்கினும் இராசி அனுகூலம் நன்றும் எ-று [கக]

## இராசியதிபதி.

தரணிமகன்வெள்ளிபுதனிந்துவெய்யோன்சசிபுதல்வன்கவி சேய்பொன்மந்தன்காரி, குருவெனமேடாதியதிபதியாமென்றே குறித்தனர்நற்சோதிடநூல்குறித்தநல்லோர்,பரிமுதலாங்காரொடுங்கியொருநூற்றெட்டாம் பதங்களு மிவ்வாறின்மை பகர்மின் செவ்விக், கருநெடுங்கட்சிஞ்சிதப்பூணிணைப்பொற்கொங்கைக்க மழளகப்பவளவிதழ்க்கனிவாய்மாதே.

(இ-ள்.) செவ்வாய் சுக்கிரன் புதன் சந்திரன் ஆதித்தன் புதன் சுக்கிரன் குசன் வியாழன் மந்தன் சனி குருவென்போர் மேடாதி மீனந்தமாகிய ராசிகளுக்கதிபதிகளாம். அச்சுவினியின் பிரதமபாதம் முதல் ரேவதியின் அந்திய பாதமளவாகப் பாதம் க0அ க்கு மிவ்வடைவே அதிபதிகளை அறியவேண்டுமென்று சோதிடத்தை அறிந்த மகான்கள் சொன்னார்கள் எ-று. [உ0]

## சத்துரு மித்துரு உதாசீனம்.

வெய்யவற்குச்சனிவெள்ளிபகைவர்புந்திவிளம்புசமனொழிந்தோர்மித்திரராந்திங்கட், கையமறுகதிரவன்மாலோனுமாரல்லாரறைசமர்சேய்க்காதபன்பொன்றிங்களன்போர், துய்யபுதன்பகைவனல்லோர்சமராமாற்குச் சூரியன்காவியன்சிறந்தோர்பகைஞன்றிங்கள், பொய்யிலொழிந்தோர்சமரந்தணற்குவெய்யோன்புகர்மாலாகார்மந்தன் சமனப்போக்கே.

(இ-ள்.)ஆதித்தியனுக்குச் சனியும் வெள்ளியும் சத்துரு புதன் உதாசீனன் ஒழிந்தோர் மித்திரர். சந்திரனுக்குச் சூரியனும் புதனும் மித்திரர் அல்லாதவர் உதாசீனர். செவ்வாய்க்குச் சூரியனும் வியாழனும் சந்திரனும் மித்திரர் புதன் சத்துரு மற்றுள்ளோர் உதாசீனர். புதனுக்கு ஆதித்தனும் வெள்ளியும் மித்திரர் சந்திரன் சத்துரு ஒழிந்தோர் உதாசீனர். வியாழனுக்குச் சூரியனும் சுக்கிரனும் புதனும் சத்துருக்கள் சனி உதாசீனன் எ-று. உதாசீனம் - விருப்புவெறுப்பின்மை. [உக]

## இதுவுமது.

அல்லார்மித்திரராகுமருப்புகருக்கந்தணளல்லவனிமைந்தன், சொல்லாய்சமரிரவிமைந்தன்மால் மித்திரராங் துலங்கு மற்றோர், பொல்லாதபகைவர்சனிக்கிந்துமகன்புகர்சிறந்தோர்சமனுஞ்செம் பொ, னல்லார்களவரொழிந்தாரெனமொழிந்தார்வதனமதிநய னவேலாய்.

(இ—ள்.) முன்சொன்ன வியாழனுக்கு ஒழிந்தோர் மித்திரர். சுக்கிரனுக்கு வியாழனுஞ் சனியும் செவ்வாயும் உதாசி னர் சனியும் புதனும் மித்திரர் ஒழிந்தோர் சத்துருக்கள். சனிக்குப் புதனும் சுக்கிரனும் மித்திரர் பிரகஸ்பதி யுதாசீனன் ஒழிந்தோர் சத்துருக்கள் எ—று. [உஉ]

## இதுவுமது.

அவரவர்பாதந்திரிகோணவகந்தொடங்கியாட்சியளவடை வேயெண்ணிற், கவையுறுமொன்றிரண்டைந்துமும்மூன்றீராறெ ட்டுக்கருதுநான்கென், றிவைபெறினுமுச்சமதாயினுமித்திரரா மீதில்லாவெண்ணேல், நவையுறுவெம்பகைசமருமிவ்வகையேகு றித்தறிந்துநவிலுவாயே.

(இ—ள்.) விசேஷித்துச் சத்துரு மித்துரு உதாசீனஞ்சொ ன்னபடி கிரகங்களுடைய திரிகோண ராசிதொடங்கிச் சத்துரு மித்துரு உதாசீனம் அறியவேண்டும். கிரகத்தினுடைய ஆட் சியளவாய் எண்ணினால் அத்தொகை க-உ-ரு-கூ-கஉ-அ-ச என்ற தொகையுடனே கூடுகினும் திரிகோணராசிக் கதிபதியுடை ய உச்சமாயிருப்பினும் மித்திரராம் கூடாதிருந்தாற் சத்துரு வாம் ஓரிடத்திலே கூடி ஓரிராசியிற் கூடாதிருப்பின் உதாசீன ராம் எ-று. [உங]

## தற்கால சத்துரு மித்துரு உதாசீனம் அறிய.

தற்காலமித்திரராம்பதினொன்றினன்கிலேந்திற்சாரும்பத்தி ற், சொற்காகுமிரண்டாறிலொருமூன்றிலிரண்டிலரிசொல்லுங் காலே, நிற்பாகுமாறேழெட்டொன்றொன்பான்வான்பகைஞர்நி கர்பொன்வெள்ளி, யற்காலமதிபுந்திகதிர்மந்தன்சேய்சனியெ ன்றறிவாயன்றே.

(இ-ள்.) ஒருகிரகம் நிற்கும் இராசிக்கு கக-ச-ரு-க0-கஉ-ரு-உ என்கிற ராசிகளிலே நிற்குங் கிரகங்கள் தற்கால மித்திரராம். கூ-எ-அ-க-கூ இவ்விடங்களிலே நிற்போர் தற்காலசத்துருவாம். வியாழனும் சுக்கிரனும், சந்திரனும் புதனும், ஆதித்தனும் சனியும், செவ்வாயும் மந்தனும் பகைஞராம் எ-று. [உச]

இதுவுமது.

கூட்டிருவோரைகளுக்கதிபர்வெகுமித்திரரேற்குணமாமன்றி, நாட்டியமித்திரர்சமரேனடுவதமஞ்சமராகினயந்தோர்தாமுமீட்டியவெம்பகைஞருமேற்சண்டைசமசத்துருவேலிறத்தல்பொல்லா, வோட்டியவான்பகைஞரெனின்மரணமெனக்கவிஞரறிந்துரைத்தவாறே.

(இ-ள்.) ஸதிரீ புருஷர்களுடைய ராசிகளுக் கதிபதிகள் மித்திரராகில் வெகுசோபனம். மித்திரனு முதாசினனுமாயின் மத்திமம். இருவரு முதாசினராயின் அதமம். மித்திரனுஞ் சத்துருவுமாயின் கலகம். உதாசினனுஞ் சத்துருவுமாயின் வெகு தோஷமுண்டு. இருவருஞ் சத்துருவாயிருப்பின் மரணம் எ-று.

வசியம்.

தகர்க்குத்தேளரிநண்டுதுலையேற்றுக்கரிவையதுதடிக்குச்சாப, மிகைக்குந்தேணண்டினுக்குத்துலையரிக்குத்தண்டுகயல்மின்னுக்கெண்மான், மகட்பெயர்கோலுக்குக்கழிக்குத்துலைகடகமீன்சிலைக்குவருடைகும்ப, மிகட்பில்கலைக்காடுகுடத்துக்கொண்டையரிணமதுமீனத்துக்கியம்புங்காலே.


(இ-ள்.) மேடத்துக்கு விருச்சிகமுஞ் சிங்கமும், இடபத்துக்குக் கடகமுந் துலாமும், மிதுனத்துக்குக் கன்னியும், கடகத்துக்குத் தனுவும் விருச்சிகமும், சிங்கத்துக்குத் துலாமும், கன்னிக்கு மிதுனமும் மீனமும், துலாத்துக்கு மகரமுங் கன்னியும், விருச்சிகத்துக்குத் துலாமுங் கடகமும், தனுவுக்கு மீனமும், மகரத்துக்கு மேடமுங் கும்பமும், கும்பத்துக்கு மேடமும், மீனத்துக்கு மகரமும் வசியமாம். அல்லாதவை ஆகாவாம் எ-று. [உரு]

## இரச்சு.

நல்லிலிங்காகிருதிமூன்றுபொறித்துமீதுநான்குவரைதீட்டிக் கிழிடவந்தத்துப், புல்லியகோட்டத்திரலையைப்படுத்துநாவாய்பு குமளவும்வலமாகப்பொருத்திற்றேர்ந்தோர், சொல்லியரச்சுச்ச க்கரமாமிருவர்நாளுந்துலங்கியகிறென்றுகிலாகாவேறின், மெ ல்லியலாய்சோபனமாமிறங்கிற்றீதாமேல்கீழ்நோக்குறிலிரச்சுமி கவுநன்றே.

(இ-ள்.) கிழக்குமுகமாக இருந்து இலிங்காகிருதியாக மூ ன்று வரையிட்டு அதிலே தெற்கு வடக்காக நாலிரேகைகீறி அதிலிடப்பாகவந்தத்து மூலையில் அச்சுவினியை நிறுத்திப் பிர தக்கிணமாக உஎ நாட்களையும் எண்ணுவது இரச்சுச்சக்கர மாம். இதில் ஸ்திரீ புருஷநாள் இரண்டும் ஒருரேகையில் வரில் ஆகாது. ஆரோகணரச்சுவாகில் தீர்க்கவாழ்வு. அவரோ கணரச்சுவாகில் திருவுக்காகாது. ஆரோகணரச்சுவும் அவரோ கணரச்சுவுமாக மாறியிருப்பின் மிக நன்மையாம் எ-று. [உஎ]

## இரச்சுச் சக்கரம்.




## ஏகரேகாரச்சுபலம்.

வேறு.

பத்துறுவரையிலொன்றிடிற்றணப்பாம்பயிலியலூருவிலொ ன்றிற், றிதப்படுதனக்கேடரைவயினென்றிற்சிறப்புடைமகச்சி தைவாகு, மதிப்புறுகழுத்துவரையிடையொன்றின்மன்னியகாந் தனுக்கழிவு, கதித்தலச்சிரத்தினொன்றிடின்மரிப்பர்காந்தனுங்க ன்னியுங்காணே.

(இ-ள்.) ஸ்திரீ புருஷர் இருவர்நாட்களும் பாதரேகையில் வரின் பிரிவு. தொடைரேகையில் வரில் திரவிய ஆனி. உதர

ரேகையில் வரில் புத்திரானி. கழுத்திரேகையில் வரிற் பத்தாபரணம். சிரரேகையில்வரில் இருவர்க்கும் ஆகாவாம் எ-று. [உ-அ]

## வேதை.

ஆதியுமொளியும்பூதமும்பனையுமறைதருமரனுமுறமும்
வேதனும்விளக்குமீசனுமானும்புநர்தமும்விச்சுவநாளும்
ஓதியகுருவுமுரைசெய்நீர்நாளுமுரகமுமூலமுமகமுந்
தீதறுதொழுவும்பூரமுமுரசுஞ்செப்பியவிவையுடன்றிருவே.

[இ-ள்.] அச்சுவினிக்கு கேட்டையும், பரணிக்கு அநுஷமும், கார்த்திகைக்கு விசாகமும், உரோகிணிக்குச் சுவாதியும்; திருவாதிரைக்கு திருவோணமும், புநர்பூசத்துக்கு உத்தராடமும், பூசத்துக்கு பூராடமும், ஆயிலியத்துக்கு மூலமும், மகத்துக்கு ரேவதியும், பூரத்துக்கு உத்தராட்டாதியும் எ-று. [உகூ]

இதுவுமது,

உற்றபங்குனிநற்புரட்டாதியும்பகரத்தமுஞ்செக்குஞ்
சற்றலவேதையொன்றினுக்கொன்றுதண்மதிசித்திரையவிட்டம்
பெற்றவிம்மூன்றுமப்படித்தலைதோள்பேணியவயிறதுதொடைத்
ளெற்றிடுவேதைமகன்மகள்புதல்வரிருங்கிளைதனஞ்சிதைந்திடுமே

(இ-ள்.) உத்தரத்துக்கு பூரட்டாதியும், அத்தத்துக்கு சதையமும் இந்நாட்கள் வேதையாம்; மிருகசீரிடம் சித்திரை அவிட்டம் இம்மூன்றுநாளும் ஒன்றுக்கொன்று வேதையாம்; தலையில் வேதை சம்பவித்தாற் புருஷனுக்கு ஆகாது, தோளில் வேதை ஸ்திரீக்கு ஆகாது, வயிற்றில் வேதை பிள்ளைக்கு ஆகாது, தொடையில் வேதை பெந்துக்களுக்கு ஆகாது, காலில் வேதை தனத்துக்கு ஆகாது எ-று [௩௦]

## பொருத்தங்களின் அநுகூலம்.

ஆயுசுதினமாஞ்கணங்சுபம்யோனியன்புமாகேந்திரம்பிள்ளை
யேயநற்றீர்க்கநலங்கிளரோரையிருங்குலவர்த்தனையதிமை
தூயமித்திராஞ்சந்துட்டிவசியம்சொற்றிடிலிரச்சுமங்கிலியம்
காயுமதின்மைவேதையென்றிவைக்குக்கனங்குழாய்பலன்களையறியே.

(இ—ள்.) தினம்பொருந்தில் ஆயுசு விருத்தி, கணம் சுபம், யோனி பிரியம் மாகேந்திரம் புத்திரபௌத்திரர்கள், ஸதிரிதீர்க்கம் சுகம், இராசி குலவர்த்தனை, அதிபதி சினேகம், வசியம் சந்தோஷம், இரச்சு மங்கிலியம், வேதை உறவு இவையுண்டாம் எ—று. [ருக]

## வன்னகூடம்.

மீனமுந்தேளுங்கடகமுமுரைக்கில்விப்பிரசாதிகோல்சிங்கம்
கூனுவின்மன்னரசியதண்டாடுகும்பமற்றவர்கலைமங்கை
யானவேறிவையாஞ்சூத்திரசாதியடைந்திடின்மாதர்கடாழ்ந்தே
மானமாபுருடருயர்ந்திடவேண்டும்வன்னகூடத்தினின்மானே.

(இ—ள்.) மீனமும் விருச்சிகமும் கடகமும் பிராமணசாதி, துலாமும் சிங்கமும் தனுவும் க்ஷத்திரியசாதி, மிதுனமும் மேடமும் கும்பமும் வைசியசாதி, மகரமும் கன்னியும் இடபமும் சூத்திரசாதி, ஸ்திரீராசி தாழ்ந்தகுலமும் புருஷராசி உயர்ந்தகுலமுமாயின் வன்னகூடமுண்டாம் எ—று

மேடம் க்ஷத்திரியஜாதி என்றும், இடபம் கன்னி மகரம் வைசியஜாதி என்றும், மிதுனம் துலாம் கும்பம் சூத்திரஜாதி என்று கொள்வதுமொன்று. (ருஉ)

## நாடிகூடம்.

இடையதுமுதலாநாடிகளென்னவியம்பியமூவரையிட்டு [ன்
நடையுறுபரிநாட்கிழக்குமுன்னுகநாட்டியேயடைவினிலெண்ணி
மடவரனுளுமிறையவனுளுமதித்தொருநாடியிலாகா
தடமுலைமடவாய்நாடிகூடத்திற்றனித்தனிவரிற்சுபந்தருமே

(இ—ள்.) இடை பிங்கலை சுழுமுனை என்ன மூன்று ரேகை கீறிக் கிழக்கே அசுவினியை வைத்துக் கிரமமாகஎண்ண ஸ்திரீ புருஷ நாட்கள் ஒரு ரேகையிலே சம்பவிக்கில் ஆகாது, வேறு வேறுயிருக்கில் அனுகூலமுண்டாம் எ-று

அச்சுவினி, திருவாதிரை, புநர்பூசம், உத்திரம், அத்தம், கேட்டை மூலம், சதயம், பூரட்டாதி இவை கூம் இடை. கார்த்திகை, ரோகிணி, ஆயிலியம், மகம், சுவாதி, விசாகம், உத்தராடம், திருவோணம்; ரேவதி இவை கூம் பிங்கலை. பரணி, மிருகசீரிடம், பூரம், சித்திரை, அனுஷம், பூராடம் அவிட்டம், உத்தரட்டாதி இவை கூம் சுழுமுனை. [ருரு]

## பூதகூடம்.

அஞ்சிருமூன் றுமஞ்சிருமூன் றுமஞ்சுநாட்பரிமுதலாக
விஞ்சுபார்நீர்தீவளிவெளியென்னவிளம்பியவடைவினிற்கண்டால்
மஞ்சுநேர்குழற்கும்வரற்குமோர்பூதமன்னுகினல்லதாந்தீநீ
ரெஞ்சியவதமமொழிந்தவைசமமென்றியம்பினர்பூதத்தினியல்பே

(இ-ள்) அச்சுவினி முதலாக ஐந்துநாள் பிருதுவி, திருவாதிரை முதல் ஆறுநாள் அப்பு, உத்தரம் முதல் ஐந்துநாள் தேயு, அனுஷம் முதல் ஆறுநாள் வாயு, அவிட்டம் முதல் ஐந்துநாள் ஆகாயம் என்றறியவும். ஸ்திரீக்கும் புருஷனுக்கும் ஒரு பூதமாயிருப்பின் உத்தமம், சலமும் அக்கினியுமாயிருப்பின் அதமம், மற்றப்பூதங்களெனின் மத்திமம் எ-று. [௫௪]

## அநுகூலதேசம்

வேதைசௌராட்டிரதேசம்விளம்பியகலிங்கற்காகு
மோதியவிரச்சுமற்றவுற்றிடுவசியமோரிற்
கோதில்கொங்கணத்திற்காகுங்குயின்மொழிமடவாயோனி
யேதமிலிராசிஞாலமெங்கணுமாகுமன்றே

(இ-ள்) வேதை சவுராட்டிரதேசத்துக்கு வேண்டும், இரச்சு கலிங்கதேசத்துக்கு வேண்டும், வசியம் கொங்கணதேசத்துக்கு வேண்டும், யோனிப்பொருத்தமும் ராசிப்பொருத்தமும் பூமண்டலமெங்கணும் வேண்டும் எ-று

கணம் எவ்விடத்துக்கும், அதிபதி தக்ஷிணதேசத்திற்கும், இலிங்கம் சோழ விதர்ப்ப தேசங்களுக்கும், பஞ்சபூதம் பாஞ்சாலதேசத்திற்கும், மாகேந்திரம் மாகத கௌட தேசங்களுக்கும், நாடி மாளவ கலிங்க தேசங்களுக்கும் பிரதானமென்பர் சிலர். (௫௫)

## பொருத்ததோஷாபவாதம்.

வேறு.

எண்டிருத்துமிரண்டீராறிருமூன்றெட்டைந்தைதான்பானிரா
சியாயும், பண்டிகைக்குமொழிக்கரக்கர்கணங்கூடுகினும்பயில்கிர

கடிப்பதுண்டேல், தெண்டிரைக்குட்சண்டுயில்மால்செகராசசேக ரனுந்திருவுமென்ன, மண்டலத்தினெடுங்காலமடமானும்புமானு மிகவாழ்வரன்றே.

(இ-ள்) உ-கஉ-௬-அ-டு-௯ ஆகிய ராசிகளாயிருந்தாலும் ஸ்திரீ அரக்கர்கணமாயிருப்பினும் ஸ்திரீ புருஷர்கள் இருவருக்கும் ராசி அதிபதிகள் மித்திரராயிருப்பின் செகராசசேகரனும் அவனிடத்துவாழுகின்ற திருவும்போலப் பூலோகத்தில் ஸ்திரீ புருஷர்கள் இருவரும் வாழுவர் எ-து. (௫௬)

இதுவுமது.

சித்தமுறுதினமாதிதீதெனினுமிருகூடஞ்சிதைவுற்றாலும்
சுத்தவிருவோரோபைக்கதிபதியோர்கிரகமாகித்தோன்றிலான்ற
முத்தமிழ்தேர்செகராசசேகரமன்றிருமார்பின்முன்னூலென்ன
மெத்துமியன்மயிலனையார்பைங்கழுத்தின்மங்கலநாண் விளங்கு
மின்னே,

(இ-ள்) தினமாதிய அநுகூலமின்றி இருப்பினும் வன்ன கூடமும் நாடிகூடமும் இல்லையாயினும் ஸ்திரீ புருஷர்கள் இருவருடைய ராசிகளிரண்டுக்கும் அதிபதி ஓர்கிரகமாயின் முத்தமிழுணர்ந்த செகராசசேகரனது திருமார்பிலணிந்த சூத்திரம்போல ஸ்திரீயினுடைய கழுத்திற்றரித்த மங்கலசூத்திரம் அநந்தகாலம் பிரகாசிக்கும் எ-று. [௫எ]

## ஒருவயிற்றிற் பிறந்தோர்க்குக் காலவர்ச்சிதம்.

ஏன்றவோரன்னைமைந்தரிருவருக்கொருதினத்தி
லான்றவோர்மாதத்தங்கணயனமொன்றதனிற்சோதி
கான்றவேல்விழியாய்செளளங்கடிவினைநாலிம்மூன்றுஞ்
சான்றவராகாதென்றுசாற்றினர்செயற்குத்தானே.

(இ-ள்.) ஒருமாதாவின் புத்திரர் இருவருக்கும் ஒருநாளிலேயாதல் ஒரு மாதத்திலேயாதல் ஒரு அயனத்திலேயாதல் செளளம் விவாகம் உபநயனம் இந்த மூன்றுகருமமுஞ் செய்யலாகாதென்று பெரியோர் கூறினர் எ-று. (௫அ)

## விவாகத்துக்கேதுவானகாலம்.

கடிவினைக்கிரட்டியாண்டுகன்னியற்கழகாஞ்சாலப்
படியினிற்குமரற்கொற்றைபலிக்குமாயுகமும்வாழ்வுந்
தொடிபடுகரத்தாய்வேறுதோன்றிடிற்றீதாமென்று
நெடுமறைகளந்த நாலோர்நிகழ்த்தினரெனக்கொணீயே.

(இ-ள்.) விவாகத்துக்கேதுவான காலஞ் சொல்லுமிடத் ஸ்திரீகளுக்கு இரட்டித்த வருஷமும், புருஷருக்கு ஒற்றித்த வருஷமுஞ் சென்மாதி சம்பவிக்கக் கொள்ளின் உத்தமம். ஆயுளுஞ் சோபனமும் உண்டாம். இதுவன்றி விபரீதமாகக் கொள்ளில் மிகவும் பொல்லாதென்று பெரியோர் சொன்னார் எ-று.

## விவாகமாதம்.

வேறு.

என்றவன்கடகங்குடந்தனுக்கன்னியிவையொழியோரையி
னிற்கும்,நன்றிசேர்மாதமவைகளினுகநாயகன்புரோகிதன்வெள்
ளி, பொன்றுதல்விருத்தவாலபாவங்கள்பொருந்தியகாலங்கள்
போக்கி, யொன்றியபக்கமுதலினிற்றிங்கள்பலம்பெறநன்மணமு
ன்னே.

(இ—ள்.) ஆதித்தியன் கர்க்கடகம் கும்பம் தனு கன்னி இவையொழிந்த இராசிகளில் நிற்கும் மாதங்களில் வியாழன் சுக்கிரன் இவர்களுடைய அஸ்தமயனம் விருத்தவாலபாங் கூடாத காலத்திலே பூருவபக்கஞ் சம்பவிக்கச் சந்திரன் டெலமுண்டாக விவாகஞ் செய்தல் வேண்டும். எ—று.

ஆடி புரட்டாதி மார்கழி மாசி அல்லாதவை உத்தமம். ௪௦

## சேட்டபுத்திரருக்காத மாதம்.

பின்னுமக்கடிக்குப்பேசுவர்தலைசூற்பிள்ளைகட்காணியுமாகா
சென்மமாமாதந்தவிர்தனுமாகுந்திதிகளிலட்டமியிருத்தை
மன்னியசட்டிதுவாதசிபர்வம்வருமிரண்டொழிகெனவெல்லோர்
பன்னினருவாவிற்பூரணைகடிக்குப்பழிப்பிலையென்பதுபகரே.

(இ—ள்.) விசேஷித்தும் விவாககருமத்துக்குப் பிரதமகருப்பமான ஸ்திரீ புருஷர்களுக்கு ஆனிமாதந் தவிரப்படும், சென்மமாதமும் ஆகாது. திதிகளில் அட்டமி இருத்தைகள் சட்டி

துவாதசி பூரணை அமாவாசை யொழிந்த மற்றத் திதிகளிலே கொள்ளப்படும் பர்வங்களிற் பூரணை விவாகத்துக்குத் தோஷமன்று. எ-று. [சக]

## விவாகத்துக்கு ஆகும்நாளும் ஆகாவாரமும்.

அன்றிலுத்தரங்கடோணிநற்றீபமத்தமிந்தனுஷநீள்வாய்க்கா
லொன்றியவுருடோராயவனுளிலுறுகதிர்சனிகுசன்வார [மிந்து
மின்றியிவ்வோர்களுதையவங்கிஷங்களியம்பிய நோக்கிவையொ
மன்றலங்குழலாய்கடிபுரிமந்தன்வாரமுமாமெனமதியே.

(இ-ள்.) மூலம் உத்தரத்திரயம் ரேவதி சுவாதி அத்தம் மிருகசீரிடம் அனுஷம் மகம் உரோகிணி இந்தநாட்களில் ஆதித்தன் சனி செவ்வாய் இவர்கள் வாரம் உதயவங்கிஷம் நோக்கு இவை தவிர்ந்தும் மற்றைச் சுபக்கிரகவாரோதயாங்ச திருட்டிகள் சம்பவிக்கச் செய்யலாம். சனிவாரமும் விவாகத்துக்கு ஆகும் எ-று. [சஉ]

## விவாகலக்கினமும் கிரகங்கள் நிற்குமிடமும்.

காரிகையிரட்டைதுலையிவைநன்றுகரிசிலைகுடங்குளிரேறு
சீரியசியமெனுமிவைகோளிற்சிறந்தவருதயத்தினன்கி
லோரிரண்டேனையஞ்சினிற்பத்திலோங்கியவொன்றுறுபலதில்
வேரியங்குழலாய்நன்றுபன்னொன்றுவிளம்புமூன்றாறுமற்றவற்கே

(இ-ள்.) கன்னி மிதுனந் துலாம் இவைமூன்றும் உத்தமம். தனு கும்பம் கடகம் இடபஞ் சிங்கம் இவை மத்திமம். ஒழிந்த ராசிகள் அதமமாம். சுபக்கிரகங்கள் இலக்கினத்துக்கு ச-உ-ரு-க0-கக இந்தவிடங்களில் நிற்கவேண்டும். பாபர் மூன்று ஆறு பதினொன்றில் நிற்கவேண்டும், ஒழிந்த தானங்களில் நிற்கில் ஆகாது எ-று. (சங)

## ஸ்திரீபுருஷர்களின் சென்மத்திர்ய விசேஷ விதி.

எட்டினிற்கவிபொனன்றலவேழிலிருவகைத்திறத்தருமா
கார், மட்டவிழ்குழலாயன்றியுங்கடிக்குமடவரல்சென்மநாண்மூ
ன்றுஞ், சிட்டர்நன்றென்றார்மைந்தர்நாண்மூன்றுஞ்சிறப்பிலரா

சிகளௌவையும், பட்டமேனுக்குநல்லவருதிப்பும்பலிக்கிலுத்தம மெனப்பகரே.

[இ-ள்) எட்டாமிடத்துச் சுக்கிரனும் வியாழனும் ஆகார். ஏழாமிடத்துச் சுபர் பாபரென்னும் இருதிறத்தோரும் ஆகார். விசேஷித்து ஸ்திரீ சென்மத்திரயங்கள் விவாகத்துக்கு விதிக்கப்படும். புருஷ சென்மத்திரயங்கள் தவிரப்படும். இராசிகள் எல்லாமுகூர்த்துவ திருட்டியுஞ்சுபருதயமு முண்டானகாலத்துக் கொள்ளலாம் எ-று. [சச]

## வாயசநிமித்தம்.

சாருமுற்பக்கத்தருங்கடிக்கமைந்தநக்கநாளாதிகடம்மிற்
சீரியபகலேமூன்றுபத்திற்சேர்ந்தநல்லோரைகள்பொருந்தப்
பாரினைமெழுகிவிதிப்படிமுன்னூல்படித்தவாயசபெலிபரப்பி
வேரியங்குழலாய்நன்றுதீதறிதிமிக்கதுமிவ்வகைவிளம்பே.

(இ—ள்.) பூருவபக்கத்திலே விவாகத்துக்குச் சொன்னபடி பஞ்சாங்க சுத்தமுள்ள தினங்களிலே பூருவான்னத்திலே அநுகூலம்பெற்ற சுபலக்கினத்திலே பூமியைச் சுத்தம்பண்ணிச் சாஸ்திரப்படியே வாயசபலியிட்டு நன்மை தீமை அறிந்து மற்றைய சுபகுணமும் பார்த்து விவாகஞ் செய்யவேண்டும் எ—று.

மணவினைப்படலம் முற்றிற்று.

ஆ விருத்தம் கரு அ.

---

## சூழ்வினைப்படலம்.

## அக்கினியாதானம்.

வையமிந்திரனுட்டொழுவனல்சுளகுமதியமூன்றுத்தரமிவையிற்
செய்யவன்மந்தன்வாரமாறிகழுஞ்செழுங்குளிர்குடங்கலைமீனம்
வெய்யவர்மிருத்தையிவைகளுமொழித்துமிக்கதிலம்புலிகுருசேய்
உய்பவர்மாட்சியுச்சமித்திரர்கேளோரையிலொளிசிறந்திடவே.

(எ-து.) உரோகிணி கேட்டை ரேவதி கார்த்திகை விசாகம் மிரிகசீரிடம் உத்தரத்திரயம் இந்நாட்களிலே செவ்வாய் சனி இவர்கள் வாரோதயாம்சங்களும், கடகம் மகரம் கும்பம் மீனம் என்னும் இராசிகளும், இருத்தையாதிகளுமொழித்து மற்றுள்ள சோபனகாலத்திலே சந்திரன் வியாழன் செவ்வாய் இவர்கள் உச்சத்திலாதல் மித்திரராசியிலாதல் நிற்க அக்கினியாதானஞ் செய்தல்வேண்டும் எ-று. (க)

இதுவுமது.

ஆதவன்சோமன்மண்மகள்புதல்வனந்தணனிவர்கள்கேந்திரத்து
மோதியவொன்பானோர்தினுஞ்சிறந்தவுபசயத்தினுமுமற்றோர்
பேதியாதுரைத்தவுபசயமதனிற்பிறங்கிடச்சுத்தியெட்டாக
வேதியர்வேதமுறைப்படியோமம்விளைத்திடனன்றெனவேண்டே

(இ-ள்.) ஆதித்தன் சந்திரன் செவ்வாய் வியாழன் இவர்கள் கேந்திரங்களிலாதல் திரிகோணங்களிலாதல், உபசயத்திலாதல் நிற்பப் பாவக்கிரகங்கள் இலக்கினத்துக்கு மூன்று ஆறு பதினொன்றில் நிற்ப எட்டாமிடஞ் சுத்தமாகப் பிராமணர் ஓமஞ்செய்தல் வேண்டும் எ-று. [உ]

## பூமிப்பிரவேசம்.

ஆதிரைபூசஞ்சித்திரைவாய்க்காலனுடமூன்றுத்தரஞ்சோதி [ன்
பூதமிந்நாளின்றெண்டுதேளேற்றிற்புதன்மதியவனிமான்புதல்வ
வேதியனிவர்வாராதியினவமிவேண்டுபத்திரையுவாவகற்றிச்
சோதிடமுணர்ந்தோர்பூப்பிரவேசஞ்சொற்றனர்தெரிந்துரை
தோகாய்.

(இ-ள்.) திருவாதிரை பூசம் சித்திரை மகம் அனுஷம் உத்தரத்திரயம் சோதி பரணி இந்நாட்களிலே கடகம் விருச்சிகம் இடபம் என்னும் இலக்கினங்களும், புதன் சந்திரன் அங்காரகன் வியாழன் வாரோதயாம்சங்களும் சம்பவிக்க, நவமி பத்திரை பர்வத்துவயம் நீக்கியுள்ள திதிகளிற் பூமிப்பிரவேசம் செய்தல்வேண்டும் எ-று. [௩]

## கிருஷியாரம்பம்.

ஒழுகுகாம்மமூன்றுத்தரந்தோணியுயர்கரும்பசுரர்நாட்பூசம்
பழுதிலாவிவையிற்குருமதிபுந்திபளிங்கிவர்வாரமாதிகளில்

வழுவிலாவுவாக்களிருத்தைகளாறுமன்னியபன்னிரண்டெட்டுத்
தழுவிடாரெண்டுகலைதடியேறுதாவுமீனெழக்கிருஷிசாற்றே.

(இ-ள்) உரோகிணி அத்தம் உத்தரத்திரயம் ரேவதி புநர்பூசம் மூலம் பூசம் இந்நாட்களிலே வியாழன் சந்திரன் புதன் சுக்கிரன் வாரோதயாம்சங்களும், பூரணை அமாவாசை இருத்தை சட்டி துவாதசி அட்டமி ஒழிந்த திதிகளும், கடகம் மகரம் மிதுனம் இடபம் மீனம் என்னும் இலக்கினங்களுஞ் சப்புவிக்கக் கிருஷியாரம்பஞ் செய்யலாம் எ-று. [௪]

## அலப்பிரவாகம்.

புட்பணையத்தமகயிரங்கரும்புபூசமைப்பசிசகடோணம் [ம்
கொட்புறுமனிலந்தோணியுத்தரங்கள்குன்றுசித்திரைமுறமூல
நட்புடைமகமென்றிவையிலேறலவனவ்விமீன்றண்டெழவியந்த
பெட்புறுகிழக்குவடக்கினைநோக்கிப்பிறைநுதால்செறுவுளப்பே
சே.

(இ-ள்.) அவிட்டம் அனுஷம் அத்தம் மிருகசீரிடம் புநர்பூசம் பூசம் அச்சுவினி உரோகிணி திருவோணம் சுவாதி ரேவதி உத்தரத்திரயம் சதயம் சித்திரை விசாகம் மூலம் மகம் இந்நாட்களில், இடபம் கடகம் மகரம் மீனம் மிதுனம் என்னும் லக்கினங்களும், சுபதிதிகளும், சுபவாராம்சங்களுங்கூடிய காலத்திலே கிழக்கு வடக்கு நோக்கிநின்று வயல் உழலாம் எ-று. ()

## கலப்பைச்சக்கரம்.



## கலப்பைச்சக்கரம்.


வேறு,

அருக்கனுடன்மூன்றுநாளுமமைந்தவேறதுநாசமாம்
விருத்தியாநுனிமூன்றுநாளும்வியந்தமூன்றும்மள்ளர்தா
மரிப்பர்மத்திமமாயபத்தும்வயங்குபாலமதைந்துமே
லுருத்தமேழியின்மூன்றுநன்றெனவோதினாருழவும்பரே.

(இ-ள்.) கலப்பைபோலவரைந்து அதில் ஆதித்தன் நின்ற நாளும் முன் பின் நாட்களுமாகிய மூன்றுநாளும் எருதுக்கு ஆகா. அடுத்த மூன்றுநாளுந் தானியவிருத்தி. அடுத்த மூன்று நாளும் உழவருக்கு ஆநா. நடுவிற் பத்துநாளும், கொழுவில் ஐந்துநாளும், மேழியின் மூன்றுநாளும் உழவுக்கு நல்லன எ-று. [௬]

## பணிச்சக்கரம்.

வேறு.



பணிச்சிரத்தினுறுமூன்றுநாட்பயிர்பரந்தெழும்புழுவினால்விடு
மணிக்கழுத்தினுறுமூன்றுநாட்பயிரறப்பெருத்தழுகுமன்றியே
மணிக்குடற்படுவயிற்றினாளதுமுந்நான்குமல்குமிகுதானியம்
கணித்த*புச்சமுறுநான்குநாளுமொழிகடையிலைந்துபதர்காட்டு
மே.

(இ-ள்.) சர்ப்பாகிருதியாக வரைந்து அதின் சிரத்தின் மூன்றுநாள் பயிர் புழுவினால் அழியும், கழுத்தின் மூன்றுநாளும் பயிர் வெள்ளத்தினால் அழியும், வயிற்றிற் பன்னிரண்டுநாளும் தானியவிருத்தி, வாலின் நான்குநாளும் விருத்தியாம், அந்தியத்தில் ஐந்துநாளும் பதராகும் எ-று. [௭]

## பீசாவாபனம்

அத்தமோணமுறங்குருச்சகடனிலமாசிகலஞ்சொல்மூன்
றுத்தரம்பனைசெக்குமூலமுறந்தனுத்தகர்மங்கைதேள்
பத்திரைத்திதியிருத்தைமூன்றினொடுபகருவாவெழுபளிங்குரு
வொத்தபொன்கவிதிங்கள்மாறினமுதயமாகவிரையுய்த்திடே.

* புச்சம் – வால்.

(இ—ள்.) அத்தம் திருவோணம் விசாகம் பூசம் உரோகிணி சுவாதி மகம் இரேவதி உத்தரத்திரயம் அனுஷம் சதயம் மூலம் இந்நாட்களிலே தனு மேடம் கன்னி இந்த ராசிகளும், பத்திரை இருத்தை பூரணை அமாவாசை என்னுந் திதிகளும், ஏழாமிடத்துச் சுக்கிரனும் ஒழிய, வியாழன் வெள்ளி சந்திரன் புதன் வாரோதயாம்சங்கள் சம்பவிக்க வயலில் வித்திடல் வேண்டும் எ—று. [அ]

## கிழங்குவகை உண்டாக்க.

சுளகுமூலமடுப்புமாசிதுலங்குமங்கிசிறந்தமூன்
றளவுபூரமிதிற்றனுப்பகரரிவைமீனமமைந்தசொற்
றளர்வில்யாமெழவொன்றுமம்புலிசாரும்வாரமதாதியாய்க்
களவில்கந்தமிடற்குநன்றுகரும்பனையிதுகாண்டியே.

(இ—ள்.) விசாகம் மூலம் பரணி மகம் கார்த்திகை முப்பூரம் என்னும் நாட்களும, தனு கன்னி மீனம் மிதுன ராசிகளும், சந்திர வாரோதயாம்சங்களுமுறக் கிழங்கு நட நன்று எ—று. (கூ)

## கொடிவகை உண்டாக்க.

சோதிகேட்டைகரும்புகன்னிதுலங்குதாலமுமரியமா
வோதுமான்றலைதோணிசித்திரையுற்றவிங்கிவையிற்றுலா
மாதிநண்டுசுறுவெழத்திகழும்பொன்வாரமதாதியாய்க்
கோதில்வல்லிகளாக்கநன்றுகொடுஞ்செய்வாளிநெடுங்கணாய்.

(இ—ள்.) சோதி கேட்டை புனர்பூசம் அத்தம் அனுஷம் அச்சுவினி மிருகசீரிடம் இரேவதி சித்திரை இந்நாட்களிலே துலாம் மேடம் கர்க்கடகம் மகரம் என்னும் ராசிகளும், வி

யாழனுடைய வாரோதயாம்சங்களுஞ் சம்பவிக்கக் கொடிப்பயிர்கள் உண்டாக்க நன்று எ-று. [௪0]

## விருக்ஷங்களுண்டாக்க.

பூசமோணமவிட்டமாதிரைபுணரிதேரிவைதம்மிலே
மேயசிலேறரிகும்பமிவ்வுடனேன்றதேளெழுவான்றசீர்
மாசில்புந்திதினுதியாகவரத்*தடித்திடைமங்கைகே
ளாசில்சாய்கைகிளர்ந்தநன்மரமாகநன்றெனவாய்ந்திடே.

(இ-ள்.) பூசம் திருவோணம் அவிட்டம் திருவாதிரை சதயம் உரோகிணி இந்நாட்களும், இடபம் கும்பம் சிங்கம் விருச்சிகம் என்னும் இராசிகளும், புதனுடைய வாரோதயாம்சங்களும் விருட்சங்களுண்டாக்க நன்று எ-று. [கக]



## புகையிலைக்கன்று நட.

வேறு.

*சதயஞ்சிவனோணம்முருள்சகடம்பனையுடனேதருமாசியும்பரிமான்றலை
தானும்மிகநன்று, மிதுனங்குடமரிகன்னியுமிகுநன்மைகளாகும்விற்றேள்கயலெ
னுமோரைகள்மேவும்பொழுதினிலே, கதிர்சேய்புகர்மதிவாரமுங்காலம்சமும்
நீத்துக்கடிகொண்டிடுமலர்சூடியசனிவாய்மயிலேகேள், புதன்மந்தனுங்குருவா
ரமும்புலவோனுதயமுமிப்புவிமீதினில்விரும்பிச்செயும்புகைவித்திடலாமே.

(இ—ள்.) சதையம் திருவாதிரை திருவோணம் உரோகிணி அனுஷம் மகம் அச்சுவினி மிருகசீரிடம் இந்நாட்களும் மிதுனம் கும்பம் சிங்கம் கன்னி இந்த லக்கினங்களும் உத்தமம், தனு விருச்சிகம் மீனம் இவை மத்திமம், ஞாயிறு செவ்வாய் வெள்ளி திங்கள் இவ்வாரோதயாம்சங்கள் நீக்கி, புதன் சனி வியாழன் இவ்வாரோதயாம்சங்களுறப் புகையிலைவித்தூராற்றிடவும் கன்றுநடவும் நன்றாம், புதனுதயம் மிக விசேஷமாம்- எ—று (௪௨)

* இச்செய்யுள் சிலபிரதிகளில்மாத்திரம் காணப்பட்டது.

* தடித்து — மின்னல்.

## வெற்றிலை.செங்கழுநீராதியானவை உண்டாக்க.

வேறு.

சித்திரைமூலம்பனைபணியத்தந்திகழ்முறம்பூசமாமிவையும்
வித்தகவெள்ளிமதிதிருதிகளுமிக்கதாநாகவல்லிகளுக்
குத்திரமாசிகரும்புதேரோணமுடுபதிகுருகுபொன்பூர [கே.
மத்தமெய்ப்பயறுநல்லதாமின்னேயமைந்தவுற்பலாதிகளவைக்

(இ—ள்.) சித்திரை மூலம் அனுஷம் ஆயிலியம் அத்தம் விசாகம் பூசம் இந்தநாட்களும், வெள்ளி சந்திரன் இவர்கள் வாராம்சங்களும் வெற்றிலைக்கொடி முதலியவை நட நன்று. உத்தரம் மகம் புநர்பூசம் உரோகிணி திருவோணம் மிருகசீரிடம் மூலம் பூசம் பூரம் அத்தம் சித்திரை ஆகிய நாட்கள் செங்கழுநீராதியானவை உண்டாக்க நன்று எ—று. [௧௨]

## கரும்புநட, புன்பயிர்செய்ய.

தோணிதேர்புரவிபூசநாட்செக்குத்தொடுகரமிவையிலம்புலியோ
டேணில்நன்கவிவாராதிநளாகக்கழைநடற்கழகதாஞ்சோதி
காணியசுளகுபனைமகமோணங்கண்ணியதேர்கலஞ்சதையம் [றே.
நாணுறும்வைவேல்விழியிணைமடவாய்நயந்தபுற்பயிர்க்கெலாநன்

(இ—ள்) இரேவதி உரோகிணி அச்சுவினி பூசம் சதையம் அத்தம் இந்தநாட்களும், சுக்கிரன் சந்திரன் வாரோதயாம்சங்களும் கரும்புநட நன்று. சோதி விசாகம் அனுஷம் மகம் திருவோணம் உரோகிணி இரேவதி சதையம் என்னும்இந்நாட்கள் சாமை வரகு முதலான புன்செய்த்தானியப்பயிர் செய்ய நன்று எ-று. [௧௩]

## பனை, கமுகு, வாழை, மா, உழுந்து, பயறு உண்டாக்க.

பனைசகடோணமுத்தாமூன்றுபண்ணியகலம்பயறுடனே
நினைவுறுகுருகென்றிவைகளினுழுந்துநிகழ்பயறுதியங்குரங்க
ளனையவையிடற்குநல்லதாமாவிற்கழகதாமுத்தரங்கமுகு
நனையுறுதாலம்பரியினிலழகாநற்குருவரம்பைக்குநன்றே.

(இ-ள்) அனுஷம் உரோகிணி திருவோணம் உத்தரத்திரயம் இரேவதி சித்திரை மூலம் இந்தநாட்களில் உழுந்து பய

ரு முதலானவை விதைக்கவும் உத்தரம் மாவும் அச்சுவினி பனையும் கமுகும் பூசம் வாழையும் நடுதற்குநன்று எ-று. [௧௪]

## சகல பீசாங்குரங்களுக்கும் இராசிவிசேஷம்.

மேடமுமேறும்பயிர்மிகுப்பலிக்குமிதுனமுங்சடகமுஞ்சிங்கம், பீடையாய்நாசங்கன்னியிற்புல்லுப்பிறங்கிடுந்துலாத்தினில் நன்றாங், கீடமாந்தேளிற்சிலையினிற்களவாங்கிளர்கலைகுற்றமேவருத்தும், நாடியகுடமேற்கலகமாமீனநல்லதாமெனப்பலநாடே,

(இ-ள்.) சகலபீசங்களும் மேடத்தினும் இடபத்தினும் இடில் விருத்தியுண்டாம். மிதுனத்தினுங் கடகத்தினும் இடிற் றாலிக்கும். சிங்கம் நோய்களாற் கெடும். கன்னி புல்லுமிகும். துலாம் மிகுதியும் நன்றாம். விருச்சிகம் புழுமிகும். தனுக் கள்ளரால் அழியும். மகரம் அநேகங்குற்றங்களை உண்டாக்கும். கும்பம் கலகத்தினால் அழியும், மீனம் நல்லவாம் எ-று. [௧௫]

## நெற்கதிரறுக்க.



அடுப்புயாசியொடோர்ணமத்தமறைந்தவர்திரைசுளகுதேர் எடுத்தநாளிவைதம்மின்மன்னுமிருத்தையன்றியதிதிகளின்

மடுத்தவோரைதிரத்துடன்குளிர்மல்கமால்சனிவெள்ளிபொன்
படைத்தவாரமதாதியிற்சனிபலமுறக்கதிர்பரிமினே.

(இ—ள்.) பரணி மகம் திருவோணம் அத்தம் திருவாதிரை விசாகம் உரோகிணி இந்தநாட்களிலே இருத்தை ஒழிந்த திதிகளிற் றிரராசிகளும், சரராசியிற் கர்க்கடமும், புதன் சனி வெள்ளி வியாழ வாரோதயாம்சங்களும் பொருந்த இலக்கினத்துக்குச் சனி பெலமுண்டாகக் நெற்கதிரறுத்தெடுக்க நன்று எ-று. (கசு)

## தானியசங்கிரகம்.

மாசிமூதுரைநவ்விசோணமடுப்புரோகிணிமற்றுமேற்
பேசுநோக்குடைநாட்களிற்சசிபீதகன்கவிமந்தனென்
றேசில்வாரமதாதியெய்தவிருத்தைவிட்டியுவாக்களோ
டாசில்சித்திரையன்றிநற்றிரமாகநெற்குவையாக்கிடே.

(இ—ள்.) மகம் திருவாதிரை அத்தம் திருவோணம் பரணி உரோகிணி இவைகளும், ஊர்த்துவதிருஷ்டியான நாட்களும், சந்திரன் வியாழன் சுக்கிரன் சனி வாரோதயாம்சங்களும, இருத்தை விட்டி அமாவாசை பக்கச்சித்திரை ஒழிந்தவைகளுந் தானியஞ் சங்கிரகிக்க நல்லன எ—று. [கஎ]

## *புவனுந்தயோகம்.

எதினன்பத்திடத்தடையவிலக்கினத்திற்பொன்னுதிப்பவேழினன்கிற், சோதிமதியெழும்புவனுந்தத்திற்சங்கிரகிக்கிற்றலங்குப்பைந்தாட், சீதமலர்நறுந்தெரியற்செகராசசேகரமன்சிறந்தகீர்த்தி, மேதினிமேல்வளர்ந்துலவுந்தகைமையென்னத்தானியங்கள்மிகுக்குமென்னே.

(இ—ள்.) பத்தாமிடத்தில் ஆதித்தன் நிற்ப லக்கினத்தில் வியாழன் நிற்ப நாலில் அல்லது ஏழிற் சந்திரன் நிற்கப்பெற்ற புவனுந்தயோகத்திலே தானியஞ் சங்கிரகிக்கில் செகராச்சேகரமன்னன் புகழ்போல விருத்தியாக்கும் எ-று. [கஅ]

## தானியபருவதம்.

பங்குனிமாசியிரண்டினுமொன்றியபாற்குனிமாசியினிக்
றங்கியவேறெழநெற்குவைசெய்திடிற்றானியபருவதமாம்

* புவனாநந்தயோக மென்றும் பாடபேதம்.

இங்கிசைகாரியுதித்திடவம்புலியைந்தெழுவேழ்பொனுறச் [னே.
செங்கதிரோன்பதினொன்றினினின்றதுதேமொழிமேருவென்

(இ-ள்.) பங்குனிமாதத்துப் பூரமும் மாசிமாதத்து மகமும் இடபலக்கினத்தில் வரத்தானிய பருவதயோகமாம். அவ்விடத்தில் இலக்கினத்திற் சனி உதிக்க ஐந்தாமிடத்திற் சந்திரனும் ஏழாமிடத்திற் பிருகஸ்பதியும் பதினொன்றில் ஆதித்தனும் நிற்க வருவது தானியமேருவாம். இதிற் றானியசங்கிரகஞ் செய்யின் விருத்தியாகும் எ-று. [௧௯]

## தானியவிரயம்.

கந்துகமார்கழியுத்தரமூன்றுகரும்புடனுவணியால்
முந்துறுதோணிகுருக்கணைமூன்றுமொழிந்தவிந்நாட்களிலே
சந்திரன்மால்சனியந்தணனுமிவர்தந்தினமாதிவரச்
சிந்தைசெய்யோரைதிரம்பெறநீடியசெந்திருநெற்செலவே

(இ-ள்.) அச்சுவினி மிருகசீரிடம் உத்தரத்திரயம் புநர்பூசம் அவிட்டம் திருவோணம் இரேவதி பூசம் முப்பூரம் இந்நாட்களிலே சந்திரன் புதன் சனி வியாழன் வாரோதயாம்சங்களும் ஸ்திரலக்கினமும் உண்டாகத் தானியச்செலவு செய்வது நன்று எ-று, [௨௦]

## நவபோசனம்.

சித்திரையோணமகம்பனைதேர்பரிதிங்களொடாவணிமூன்
றுத்தரமூலமுறம்குருவேகரமோதுகடங்சடல்கா
லித்திறநாளிலிரித்தையுவாவிலையின்றியநற்றிதியிற்
றெருத்துறுதேள்தகர்மீனமொழிந்துதுணிந்ததிலுண்புதிதே,

(இ-ள்.) சித்திரை திருவோணம் மகம் அனுஷம் உரோகிணி அசுவினி மிருகசீரிடம் அவிட்டம் உத்தரத்திரயம் மூலம் விசாகம் பூசம் புநர்பூசம் இரேவதி அத்தம் சதயம் சோதி இந்நாட்களும், இரித்தை பூரணை அமாவாசை இத்திதிகளல்லாத சுபதிதிகளும், விருச்சிகம் மேடமொழிந்த ராசிகளும் நவபோசனத்துக்கு நன்றாம் எ-று. (௨௧)

## நவபலபுஷ்பாதிகளுக்கு ராசி சுத்தம்.

அந்தணன்மால்கவியென்றிவைவாரமதாதிசிறந்திடவே
யிந்திருநாலழகன்றவைமேடவிராசிமலர்க்கிலேதன்

முந்துறுமீனெழுநன்றுபழங்கள்மொழிந்தவகைப்படியே
புந்திசெய்வாயையிரண்டினில்வந்துபுகாதிடயாவருமே.

(இ-ள்.) வியாழன் வெள்ளி புதன் வாரோதயாம்சங்களும் சம்பவிக்க அட்டமசந்திரனையொழித்து நவபோசனஞ் செய்யலாம்; விசேஷித்துப் புட்பத்துக்கு மேடமும், புதிய விலைக்கு விருச்சிகமும், புதுப்பழத்துக்கு மீனமும் நன்று. எல்லாப் புதியபதார்த்தங்களுக்கும் பத்தாமிடஞ் சுத்தமாகவேண்டும் எ-று. [உஉ]

சூழ்வினைப்படலம் முற்றிற்று.

ஆ விருத்தம் சகூ௦.

## பலவினைப்படலம்.

### திரவியசேமம்.

இந்துருடேர்குருவத்தமொடீசனரும்பனையுத்தரமூன்
றந்தமில்போரொடவிட்டமுலக்கையமைந்தவிந்நாளவையிற்
சுந்தரவோரைசுகம்பெறநல்லவர்தாயதிஞறிவரச்
சந்தவுவாக்களிரித்தைசரங்கடவிர்ந்துதனங்கள்வையே.

(இ-ள்) மிருகசீரிடம் உரோகிணி அத்தம் திருவாதிரை அனுஷம் உத்தரத்திரயம் சதயம் அவிட்டம் திருவோணம் இந்நாட்களிலே அமாவாசை இரித்தைகள் சரராசிகள் ஒழித்து சுபக்கிரக வாரோதயாம்சங்கள் பொருந்தச் சுபக்கிரகோதய மூர்த்தத்திலே திரவியங்கள் ஈட்டிவைக்கலாம் எ-று. [க]

### கிரயவிக்கிரயம்.

வேறு.

முற்றின்மாசிமதியிந்திரன்புநர்தமூலமைப்பசிகலஞ்சிவன்
பற்றுபூரமுருடேர்குருக்களிறுபன்னுகுன்றுதிரியுத்தரம்
பெற்றநாளிவையில்வெள்ளிபுந்திமதிபீதகன்றினமதாதியா
யுற்றதேளரிதுலாத்திரைனறுதடியோங்கநன்றுகொளவிற்கவே.

(இ-ள்.) விசாகம் மகம் மிருகசீரிடம் கேட்டை புநர்பூசம் மூலம் அசுவினி இரேவதி திருவாதிரை பூரம் உரோகிணி பூசம் அத்தம் சதயம் உத்தரத்திரயம் இந்தநாட்களில் வெள்ளி புதன் சந்திரன் வியாழன் வாரோதயாம்சங்களும் விருச்சிகம் சிங்கம் துலாம் இடபம் மிதுனம் என்னும் இராசிகளும் கொள்ள விற்க நன்று எ-று. [உ]

## ஆடு, மாடு கொள்ளல்.



புணர்தமாவணிவிளக்குநவமியொடுபூசமைப்பசிபுரந்தர [ங]
ணிணையிரேவணிசுளகென்னுநாளவையிலேலென்றநல்லவர் திருதிவ
தணையவாவகைகொளற்குநன்றெனவறைந்ததாலறிவினந்தணன்
றணிவில்வாரமுறுபூசநாளில்வருதகரிலாடுகொளறக்கதே.

(இ-ள்.) புநர்பூசம் அவிட்டம் சோதி அத்தம் பூசம் அச்சுவினி கேட்டை இரேவதி விசாகம் இந்நாட்களிலே சுபக்கிரகங்களுடைய வாராம்சங்களும் பொருந்தப் பசுக்கொள்ளல் நன்று. வியாழன் வாரமும் பூசநாளும் மேடமுகூர்த்தமும் பொருந்த ஆடுகொல்ளலாம எ-று. [௩]

## நவவஸதிரந் தரித்தல்

ஆதிசித்திரையொடத்தமூங்கின்முறமனுஷமந்தமொடுதோ
ணிமீதர், சோதியுத்தரமென்மூன்றிலொன்றவருதூயசேய்சனி
யெனச்சொலு, மேதமுற்றபெருவாரமாதிகளிரித்தைதேளரியி
யம்புமீன், போதமுற்றசிலைதகரொழிந்துதரிபுதியநற்கலைகள்பூ
வையே.

(இ-ள்.) அச்சுவினி சித்திரை அத்தம் புநர்பூசம் விசாகம் அனுஷம் இரேவதி உரோகிணி சோதி உத்தரத்திரயம் இந்தநாட்களில் செவ்வாய் சனி இவர்களுடைய வாரோதயாம்சங்களும், இரித்தைமுதலியவைகளும், விருச்சிகம் சிங்கம் மீனம் தனுசு மேடம் என்னும் இராசிகளும் ஒழித்துச் சுபவாரோதயாம்சங்கள் பொருந்த நவவஸ்திரந் தரிக்கலாம் எ-று

## நவவஸ்திரந்தரிக்க, இராசிபலம்.

மேடமன்னர்பயமேறு தானியம்வியன் றனந்தடிசுபங்குளிர்
கேடுசிங்கமடவாடனந்துலைகிளந்தநன்மைவிதனங்கடேள்
பீடைவிஞ்சுசிலைகுணமுறுங்கலைபெருக்கும்வாழ்வுகுடமரணமீன்
றேடுமந்தனிலுடுக்கலாங்கருமைசேயினன்றுடல்சிவந்ததே

(இ—ள்.) நவவஸ்திரந்தரிக்க மேடமெனில் ராசபயம். இடபம் தானியவிருத்தி. மிதுனம் தனமுண்டு. கடகம் சோபனம். சிங்கம் கேடு. கன்னி சம்பத்து. துலாம் சௌக்கியம். விருச்சிகம் ஊக்கம். தனுசு வியாதி. மகரம் சோபனம். கும்பம் வாழ்வு. மீனம் சாவு. விசேஷித்துச் சனிக்கிழமையில் கறுப்புப்புடைவையும், செவ்வாயிற் சிவப்புப்புடைவையும் தரிக்கலாம் எ—று. [௫]

## நவவஸ்திரந்தரிக்கத் தினபலம்.

கூறையைப்பசிநமன்பயங்கனல்கொளுந்துமாரல்சகடர்த்தமிந்
தேறுமச்சிகரிநாசமாதிரையிருந்தனங்கழைகுருத்துகில்
பேறில்சர்ப்பமகமரணமம்பரசர்பீடையுத்தரமுறுங்கலை
மாறினற்றனமதத்தமாம்பயறுவாகனம்மடிசில்வாயுவே.

(இ—ள்.) நவவஸ்திரந்தரித்தற்கு அச்சுவினியாயின் வஸ்திரப்பேறு, பரணி பயம், கார்த்திகை தீப்படும், உரோகிணி அர்த்தலாபம், மிருகசீரிடம் எலிவெட்டும், திருவாதிரை சேதம். புனர்பூசம் அதிகலாபம், பூசம் வஸ்திரலாபம், ஆயிலியம் சேதம், மகம் மரணம், பூரம் அரசர்பயம், உத்தரம் வஸ்திரலாபம் அத்தம் பொருட்பேறு சித்திரை வாகனலாபம், சோதி சுகபோசனம் எ—று. [௬]

### இதுவுமது.

காணுநற்பிரியமுறந்தரும்பனைகருத்தமைந்தவுடையிந்திரன்
பேணுமப்புடைவைசிதையுமூலமிகுபீடைநாமுறுபிணிதுகிற்
பூணுமப்பொருவிலாடியோணமிடைபுட்டனஞ்சதயமரணநோய்
தூணமூட்கொளுவுடுக்கையாமுரசுதோணிநற்றனமெனச்சொலே

(இ—ள்) விசாகம் சந்தோஷவரத்து, அனுஷம் வஸ்திரப்பேறு, கேட்டை வஸ்திரங்கிழியும். மூலம் வியாதி, பூராடந்

துக்கம், உத்தராடம் வஸ்திரலாபம், திருவோணம் வியாதி, அவிட்டம் தனலாபம், சதயம் மரணம், பூரட்டாதி நோய்மிகும். உத்தரட்டாதி புடைவைவரத்து, இரேவதி வாழ்வுண்டாகும் எ—று. [எ]

## நவவஸ்திரந்தரிக்க வாரபலம்.

அருக்கனிற்கலைவிரைந்துநையுமதியனுதினம்புனலினனையுநோய்,பெருக்குமக்குசன்மிகத்தனங்கலைகள்பெருகும்புந்திகுருஞானமாம், செருக்குமிக்கபுகர்புகலின்மெய்ச்சனிதினந்தொறுங்கலைபிறங்குமென்றுரைக்குநற்பலமறைக்குளுற்றதெனவோதினார்முனிவருண்மையே,

(இ-ள்.) நவவஸ்திரந்தரிக்க ஞாயிறுகில் விரைந்து நோயுண்டாகும், திங்களில் நனைவு, செவ்வாய் வியாதி, புதன் வஸ்திரப்பேறு, வியாழன் வஸ்திரப்பேறு, வெள்ளி சந்தோஷம், சனி யழுக்காகும் எ-று. [அ]

## தலைக்கட்டு; சிரவேட்டி.

இரலைசாகடுபயறனிலவ்விட்டமுடனிக்கிரேவதிசெழும்பனை
குருவதாயதிரியுத்தரங்களிறுகுலவுநாளிவையின்மின்னனாய் [சே
பெருமைபானசிரவேட்டிதொக்கின்மிகுபீடுறும்பெருக வென்றி
ரரியவாரியர்குலாதிபன்றெரியுமம்மறைப்பொருளுரைக்குமே.

(இ—ள்.) அச்சுவினி உரோகிணி சித்திரை சுவாதி அவிட்டம் புனர்பூசம் இரேவதி அனுஷம் பூசம் உத்தரத்திரயம் அத்தமென்னும் நாட்களும் சுபக்கிரக வாரோதயாம்சங்களும் உத்தம திதிகளும் சுபலக்கினமும் பொருந்தச் சிரவேட்டி கட்டினாற் சோபனமுண்டாம் எ-று, (௯)

## சாமரை, சலபாத்திரம் முதலிய பரிச்சின்னங்கட்கு.

மன்னர்மன்னுசெகராசசேகரன்மணவையாரியவரோதயன்,
பன்னுசெந்தமிழ்வளம்பெறற்குதவுபரிசிலங்கவரிசித்தியாம்,பொன்னின்மிஞ்சியகளாஞ்சிகெண்டிகைபொலன்கலம்பிறவுமாம் பரிச், சின்னமுள்ளதொகையாவுமிவ்விதிசிறந்தறிந்துரைசெய்சேயிழாய்,

(இ-ள்.) பரராசர்கள் தினமுஞ் சேவைபுரிகின்ற செகராச சேகர வேந்தனென்னும் மணவைப்பதியில்வாழும் பிரம க்ஷத்திரிய வம்சத்தில் வரப்பிரசாதியாய் உற்பவித்தவன், எல்லோரும் ஆராயுந் தகைமையையுடைய தமிழ் கற்றவர்க்கு வளப்பம்மிகுந்த பரிசாக அளிப்பதற்கு ஏதுவான கவரி குடை முதலானவையும் காளாஞ்சி செல்பாத்திரம் அன்னபாத்திரம் முதலான பரிசின்னங்களும் நவவஸ்திர தாரணத்துக்குச் சொன்னவிதிப்படி திதி வாரம் நாளாதிகள் எல்லாங் கொள்ளுவதே முறைமை எ-று. (க0)

## நவவஸ்திர தாரணத்துக்கு விசேஷகாலம்.

வேறு.

வேந்தரகமகிழ்வுற்றுத்தருங்காலுநான்மறையோர்வேண்டிஞலுங், காந்திபெறுமடவாரைக்கைப்பிடிக்குங்காலையினுங்கடவுண்முன்னும், போந்தவெழுத்துபதேசம்பெறும்போதுமபிடேகம்புனையும்போதும். மாந்தர்தமக்கருங்கோடியுடுப்பதற்குநாள்வாரமன்ருரென்னே.

(இ-ள்.) விசேஷித்து நவவஸ்திரதாரணத்துக்குச் சொன்னபடி, அரசர் விரும்பித் தருமிடத்தும் பிராமணசமூகத்திற் கொடுக்குமிடத்தும் விவாகஞ்செய்யுமிடத்தும் சிவசந்நிதியிலும் மந்திரோபதேச காலத்தும் அபிஷேககாலத்தும் புதுப்புடைவை உடுத்தற்கு நாள் வாராதிகள் விசாரிக்கப்படா எ-று. [கக]

## நவபூஷணம்.

நாடுமெதிபுரவிகுருத்தேர்தோணிசித்திரைநற்ருலமத்தந்,தேடிவையிற்சனிபுந்திகுருவெள்ளிசசிவாரஞ்சிறந்தகால்சள், கூடவருநந்தையுடன்பூரணைபாந்திதிகூடக்கோதண்ட'ம்பெண்,ணேடிடபமிதுனமீனெழுக்கலன்கள்புனைவதுநன்றுரைக்குங்காலே.

(இ-ள்.) மிருகசீரிடம் அச்சுவினி பூசம் உரோகிணி இரேவதி சித்திரை அனுஷம் அத்தம் என்னும் இந்நாட்களிற், சனி புதன் வியாழன் வெள்ளி சந்திரன் இவ்வாரோதயாம்சங்களும் நந்தை பூரணை என்னுந் திதிகளும் தனு கன்னி இடபம் மிதுனம் மீனமாகிய இலக்கினங்களும் பொருந்தப் புதிய ஆபரணந் தரிக்கலாம் எ-று. [கஉ]

## * இருணமோசனம்.

அந்தணமேனுடனைறகாரிவாரங்களிரித்தையுவாவவரவர்நோக்கு
முந்தியகாலுதயமெனவவையன்றியிரித்தையுமுடவன்வாரத்
துந்துகுளிகோதயமுமுண்டாகவாதல்மற்றுமோங்குபெண்ணை
தந்தவிருசரணத்துமுகூர்த்தங்தேளெழவாதறனிசுதீரே.

(இ—ள்.) வியாழன் சனி வாரத்தில் இரித்தை யுவாக்கள் சம்பவிக்க அக்கிரகநோக்கம் உதயம்பெற்ற லக்கினங்களாதல் அம்சங்களாதல் கூடினகாலத்து இரித்தையுடன் கூடின சனிக்கிழமையிற் குளிகோதயத்திலும் அனுஷத்து இரண்டாங்காலில் அனுஷமுதிக்க விருச்சிகலக்கினத்தில் இருணமோசனம் செய்யலாம் எ—று. [கரு]

## ரோகாரம்ப நாட்பலன்.

புரவியொன்பதிற்றீர்ந்திடுமெல்லதுபுகல்பலிபயறஞ்சோறு,
பரியின்பந்தியிலுய்க்கவாயிய:ப்பியபரணியைந்தெட்படிசோறு,
விரவுஞ்சந்தியிற்கார்த்திகைக்கேழுடன்விளம்பெழு மூன்றுநற்ப
யறு, தரவுமுந்தொடுசொன்றிவாழ்துர்க்கைதானத்திற்பலியிட
றகைத்தே,

(இ—ள்.) அச்சுவினியிற சுரமுற்றால் கூ நாளில் விடும், இதற்கு முற்கான்னங் குதிரைப்பந்தியில் இடச் சாந்தமாம், பரணியிற் சுரமுறில் ௫ நாளிற் றீரும், இதற்குத் திலான்னம் நாற்சந்தியில் இடச் சாந்தமாம், கார்த்திகையிற் சுரமுறில் எ அல்லது உக நாளிற் றீரும், இதற்கு முற்கான்ன மாஷான்னங்களைத் துர்க்காலயத்தில் இடச் சாந்தமாம் எ-று,

முற்கான்னம் பயறுடன் கலந்த அரிசியைச் சமைத்த அன்னம். மாஷான்னம் உழுந்துடன் கலந்த அரிசியைச் சமைத்த அன்னம், பின்வரும் திலான்னம் முதலியனவும் இவ்வாறே, பாயசம்—பாற்சோறு, [கச]

---

*இருணமோசனம் - கடன்தீர்த்தல்.

## இதுவுமது.

பண்டியைந்துடன்பன்றென்றுபாயசம்பகர்பிரமத்தலங்கு
பேரன், விண்டவாறுடனென்பதுமலர்த்தொடைமேவன்னந்த
டாகமாதிரைக்குக், கொண்டவைந்துமுப்பக்கஞ்சாச்சிவப்பன்ன
ங்கொன்றைவேய்மூவொன்பான்பன்மூன், டுண்டவெண்சோறு
மாயவன்றனத்திலுறுபலியிடுகெனவோதே.

[இ—ள்.] உரோகிணியிற் சுரம் வந்தால் ரு அல்லது கக நாளிலே தீரும். இதற்குப் பாயசம் பிரமத்தானத்திலிடச் சாந்தமாம். மிருகசீரிடத்திற் சுரம் வந்தால் சு அல்லது கூ நாளிற் றீரும். இதற்குப் புட்பமாலையும் சுத்தான்னமும் குளக்கரையிற் பலியிடச் சாந்தமாம். திருவாதிரையிற் சுரம்வரின் ரு அல்லது சரு நாளில் விடும்; அல்லது மரணமுண்டாகும்; இதற்குச் சிவந்த அன்னம் கொன்றையடியிற் பலியிடச் சாந்தமாம். புனர்பூசத்தில் சுரம்வந்தால் கநு அல்லது உஎ நாளில் விடும்; இதற்குச் சுத்தான்னம் விஷ்ணுவின்தானத்திலிடச் சாந்தமாம் எ-று. [கரு]

## இதுவுமது.

பூசமேழுநல்லோதனமயானமாம்புகலரவாறுபன்னுளாங்,
தேசுமேவியநல்லிளநீர்புற்றுத்திகழ்மகநாலுமூன்றெழுநாள்,கா
சிவெள்ளன்னமீமத்திற்கணைக்குநல்லறை யெழுமூன்று முற்கா
ன்ன, மேசில்சாமுண்டிபங்குனிமும்மூன்றிற்சோறு மானினிக
ளிடமே.

[இ—ள்.] பூசத்திற் சுரம் வந்தால் எ நாளில் விடும்; சுத்தான்னம் மயானத்திற் பலியிடச் சாந்தமாம். ஆயிலியத்திற் சுரமுறில் சூ நாள் அல்லது கo நாளிலே தீரும்; இளநீர் புற்றடியிற் பலியிடத் தீரும். மகத்திற் சுரமுறில்; ச அல்லது உக நாளில் விடும்; திலான்னம் மயானத்திற் பலியிடத் தீரும். பூரத்திற் சுரம் வந்தால் உக நாளில் விடும்; பயற்றஞ்சோறு காளிகோவிலிற் பலியிடத் தீரும். உத்தரத்தில் சுரம் வந்தால் கூ நாளில் விடும்; சுத்தான்னம் லட்சுமியின் தானத்திற் பலியிடத் தீரும் எ-று. [கசு]

இதுவுமது.

அன்னியேமூலலோதனங்கருஞ்சித்திரையிருநான்கும்
பின்னுமவ்வளவைவகையோதனம்பிறழ்தருசித்திராலயங்கள்
மன்னுவாயுவீரைந்துநாற்பத்தைந்துவருமகட்கன்னநீள்காணஞ்
சொன்னவம்முறமரணமூவேழுறைதுலங்குழுந்தோதனஞ்சுனை
[யே.

[இ—ள்.] அத்தத்திற் சுரம் வந்தால் எ நாளில் விடும்; இதற்குச் சுத்தான்னமும் .சித்திரையிற் சுரம்வந்தால் அ நாளிலாதல் மேற் சித்திரையிலேயாதல் விடும்; அந்தத் தோஷம் நீங்கச் சித்திரான்னமும் நூதனாலயங்களில் இடத் தீரும். சோதியிற் சுரம்வந்தால் கо நாளில் அல்லது சடு நாளில் விடும். இந்தத்தோஷம் சாகான்னம் வனதானத்திலிடத் தீரும். விசாகத்திற் சுரம்வந்தால் மரணமுண்டாம் அல்லது உக நாளில் விடும்; இதற்கு மாஷான்னந் தடாகந்கரையிலிடச் சாந்தமாம். எ—று.

சாகான்னம் கீரைமுதலிய இலைவகைசேர்ந்த அன்னம். [கஎ]

இதுவுமது.

தாலமெட்டுமூவைந்துதேனோதனந்தண்மலர்மரவடிகேட்டை
யேலவாறிரண்டனறபிடிமாவன்னமியம்புசேட்டாலயமினிதா
மூலமூவேழுசுத்தான்னமிறையாமுக்கணனாலயநீர்நாட் [ள்ளே.
கோலவைந்துபத்தியவைசேரோதனங்குளிர்புனனடுவெனக்கொ

[இ—ள்.] அனுஷத்திற் சுரம்வந்தால அ நாளில் அல்லது கடு நாளில் விடும்; அந்தத் தோஷந் தேனோதனமும் புட்பமும் விருட்சத்தடியிலிடத் தீரும். கேட்டையிற் சுரம்வந்தால் கஉ நாளில் விடும்; இதற்கு மாவும் அன்னமும் சேட்டையாலயத்திற் பலியிடத் தீரும். மூலத்திற் சுரம்வந்தால் உக நாளில் விடும்; இந்தத் தோஷம்நீங்கச் சுத்தான்னம் சிவாலயத்திற் பலியிடத் தீரும். பூராடத்திற சுரம்வந்தால் ரு நாளிலாதல் கо நாளிலாதல் விடும்; இதற்குத் துவரம்பருப்புச்சேர்ந்த அன்னம் தண்ணீரிலிடத் தீரும். எ—று. சேட்டாலயம்—மூதேவி வசிக்குமிடம். [கஅ]

இதுவுமது.

ஆடிமாதமொன்றெட்டுநெற்கிருதமதனைலயமோணமெட்டடைசே
நீடுமோதனங்கதிரவனைலயங்கரில்புட்பத்துடன்றயிர்ச்சோ [ர்
றேடுமைம்முகனைல்பஞ்சதயமதாறிரண்டாறுசாமைப்பற் [பே.
றேடுமன்னநீர்நறுமலர்பொருந்தியசெழுங்குளக்கரையிடைசெப்

(இ-ள்.) உத்தராடத்திற் சுரம்வந்தால் ௧ மாதத்திலாதல் ௮ மாதத்திலாதல் விடும்; இந்தத்தோஷம் நீங்கக் கிருதான்னம் தாமரைத்தடாகத்திலிடத் தீரும். திருவோணத்திற் சுரம்வந்தால் ௮ நாளில் விடும்; விடாதாகில் மோதகான்னம் சூரியசன்னிதானத்திலிடத் தீரும். அவிட்டத்திற் சுரமவந்தால் ௧௰ நாளில் விடும்; இந்தத்தோஷம் ததியான்னம் சிவாலயத்திலிடத் தீரும். சதயத்திற் சுரம்வந்தால் ௯ நாளில் அல்லது ௧௨ நாளில் விடும்; இதற்குப் பஞ்சவர்ண அன்னம் குளக்கரையிலிடத் தீரும் எ-று. கிருதம்—நெய். [௪௯]

இதுவுமது.

பூரட்டாதிபன்னிரண்டாறுதுலங்கியபாலோதனங்கணேசன்
நற்படுதானமுத்தரட்டாதிநவில்பதினாலுமாவன்னஞ்
சர்ப்பகங்கணைலயங்கலமெட்டுத்தசமுழுந்தோதனஞ்சத்திர
முற்படநல்கிற்சுரமெனுமெவையுமோசனமாமெனமொழியே.

(இ-ள்.) பூரட்டாதியிற் சுரம்வந்தால் ௯ நாளிலாதல் ௧௨ நாளிலாதல் விடும்; பழமும் அன்னமும் விக்கினேசுவராலயத்திலிடத் தீரும். உத்தரட்டாதியிற் சுரம்வந்தால் ௧௪ நாளில் விடும்; மாவும் அன்னமும் சிவாலயத்திலிடத் தீரும். இரேவதியிற் சுரம்வந்தால் ௮ நாளிலாதல் ௧௰ நாளிலாதல் விடும்; இத்தோஷம் நீங்க உழுந்தன்னஞ் சத்திரத்தின்முன்பு இடத் தீரும். பலியிடுமிடத்துச் சுத்தமான கிருகத்திலே வியாதியாளன் முன்னாக மண்டலமாக மெழுகி ஆசாரியன் கிழக்கு அல்லது வடக்குமுகமாக இருந்து விக்கினேசுர பூசைபண்ணி அவ்வவ் நட்சத்திரங்களுக்குச் சொன்ன பலிகளைத் தாபித்துச் சோடசோபசாரங்களால் அருச்சித்துக் கொண்டுபோய் முன்சொன்ன தானங்களிலே அவ்வவ் நட்சத்திரங்களுக்குச் சொன்ன மந்திரங்களாலே பலியிடச் சுரமுதலான சர்வவியாதிகளுந் தீரும் எ-று. [௫௰]

## ரோக மரணயோகம்.

கவ்வைகுன்றுபுட்கேட்டையாதிரைகனல்கருதியபூதமுப்பூர,
மெவ்வமின்றியிந்நாட்களும்பன்னிரண்டாறுடனைன்பான், செ
வ்விதாயவித்திதிகளுங்கதிர்சனிசெய்பவன்றினங்களுமொன்றி,
றவ்வையாமரணயோகமாமிதிறேய்சார்ந்தவர் பிழைப்புருர்தா
னே.

(இ-ள்.) ஆயிலியம் சதயம் அவிட்டம் கேட்டை திருவா திரை கார்த்திகை பரணி முப்பூரம் இந்தநாட்களும், துவாதசி சட்டி நவமி இந்தத் திதிகளும், ஆதித்தன் சனி செவ்வாய் வாரோதயாம்சங்களும் கூடியபோது சுரம் வந்தால் அசாத்தியமாதலால் இது மரணயோகமாம் இது சுபகருமங்களுக்காகாது. எ-று. [உக]

## நோய்வரினும் விஷந்தீண்டினும் ஆகாநாட்கள்.

விளக்குமாசுணமாதிரைதுளங்கொளிமேவுமுப்பூரமென்றி
வையி, லிளக்கமின்றியெநோய்கொளிம்சாவெழுவிசைத்தனன்றி
ரும்பனைதோணி, துளக்குநாளிவையிரண்டினும்நோயுறிற்றுய
ரொழிந்தழிவிலைமூலம், வளக்குமங்கியாதிரைமகஞ்சுளகராமரு
வடுப்பார்த்தொடின்மரிப்பாரே.

(இ-ள்) விசேஷித்து இவ்விதியிற் சொன்னபடி சுவாதி ஆயிலியம் திருவாதிரை கேட்டை முப்பூரம் இந்நாட்களில் வியாதியுண்டாகில் அசாத்தியமாம். அநுஷம் இரேவதி இந்நாட்களில் வியாதி உண்டுபடிற் பீடை அல்லது பிராணபயமில்லை. மூலம் கார்த்திகை திருவாதிரை மகம் விசாகம் ஆயிலியம் பரணி இந்நாட்களில் விஷந்தீண்டினால் மீளாது எ-று. [உஉ]

## ஔஷதமுட்கொள்ளல்.

கலங்கரஞ்சகடோணமைப்பசிபனைகால்கரும்பிந்துவுத்தரங்
கள், சிலம்புபுட்குருச்சித்திரையிவைகளிற்சேய்புதன்வெள்ளி
பொன்றினங்க, ளிலங்குவெய்யவனிவர்தினமாதியிலிரிதகையிற்
சரத்துடன்மடவா, டிலங்கவாறுடனேழெட்டுச்சுத்தியாத்தோன்
றநன்றவுடதந்தொடற்கே.

[இ-ள்.] இரேவதி அத்தம் உரோகிணி திருவோணம் அசுவதி அனுஷம் சுவாதி புநர்பூசம் மிருகசிரிடம் உத்தரத்தி ரயம் சதயம் அவிட்டம் பூசம் சித்திரை இந்நாட்களில் செவ்வாய் புதன் வியாழன் சுக்கிரன் ஆதித்தன் இவர்களுடைய வாரோதயாம்சங்களும் இரித்தாதிகளும் சரராசிகளும் உபயத்திற் கன்னியும் சம்பவிக்க லக்கினத்துக்கு ௬-௭ ௮ மிடம் சுத்தியுண்டாக அவுடதங்கொள்ளல் நன்று எ-று. [௨௩]

## சுரத்துக்கும் சன்னிக்கும் ஔஷத முட்கொள்ளல்.

ஆவணங்கரமைப்பசிசித்திரையம்புலிபுகரவன்சனிமால்
மேவுவாரங்களாதிகளோரைவிளம்பியசரஞ்சராங்கிசங்க
டுவிரங்கனசுரத்தினுக்காஞ்சிவன்சுளகடுப்பனுஷமாதவனன்
ருேவியவாரமிருத்தைகள்சன்னிக்குள்மருந்தருந்திடற்குரையே.

[இ-ள்.] புநர்பூசம் அத்தம் அசுவதி சித்திரை இந்நாட்களில் சந்திரன் சுக்கிரன் சனி புதன் இவர்கள் வாரோதயாம்சங்களும், சரராசி சராஞ்சங்களும் சம்பவிக்கச் சுரத்துக்கும். திருவாதிரை விசாகம் பரணி அனுஷமும் பானுவாரமும் இரித்தையும் சன்னிக்கும் அவுடதமுண்ணலாம் எ-று. [௨௪]

## சஞ்சீவினிமருந்து உட்கொள்ளல்.

திணைமடந்தையம்புயத்தொடைப்புயத்திடைத்திகழ்செக
ராசசேகரமன், மணவைதந்தமாலிருபதாம்புயமெனமருவினர்க்
காத்துயிரளித்குங், குணமிகுந்தசஞ்சீவினிக்காதிரைக்குலவியமு
றமடுப்பனுடங், தணிவில்வெங்கதிர்வாரமதிரித்தைகள்சார்ந்தி
டினன்றெனச்சாற்றே.

(இ-ள்.) பூமிதேவி தாமரைமாலிகைபொருந்திய தோளிடத்து எப்பொழுதும் பிரிவின்றி வாழ்ந்திருக்கின்ற செகராசசேகரமன்னென்கின்ற மணவைத்தலத்தில் உற்பவித்த மகாவிட்டுணுவின் உபயபாதங்கள் அடைந்தோர்களை ரக்ஷிக்கின்ற தன்மைபோலத் தன்னைச் சேர்ந்தோருடைய பிராணனைக் காக்கின்ற அமுதசஞ்சீவனி மருந்துட்கொள்ளத் திருவாதிரை விசாகம் பரணி அனுடமென்கின்ற நாட்களும் ஞாயிற்றுக்கிழமையும் இரித்தையுஞ் சம்பவிக்க நல்லதாகும் எ-று. (௨௫)

## வாத பித்த சிலேஷ்ம ரோக அவுஷதமுட்கொள்ளல்.

வாதரோகத்திற்கோணமைப்பசிப்பணிமகிழ்குருத்திறதிநாள் சயையாந், தீதகன்குருகனில்நற்சுரர்குருப்பெறுதிறுதிகள்சார் நந்தை, மோதுபைத்தியந்தனக்குநன்றுதிரைமொழிகனலடுப் பொடுமூலம், பேதமாஞ்சரராசிசெவ்வாய்தினம்பெறுங்கபந்த னக்கெனப்பேணே.

(இ-ள்.) திருவோணம் அசுவினி ஆயிலியம் இந்நாட்களும் சயையென்கின்ற திதிகளும் வியாழனுடைய வாரோதயாஞ்ச ங்களும் வாதரோகத்துக்கு அவுடதங் கொள்ளலாம். பூசம் சோதி மூலம் இந்நாட்களும் வியாழ வாரோதயாம்சங்களும் நந் தையும் சுரராசிகளும் பித்தரோகத்துக்கு அவுடதங்கொள்ள நன்று. திருவாதிரை கார்த்திகை பரணி மூலம் இந்நாட்களும் சரராசிகளும் செவ்வாய் வாராங்கிசமும் சிலேஷ்மத்துக்கு அவு டதங்கொள்ள நன்று என்று. [உசு]

## கஅ வகை பிரமேகத்துக்கும், குட்டத்துக்கும் அவுஷதமுட்கொள்ளல்.

இருஞ்*சரத்துடனுக்கிரமிலகுவென்றினையவுமாறினமிரித் தைச, வருந்தியுற்றவீரொன்பதாம்வகைக்குநன்றருங்குட்டவகை க்குப், பொருந்துபக்கமுந்தியதாந்திவ்சமும்புகலுநாளவைகரு ந்தீதாய்ப், பரிந்துலக்கினத்தெட்டினிற்தீயவர்பயிலுறநன்மருந் தினைப்பண்ணே.

(இ-ள்.) சரம் உக்கிரம் லகுவென்கின்ற நாட்களும். புத ன்வாரம் இரித்தைகளுஞ் சம்பவிக்க பதினெட்டுவகைப் பிரமே கத்துக்கும் அவுடதம் உண்ண நன்று. திதி வார நாட்கள் எல்லாம் பொல்லாதனவாயுற லக்கினத்துக் கெட்டிற் பாவக் கிரகங்கள் நிற்கக் குட்டத்துக்கு அவுடதங்கொடுக்க நன்று என்று.

## பெருவயிறு, பித்தம், க்ஷயம், சர்வவியாதிகட்கு அவுஷதம் உட்கொள்ளல்.

பெருவயிற்றினுக்காதிரைமகமுறம்பித்தமான்றலைபடுப்பர ணங், தரணிபுத்திரன்வாரமுமாங்கயந்தனக்குச்சேய்பார்த்திடச்

---

* சுவாதி புநர்பூசம் திருவோணம்—சரம். மகம் பூரம் பரணி— உக்கிரம். அசுவினி அத்தம் பூசம்-லகு.

சட்டி, வரவொழித்திடச்*சாதாரணநாளதாய்பதித்திடுவியாதிக ட்கெல்லா, மிரவிசேய்சனியுதித்திடக்கண்டகத்தெழமருந்தியற் றுவதியல்பே.

(இ-ள்.) திருவாதிரை மகம் விசாகம் கார்த்திகை மிருக சீரிடம் பரணி ஆயிலியம் இந்நாட்களும் செவ்வாய்க்கிழமை யும் மகோதரத்துக்கு மருந்துண்ண நன்று. சாதாரண நாட் களும் சட்டி ஒழிந்த திதிகளுங் கூடச் செவ்வாய்நோக் குப்பெற்ற இலக்கினத்திலே கயத்துக்கு மருந்துண்ண நன்று. ஆதித்தன் சனி செவ்வாய் இலக்கினத்திலேயாதல் கேந்திரத் திலாதல் நிற்க சருவவியாதிகளுக்கும் மருந்துண்ணவேண் டும் எ-று, [உஅ]

## சத்திரம்வைக்க, காரமிட, சுட நாட்கள்.

முக்கணன்கேட்டைகௌவைதேட்கடையிவைமுடவன் சேய்வாரமாதிகளில், பக்கமாகியவிரித்தையில்ஞெண்டொடுபா வைமேடக்துலேயுதிப்பத், திக்கதெக்கதிபெற்றிடப்பாவர்கள்சிற ந்தகேந்திரத்துறநோக்க, தக்கநாட்பொருந்தச்சுடவிடுங்காரஞ்ச த்திரமுதவிடச்சாற்றே.

(இ-ள்.) திருவாதிரை கேட்டை ஆயிலியம் மூலம் இந்நா ட்களும் செவ்வாய் சனி வாரோதயாம்சங்களும் இரித்தாதிக ளும் கடகம் கன்னி துலாம் மேடலக்கினங்களுஞ் சம்பவிக்க அட்டமசுத்தியுண்டாகப் பாவர்லக்கினத்தேயாதல் கேந்திரத் தேயாதல் நிற்கப் பார்க்க நாட்கள் அனுகூலிக்க சத்திரம் வைத் தல் காரமிடல் சுடல் முதலிபன செய்யலாம் எ-று. (உகூ)

## அட்டைவிடல் முதலியவைக்குநாள்.

வேறு.

படத்தராக்குருவாதிரைபாவகன்
தொடுத்தபூரமூன்றிந்திரன்சோதிநாட்
டடத்தனத்திருவேகாரஞ்சத்திர
மிடச்சுடச்சலூகம்விடவேய்ந்ததே.

(இ-ள்) விசேஷித்து விதி சொன்னபடி ஆயிலியம் பூசம் திருவாதிரை கார்த்திகை முப்பூரம் கேட்டை சோதி இந்நாட் கள் சத்திரம் காரம் சுடு அட்டை இட நன்று எ-று. [௩௦]

* சாதாரணநாள் - கார்த்திகை விசாகம் பூராடம் அவிட்டம் சதயம் பூரட்டாதி.

## தயிலாப்பியங்கம்.

இரவுவாப்பதினான்கொடியம்புமொன்
றொருவுமாறெட்டுப்பன்னிரண்டுத்தரம்
அரியரன்புனிதன்சென்மமன்றியே
மருவுசங்கிரமம்விட்டெண்ணெயவார்த்திடே.

(இ-ள்.) இரவும் பூரணையும் அமாவாசையும் சதுர்த்தசி பிரதமை சட்டி அட்டமி துவாதசி என்னுந் திதிகளும், உத்தரம் திருவோணம் திருவாதிரை கேட்டை இந்நாட்களும், சென்மநாளும், சங்கிரமகாலங்களும் ஒழித்து மற்றைய காலங்களிலே தயிலாப்பியங்கம் பண்ணுக எ-று. [நக]

## ஸ்திரீபுருஷருக்கு எண்ணெய்யிட நாளும் தோஷ நிவாரணமும்.

புந்திசந்திரன்மந்தன்புமான்கழுக்
கந்தவெள்ளியொடாரலரிவையர்க்
குந்துவாரந்திதியவைதீதெனிற்
சிந்திநெய்மண்டெறித்தெண்ணெய்சேர்த்திடே.

(இ-ள்.) புதன் சந்திரன் சனி வாரங்கள் ஆடவருக்கு எண்ணெய் வார்க்க நன்று. வெள்ளி செவ்வாய் வாரங்கள் ஸ்திரீகளுக்கு எண்ணெய்வார்க்க நன்று. திதி வாரம் நாட்சழ் யோக்கியமல்லாதிருந்தால் நெய்யும் மண்ணுங் கூட்டி எண்ணைவார்க்கில் தோஷந் தீரும் எ-று. [நஉ]

## வியாதியாளர் சிசுக்களாதியோர்க்கு தயிலாப்பியங்கம்.

நண்ணுதாகம்பெரும்புகழ்நாசம்வாழ்
வண்மைமைந்தர்கள்சாவழிவாயுவாம்
விண்ணில்வெய்யவனாதிவிரும்பநோய்க்
கண்ணர்பாலர்விருத்தர்கெக்காலமே.

(இ-ள்.) சூரியவாரம் ஆதியாக தாகம் புகழ் மரணம் வாழ்வு மைந்தர்சா அழிவு ஆயு என்றடைவே பலன்களை அறியவும். வியாதியாளர்க்கும் சிசுக்களுக்கும் விருத்தர்க்கும் காலங்கள் விசாரியாமல் தயிலாப்பியங்கம் பண்ணப்படும் எ-று.

## ரோகஸ்தர் ஸ்நானஞ்செய்ய ஆகாதநாள்.

பாலைமாசியுரோகணிபாந்தள்மூன்
றேலவுத்தாஞ்சோதியிரேவதி
சீலவெள்ளிகுபேரன்மிறுதிமெய்க்
கோலநோயர்குளித்திடக்குற்றமே.

(இ-ள்.) மிருகசீரிடம் மகம் உரோகணி ஆயிலியம் உத்தரத்திரயம் சோதி இரேவதி இந்நாட்களும், சுக்கிரன் சந்திரன் வாரோதயாம்சங்களும் ரோகிகள் குளித்தற்குத் தவிரப்படும் எ-று. [௩௪]

## * ரோகமுக்தஸ்நானம்.

ஏனைநாட்களிரவிபொன்சேய்சனி
யானபுந்திதினிதிகளட்டமி
தானிரித்தைபுவாக்கள்சற்கோட்பலன்
றேனையுறுமூலைசிறந்ததே.

(இ-ள்.) முன்சொன்ன நாட்களொழித்து அல்லாதநாட்களும் ஆதித்தன் வியாழன் செவ்வாய் சனி புதன் வாரோதயாம்சங்களும் அட்டமி இரித்தை உவாக்களும் சுபக்கிரகபெலம்பெற்ற சுபராசிகளும் சம்பவிக்கக் நோய்மாறி ஸ்நானஞ்செய்க. எ-று. (௩௫)

## ஆயிரம்பிறை.

வேறு.

கருதுமானிடராயிரப்பிறைகாணிலங்கவர்வயதினன்
வருடமெண்பதுமாதமெட்டிதில்மதியமாயிரம்வந்தவா
றரியவாண்டுகளஞ்சிலஞ்சினிலதிகமாதமிரண்டுட
னுரியவாயுகமாகுவாதமுடன்படத்தொகையொன்றுமே.

(இ-ள்.) ஆயிரம்பிறை கண்ட புருஷனுக்கு வயதாவன: ஆதித்தன்வருஷம் அ௦. மாதம் அ. இதில் ஆயிரம்பிறைக்குவகை ஆதித்த சந்திர கதிகளால் ஐவைந்து வருஷத்துக்கு ஒருமுறை அதிகமாதம் வரும், அதில் இரண்டு பிறையுண்டு அதினுடனே மற்றுள்ள பிறைகளையுங் கூட்ட ஆயிரம்பிறையாம் எ-று. [௩௬]

---

* நோய்மாறிக்குளித்தல்.

## சதாபிடேகம்.

சொன்னவில் வகையாயிரம்பிறைதொழுதல்சூரியவாண்டு நூ
றென்ன*வாயுகமுற்றுவாழ்தலிசைந்தமன்னவரன்றியே
மன்னிடுங்குரவோர்விரும்பியமாறில்சொர்க்கமுறும்பொருட்
டுன்னிமிக்கசதாபிடேகமுரைத்ததாலிவையுற்றிடே.

(இ-ள்.) முன்சொன்ன ஆயிரம்பிறை தரிசித்தற்குரிய மாதவகையால் நூறுவயது சீவித்தல்செய்தார். அரசர்கள், குரவர்கள் இவர்களுக்குச் சுவர்க்கப்பிராப்திக்கேதுவாகச் சதாபிடேகம் பண்ணல்வேண்டும் எ-று. [ருஎ]

இதுவுமது.

பதங்கனுத்தரமாதல்வேறுபழித்தமாதமதன்றியே
யிதங்கொணல்வினைமாதமாமிவையிற்செனித்திடுநாளின்மூன்
றுதிர்ந்தவுத்தரமத்தமோணமுருட்கலங்கடலிவைகளில் [டே.
விதங்கொள்பக்கமுவாவிரித்தைகள்விட்டவொற்றையின் மேவி

(இ-ள்.) ஆதித்தன் உத்தராயண கெதனுனகாலத்திலேயாதல், தக்கிணாயனத்திலே சுபகர்மங்களுக்குச் சொல்லப்பட்ட மாதங்களிலேயாதல், இவையிற் சென்மநாளாதல், உத்தரத்திரயம் அத்தம் திருவோணம் உரோகணி இரேவதி சதயம் இந்நாட்களிலே நவமி அமாவாசையொழிந்த ஒற்றித்த திதிகளிற் கொள்ளவேண்டும் எ-று. [ருஅ]

இதுவுமது.

சுத்தமெட்டுறவெள்ளியோடுசுரேசன்மந்திரிபண்டிதன்
வித்தகச்சுதாகரனெனப்பகர்மிக்கவாரமுமவர்கடம்
வைத்தவோரையுமுதயமும்பெறமன்னுநாறபிடேகமுங் [டே.
தொத்திணர்த்தொடையோதிலஞ்சிதுணிந்துபண்ணநினைந்தி

(இ-ள்.) அட்டமசுத்தியுண்டாக வெள்ளி வியாழன் புதன் சந்திரன் வாரோதய ராசிகள் சம்பவிக்க சதாபிடேகம்பண்ண நன்று எ-று. [ருகூ]

---

* ஆயுகம் ஆயுள்.

கக

## சிராத்தம்.

வேறு.

மாசிபுரட்டாதியினிலபரபக்கமதித்திடுபஞ்சமிக்குமேல்வா ரவர்க்கன், தேசிரவிசேய்மந்தன்பிற்பன்னுன்காந்திதிநந்தைகழி த்தவிட்டஞ், சோதியத்தம்பூசமகஞ்சித்திரைமான்றலைபேரோண ம்புரவிபனைநீரிவையிற்புதல்வர்பாரி,யோசைபெறுகர்த்தாவென் றவர்நாண்மூன்றுமொழித்திரண்டுசிராத்தமுஞ் செய்துவனுய்ப் பாயே.

[இ—ள்.] மாசி புரட்டாதி யாகிய இரண்டுமாதங்களில் அபரபக்கத்துப் பஞ்சமிக்குமேல் ஆதித்தன் செவ்வாய் சனி வாராதிகள் சம்பவிக்க சதுர்த்தசி நந்தையொழிந்த திதிகளும் அவிட்டம் சுவாதி அத்தம் பூசம் மகம் சித்திரை மிருகசீரி டம் சதயம் திருவோணம் அசுவினி அனுஷம் பூராடம் இந்த நாட்களும் கூடக் கர்த்தாவினுடைய சென்மத்திரயங்களும் பாரிபுத்திரரின் சென்மத்திரயங்களும் தவிர்த்து (அட்டகைச் சிராத்தமும்) சபிண்டீகரண ஏகோதிட்ட சிராத்தமும் பண்ண ல்வேண்டும் எ—று

அட்டகைச் சிராத்தமாவது: ஒருவருடத்துள்வரும் கூசுரு சிராத்தங்கள். அவை - அமாவாசை க௨ வியதீபாதம் க௩ ம காளயம் கரு மன்னுவாதி க௪ சங்கிராந்தி க௨ திஸ்ரோஷ்டகை க௨ யுகாதி ச வைதிருதி கரு. [௪0]

## பிரேதகருமம்.

பற்றுதிதிபன்னுன்கிரேடுநந்தைபத்திரையென்றிவைகளு ஞ்சேய்கவிபொன்வார, முற்றகனல்கரும்புமுறமாடிதன்னேடு னும்புரட்டையுத்தரமென்றேறுநாள்க, ளுற்றசிலைமீனலவன்று லையதேறுதூயவர்களோரைகளுந்தள்ளித்தீமை, பெற்றவர்கள் பெலம்பெருகமடவாயெல்லாப் பிரேதகாரியங்களுக்கும் பேசு வாயே.

[இ—ள்.] திதிகளிற் சதுர்த்தசி நந்தை பத்திரை யிவை களுஞ் செவ்வாய் வெள்ளி வியாழன் இவர்கள் வாரமும் கார்த்திகை புனர்பூசம் விசாகம் உத்தராடம் பூரட்டாதி உத் தரம் இந்நாட்களும தனு மீனம் கடகம் துலாம் இடபம் என்

னும் சுபராசிகளும் தள்ளி ஒழிந்த திதி வார தினராசிகளிலே பாவக்கிரக பலமுண்டாகப் பிரேதகாரியங்கள் செய்தல்வேண்டும் எ—று. [சுக]

## மரணம் தகனம்.

வெய்யவன் மால்சனிதிங்கடினத்து*நந்தைமேவுசயைபூரணை மற்றிரித்தைகூடி, லையமிருமரணமெனிற்றகிக்கினன்றுமவ்வர்க்கமனைத்தினுக்குமன்றிச்சேய்பொன், றுய்யகவிவாரமுறமுக்காலுளிற்றுலங்கியபத்திரையின்மரித்திடுகிற்பிரேதம், செய்யகனற்படுகிலவ்வர்க்கத்தின்முப் பிரேதம்திண்ணமுற வளையுமெனச் செப்பினரே.

(இ—ள்.) ஆதித்த புத சந்திர வாரங்களோடு நந்தை சயை பூரணை இரித்தைத் திதிகளும் சம்பவிக்க மரிப்பினுந் தகனிப்பினும் அக்கோத்திரத்துக்கு நன்மையுண்டு. செவ்வாய் வியாழன் வெள்ளி வாரங்களும் முக்காலான நாட்களும் பத்திரையுஞ் சம்பவிக்க மரித்தாலுந் தகித்தாலும் அந்தவர்க்கத்தில் மூன்று பிரேதமுண்டென்று சொன்னார் மேலோர் எ-று.

## பாஷாணஸ்தாபனம் அஸ்திசஞ்சயனம்.

ஆருமதிபொன்கவிமால்வாரஞ்சாரிலாகாதுகல்லெடுக்கவுறையுங்காலத், தாரணிசேயிரவிசனிவாரமாதிசார்ந்திடவக்கல்லெடுக்கச்சாலநன்றாங், காரிகையாய்.†தெசாகத்துண்டாமிந்துக்காணினன்றன்றெருநான்குகருதனுசொன்பான், றேர்பதினொன்றெனுநாளில்வருணத்தொர்க்குத்திதிகளத்திசஞ்சயனஞ்செய்ய நன்றே.

---

* நந்தை—பிரதமை ஷஷ்டி-ஏகாதசி பத்திரை-துதியை ஸப்தமி—துவாதசி சயை—திருதியை அட்டமி—திரையோதசி. இரித்தை சதுர்த்தி நவமி—சதுர்த்தசி. பூரணை-பஞ்சமி தசமி—அமாவாசை—பூரணை. நந்தை, பத்திரை, சயை, இரித்தை, பூரணை, என வருமிடங்களிளெல்லாம் இவ்வாறு பொருள்கொள்க. [சரு]

† தெசாகம் — இறந்த பத்தாம்நாள்.

(இ—ள்.) சந்திரன் வியாழன் வெள்ளி புதன் வாரோதயாம்ச இராசிகளிற் கல்லெடுக்கலாகாது. செவ்வாய் ஆதித்தன் சனி வாரோதயாம்ச இராசிகளிற் கல்லெடுக்க நன்றாம். உத்தரக்கிரியைக்கு இரண்டு பிறை காணலாகாது. நாலாநாட் பிராமணருக்கும் ஐந்தாநாள் க்ஷத்திரியருக்கும் ஒன்பதாநாள் வைசியர்க்கும் பதினொராநாள் சூத்திரர்க்கும் அத்திசஞ்சயனம் பண்ணல் நன்று எ—று. இரண்டுபிறை-உ-சாந்திரமாதம். [சச]

## ஏகோதிட்டம் சபிண்டீகரணம்.

அந்தணன்சேய்கவிமுடவனிவர்கள்வாரமத்திசஞ்சயனத் திற்காகாவாகு, நந்துபன்னொன்றீராறெண்ணிரண்டாறைந்தா நாண்மேலேகோதிட்டமுதலவாதி, சிந்திநன்றென்றொருநான்கு மாகாநாட்கள்திகழீராறையொன்பான்மாதநான்கு, வந்தவிருமூன்றுபதினொன்றுசொற்றவருடமொன்றுஞ் சபிண்டிக்கு மடநல்லாயே.

(இ—ள்.) வியாழன் செவ்வாய் வெள்ளி சனிவாரங்ளில் அத்திசஞ்சயனம் பண்ணல் ஆகா; ஒழிந்தவை நன்று. பிராமணருக்குப் பதினொராம் நாளின்மேலும், க்ஷத்திரியருக்குப் பன்னிரண்டு நாளின்மேலும், வைசியர்க்குப் பதினாறுநாளின்மேலும், சூத்திரர்க்கு முப்பதுநாளின்மேலும் ஏகோதிட்டசிராத்தம் பண்ண நன்று. தகனுதி நாலுநாளும் ஏகோதிட்டசிராத்தம் பண்ணலாகாது. கஉ-ம் நாள் சுறு-ம் நாள் சு—ம் மாதம் கூ—ம் மாதம் கக—ம் மாதம் க—ம் வருஷம் என்னுமிவை சபிண்டீகரணஞ் செய்ய நன்று எ—று. (சுடு)

## இன்னமரணத்துக்கு நாளாதி வேண்டாமென்பது.

வேறு.

பரித்துமாதாப்பிதாமுதற்பான்மையோர்
மரித்திடிற்றகனுதிவருதினத்
துருத்தகன்மனுள்வாரமதோர்ந்திடா
தருத்தநன்றிரண்டாம்பிறையன்றியே.

(இ—ள்.) பிதா மாதா முதலியோர் மரணமானகாலத்து திதி வாராதி விசாரியாமல் அவ்வக்காலத்திலே தகனுதி சருவ

காரியமுஞ் செய்யப்படும். இரண்டுபிறை தரிசனமானுற் கொள்ளலாகாது எ-று. முதற்பான்மையோர்-குருமுதலியோர் (சகூ)

## நாராயணபலி.

ஈனநீரராவானையிரும்புலி
யானவாதியடுபழிதீர்ந்தவர்
வானநண்ணமறைப்படிமங்கையே
தானநாரணன்றன்பலிசெய்திடே.

(இ-ள்.) சண்டாளராதியாகச் சொல்லப்பட்டவர்களாலும் சர்ப்பத்தாலும் யானை புலி முதலிய மிருகங்களாலும் துன்மரணமாயினேர் அப்பழிதீர்ந்து சுவர்க்கமடையும்படி நாராயணபலியிடுக எ-று. [சஎ]

இதுவுமது.

அண்ணலாண்டுநிறைந்தபின்பன்னிரண்
டுன்னுபவ்வமுபயங்களாதல்சீர்
மன்னுமோணம்வரவாதல்செய்கலீர்
மின்னும்வெம்படைக்காம்வெள்ளிவேண்டிலே.

(இ-ள்.) பலியிடுமிடத்து வருஷம் நிறைந்தபின்பு துவாதசியிலாதல் பறுவத்துவயங்களிலாதல் திருவோணத்திலாதல் பலியிடுதல் இயல்பாம். வெள்ளியுடைய வாரவர்க்கங்களெல்லாம் நாராயணபலிக்குத் தவிரப்படும் எ-று. (சஅ)

## சாந்திகபௌடிகம்.

வேறு.

பெண்ணேகரும்புத்தரமூன்றனிலஞ்செக்குப்பிதிர்நாள்நாவாயோணமத்தம்பூசம், நண்ணியசிரவிட்டமெனப்பகருநாளில் நலந்திகழ்முற்பக்கத்திலிரித்தையெட்டோ, டெண்ணியவாமுவாவொளிந்ததிதியிற்சுத்தியெட்டாகச்சுரர்குருமால் வெள்ளிதிங்கள், திண்ணியவாராதிகளிலோரைகூடச்செய்சாந்திபௌடிகத்தைத்திருவொப்பாயே.

(இ-ள்.) அனுஷம் புனர்பூசம் உத்தரத்திரயம் சுவாதி சதயம் மகம் இரேவதி திருவோணம் அத்தம் பூசம் அவிட்டம்

இந்தநாட்களிலே பூருவபக்கத்து இரித்தை அட்டமி உவா வொழிந்த திதிகளிலே வியாழன் வெள்ளி புதன் திங்கள்வா ரோதயாம்சவிராசிகள் சம்பவிக்க அட்டமசுத்தியுண்டாகச் சா ந்திகபௌடிகஞ் செய்யவேண்டும் எ—று. [சகூ]

பலவினைபடலம் முற்றிற்று.

ஆ விருத்தம் உ௦அ.

---

## வேந்தர்வினைப் படலம்,

### இராசாபிடேகம்,

ஓதியவுத்தராயணத்திற்குடநீத்தலாதுத்தமமத்திமங்கன்னி சிலைநண்டன்றித், தீதறுதக்கிணாயனமுற்பக்கநன்றாந்திகளவர்மூ ன்றாங்கூறாகவன்றிப், பேதமுறுமிருபக்கமவையில்விட்டிபிறழ் பக்கச் சித்திரையென்றிவைகணித்து, வேதியன்மால்புகரிந்து வாரமாதிவிரும்பியெட்டேசுத்திபெறவேண்டுவாயே.

(இ—ள்.) உத்தராயணத்தில் மாசியொழிந்த மாதங்கள் உத்தமம். தக்கிணாயனத்திற் புரட்டாதி மார்கழி ஆடியொழி ந்தல்லாத மாதங்கள் மத்திமம். இவைகளிலே பூருவபக்கத்தி லாதல் அபரபக்கத்துத் தசமிக்குள்ளேயாதல் விட்டிபக்கச் சித்திரை தவிர்ந்து மற்றைய சுபதிதிகளிலே வியாழ சுக்கிர புத சந்திர வாரோதயாம்சங்கள் சம்பவிக்க அட்டமசுத்தியுண் டாகக் கொள்ளவேண்டும் எ—று,

பக்கச்சித்திரை சதுர்த்தி நவமி சதுர்த்தசி ஷஷ்டி அ ட்டமி துவாதசி இவை. [க]

இதுவுமது.

மங்கைதுலைமகரந்தேளொழித்தல்லாதுவருமோரைபெற வானமலினநீங்க, வங்கையுருடேர்கரும்புபூசமோணமம்புலியிந் திரன்போந்தைதோணிமூன்றாய்ப், பங்குறுமுத்தரம்புரவிபயறிந் நாளிற்பகற்காலத்தபிடேகஞ்சூட்டநன்றாம், மிங்கிதனின்மடநல் லாய்நம்பிராட்டிக்கிளங்குமரர்க்கிவ்விதியையியற்றிக்கொள்ளே.

(இ-ள்.) அத்தம் உரோகிணி புநர்பூசம் பூசம் திருவோணம் மிருகசீரிடம் கேட்டை அனுஷம் இரேவதி உத்தரத்திரயம் அசுவினி சித்திரை இந்நாட்களும் கன்னி துலாம் மகரம் விருச்சிகமொழிந்த இராசிகளுஞ் சம்பவிக்க ஆகாயம் நிர்மலமாகப் பகலிலே இராசாக்களுக்கு அபிடேகஞ்செய்ய நன்றும். வாலாபிடேகத்துக்கும் ராஜஸ்திரீகளுக்கும் இவ்விதிப்படியே கொள்ளப்படும் எ-று. [உ]

## பட்டங்கட்டல் முத்திரைமோதிரங் கொடுத்தல்.

மன்னவர்க்கும்பன்னியர்க்குஞ்சாமந்தர்க்கும்மந்திரிக்குஞ் சேவகர்க்குமற்றுளோர்க்குங், பன்னிலென்றும்யானைகட்கும்பரிக்கும்பட்டமியற்றிடுகிலபிடேகப்படியேகாண்க, கன்னமதிகுருவனுஷஞ்சகடுசோதிகடலொடுமூன்றுத்தரங்கடொடங்கிமூன்றின், முன்னுறுவாரோதபங்கணன்றாய்வேந்தர்முத்திரைமோதிரங்கொடுக்கமொழிந்திடாயே.

(இ-ள்.) இராசாக்களுக்கும்பன்னியர்க்கும்சேனாதிபதிகளுக்கும் மந்திரிகளுக்கும் சேவகர்க்கும் மற்றும் உத்தியோகஸ்தருக்கும் யானை குதிரைக்கும் பட்டங்கட்டுமிடத்துதிதியாதியெல்லாம் அபிடேகத்துக்குச் சொன்னபடியே கொள்ளவேண்டும். புநர்பூசம் மிருகசீரிடம் அனுஷம் ரோகிணி சுவாதி சதயம் உத்தரத்திரயம் அத்தம் சித்திரை திருவோணம் அவிட்டம் ரேவதி அசுவினி இந்நாட்களிலே அபிடேகத்துக்குச் சொன்ன சுபவாராதிகளிலே முத்திரைமோதிரங்கொடுக்க நன்றும் எ-று. [ங]

## மங்கலங்கேட்டல்.

சிவிகைகரங்கொடிரோணங்கரும்புகேட்டைசெங்கைபனையுத்தரமூன்றசுவினியிந்நாளிற், சவுமியன்பொன்றிங்கள்கதிர்வெள்ளிவாரஞ்சாருமுதயாதிகளிலிரண்டொன்றைந்தே,ழவமறுமெட்டாறொருபதைமூன்றயவத்திதியின்மங்கலநன்றருக்கனுதி, கவையகல்சீராயுவினைவாழ்வுசெல்வங்கைப்பொருள்சாவெனப்பலன்கள்கருதுங்காலே.

(இ-ள்.) உரோகிணி அத்தம் பூசம் திருவோணம் புநர்பூசம் கேட்டை திருவாதிரை அனுஷம் உத்தரத்திரயம் அசு

வினி இந்நாட்களும் புதன் வியாழன் சந்திரன் சூரியன் சுக்கிர வாரோதயாதிகளும் பிரதமை துதியை பஞ்சமி சத்தமி அட்டமி சட்டி தசமி பூரணை இத்திதிகளும் மங்கலங்கேட்க நன்றும். ஞாயிருதி வாரபலன்களாவன, சிறப்பு ஆயுசு பகை வாழ்வு செல்வம் கைப்பொருள் மரணம் இவைகளைநிரையே காண்க. ஞாயிறு துன்பமென்பதுமொன்று. [சு]

## சங்கீத நிருத்தாதி.

உடைகுளம்பாவகன்கொடிறுசுளகுதோணியுருத்திரனுவணியடுப்புப்பயறிந்நாளிற், புடைதருநற்றிதிகளில்வாராதியெல்லாம்பொருந்தியநற்கோள்கள்பெற்றராசிதேள்கர்க், கடகமரிமிதுனம்விற்றுலைமீன்வாய்ப்பக்கலந்திடுசெங்கீதமுடன்கவிஞர்சொற்ற, விடமுடையநிருத்தாதிகன்மமெல்லா மிளங்கொடியாயிவைகூடவியற்றுவாயே.

(இ-ள்.) பூராடம் கார்த்திகை பூசம் விசாகம் இரேவதி திருவாதிரை அவிட்டம் பரணி சித்திரை இந்நாட்களிலே சுப திதிகளும் சுபக்கிரக வாராதிகளுங் கடகம் சிங்கம் மிதுனம் தனு துலாம் மீன ராசிகளுஞ் சம்பவிக்க நிருத்தகீதாதிகள் காணக் கேட்க நன்று எ-று. [௫]

## நவகரம்.

புணர்தமுருடேர்பவனமத்தமோணம்பூராடமான்றலைபுட்பயறுமூன்று, புணர்வருமுத்தரமாதிரையின்னுளிலுயர்குருபார்க்கவன்புந்தியிவர்வாராதி, யணையவிருநான்கிருத்தைவேதன்பக்கமமாவாசையொளிதிதியிலாடுசாடி, குணமுறுதேளன்றியெட்டேசுத்தியாகக்குலவியபூவிறைகரங்கள்கொள்ளலாமே.

(இ-ள்) புநர்பூசம் ரோகணி சுவாதி அத்தம் திருவோணம் பூராடம் மிருகசிரிடம் அவிட்டம் சித்தரை உத்தரத்திரயம் திருவாதிரை இந்நாட்களில் வியாழன் சுக்கிரன் புதன் இவர்கள் வாரோதயாம்சங்களும் அட்டமி இரித்தை பிரதமை அமாவாசையொழிந்த திதிகளும் மேடம் கும்பம் விருச்சிகம் இவையொழிந்த இராசிகளும் அட்டமசுத்தியுமுண்டாக இறைகரங் கொள்ளப்படும் எ-று. [௬]

## இராஜதரிசனம்.

அயமுலக்கைபுட்கரங்காற்குளநேர்வாளேடறைகலந்தேர் பனைசசிமூன்ருகுந்துய, வயமுறுத்தவுத்தரங்களிவையிற்புந்தி மதிகவிபொன்னிவர்வாரோதயாதியாகப், பயமுறுத்தவிரித்தை யுவாவெட்டுவிட்டிபழித்தனுகூலிக்கவிரும்பாரேழ்தாங்கும், நய முறுத்தமன்னர்தமைக்காண்கநன்றுநன்றுதிரமுபயமெனி னடுவ தாமே.

(இ-ள்.) அசுவினி திருவோணம் அவிட்டம் அத்தம் பூசம் சித்திரை இரேவதி உரோகிணி அனுஷம் மிருகசிரீடம் உத்தர த்திரயம் இந்நாட்களும் புதன் சந்திரன் சுக்கிரன் வியாழன் இ வர்கள் வாரோதயாம்சங்களும் இரித்தை பூரணை அமாவாசை அட்டமி விட்டியொழிந்தவைகளுஞ் சம்பவிக்க அனுகூலராசியி லே இராசாக்களைக் காண நன்று. உபயராசி மத்திமம் சரராசி அதமம் என்று சொல்லப்படும் எ-று. [எ]

## இராஜதரிசனத்துக்குவிசேஷவிதி.

மன்னுகாத்தியாயனசூத்திரத்துமன்னியகாசிபகோத்ரமரு வுகேண்மைச், செய்யசதுர்மறைவாய்மைக்காசிவந்தசெகராசசே கரனுமன்னனுதி, துய்யபுகழ்ப்பூசுரமன்னவரைக்காணச்சோபன ஞ்சேர்மன்னவரைக்காணலாகும், வெய்யமரும்வணிகர்குலவே ந்தர்க்கன்றிவேளாளவேந்தர்க்காம்வெய்யோன்சேயே.

(இ-ள்.) ஆகாவென்ற மூன்றுவாரங்களில் ஞாயி ற்றுக்கிழமை காத்தியாயன சூத்திரத்தையுடைத்தாகிய காசி பகோத்திரத்து அவதரித்த கிருபையுடைத்தாகிய நாலுவேத த்தை வாக்கிலேயுள்ள காசியம்பதியை இடமாகப்பெற்ற செ கராசசேகரன் முதலான இராசாக்களைக் காண நன்று. செவ் வாய் க்ஷத்திரியவரசர்களைக் காண நன்று. சனி வைசிய இராசா க்களையும் சூத்திர இராசாக்களையும் காண நன்று எ-று. [அ]

## இராஜசேவை.

வேறு.

உத்தரமூன்றுதோணியுருள்பனைபூசமோண
மத்தமிந்தயம்நேர்வான்புள்ளாகுமிந்நாட்கள்காசின்

கொத்தணிமுடிக்குச்சொன்னகுணங்கள்வாராதிபக்கஞ்
சுத்தம்வந்துதிப்பவேந்தைத்துயரறச்சேவைசெய்யே.

(இ-ள்.) உத்தரத்திரயம் இரேவதி உரோகணி அனுஷம் பூசம் திருவோணம் அத்தம் மிருகசீரிடம் அசுவினி சித்திரை அவிட்டம் இந்நாட்களிலே திதி வாரோதய லக்கின சுத்தமெல்லாம் அபிடேகத்துக்குச் சொன்னபடியே இராசசேவைசெய்ய நன்று எ-று. [௯]

## அத்திரசத்திராப்பியாசம், ரதாரோகணம்.

வேறு.

மாசிகலம்புரவியுருள்மதிபுநர்தம்பணையோணம்வாயுவத்தம்
பூசமொடுசித்திரைமூன்றுத்தரங்களிந்நாளிற்புந்திவெய்யோன்
தேசுறுமம்புலிகவிபொன்றினமுதயமாதிபெறத்திகழுநந்தை
யேசறுபூரணையில்வில்வாளியற்றநெடுந்தேரேறவிசைத்தாரென்
[னே.

(இ-ள்.) மகம் இரேவதி அசுவினி உரோகிணி மிருகசீரிடம் புநர்பூசம் அனுஷம் திருவோணம் சுவாதி அத்தம் பூசம் சித்திரை உத்தரத்திரயம் இந்நாட்களிற் புத சூரிய சந்திர சுக்கிர வியாழ வாரோதயாம்சங்களும் நந்தை பூரணையாகிய திதிகளும் சம்பவிக்க அத்திர சத்திராதிகள் அப்பியாசம்பண்ணவும் தேரேறவும் நன்று எ-று. [௧0]

## வில், வாள், முதலியவற்றின் பிரமாணம்.

சிந்திக்குமிரதவிதிசிற்பத்திலாகுநெடுஞ்சிலைக்குநீளம்
வந்தித்தநான்குதலைதொண்ணூறென்றறைவர்வடிவாட்குநீளம்
பந்தித்தவிரலைம்பானுகுமெனப்பகர்வரிவ்வாட்பற்றுவோர்க்கு
முந்துற்றபொருத்தவகைமுனிவோர்களுரைப்படியேமொழிவா
[ய்மின்னே.

(இ-ள்.) இரதலக்கணங்களெல்லாம் மானஸாரம் காசியபம் முதலான சிற்பசாத்திரங்களிலேவிரிவாகஉள்ளன. சிலைக்கு நீளம் தொண்ணூற்றுநாலங்குலம் என்றும் கட்கத்துக்கு நீளம் ஐம்பதங்குலமென்றும் ஒருவகையாகச் சொல்லப்பட்டது. இந்தக் கட்சந் தரிப்பவர்க்குமனுகூலம் வேண்டும் எ-று. [௧௧]

## மானவிதானம்,

சுற்றெயில்கோபுரமிரதந்துவசதண்டம்தெண்டாகுந்துலங்குவிம்பம், பற்றியவாசனஞ்சுடர்வாள்பயில்காளங்கலம்விளக்குப்பரிசைசாபந், தொற்றியந்தர்ப்பணம்வாசல்காலிவைகள்விரலாகுஞ்சின்னங்காசு, நற்றுகொழுவாபரணமிவையவையாமளவுநாட்டுங்காலே.

(இ—ள்.) மதில், கோபுரம், இரதம், கொடி, மரம், இவை தெண்டளவாற் கொள்ளப்படும். பிரதிமை, சிங்காசனமுதலான ஆசனங்கள், கட்கம், காகளம், கலம், தீபம், கேடகம், தனு,வாத்தியம், கண்ணுடி, துவாரம், தம்பம், இவைகள் அங்குலவளவாற் கொள்ளப்படும். முத்திரைக்காசு கொழுபூஷணம் இவை இயவையளவாற் கொள்ளப்படும் எ—று. [கஉ]

## கட்கானுகூலியம்.

வேறு.

அம்சுடர்வாளினீளமளந்திறைவலதுசெங்கை
நடுவிரலிறையதாக்கிநற்றியகுணத்தாற்றுக்கிக்
கொடைநிதியுடனேகூட்டிக்கோவினுலீந்தசேடந்
தொடிபடுமங்கைநல்லாய்துவசமேமுதலாய்ச்சொல்லே.

(இ—ள்.) கட்கத்தை யளவெடுத்துக் கர்த்தாவினுடைய தெக்ஷிண அத்தத்திலே மத்தியாங்குலியின் மத்திய பர்வத்தினடு வொன்றுகச் சேர்த்து மூன்றுற் பெருக்கி ஒன்பதுகூட்டி எட்டாலீய்ந்து நின்ற சேடத்தை துவசமுதலாகப் பலன்கண்டு கொள்ளப்படும் எ—று. [கங]

## துவசாதிகளின் பலன்

கேதணம்பொருளாந்தூமங்கேடதாஞ்சியம்வென்றி
யோதுநாய்பீடையாமேறுறுபுவிபுரக்குங்கோகு
தீதுறுவிதனந்தந்திசெல்வங்கார்மகளேயாகிற்
போதணிகுழலாய்நன்மைபொருந்திடாதென்றுபோற்றே.

(இ—ள்.) கொடியாகில் அர்த்தலாபம், புகையாகில் மரணம், சிங்கம் வெற்றி, சுவானம் பிணி, இடபம் சௌபாக்கியம்,கழுதை துக்கம், யானை பாக்கியம், காகம் நிர்பலமென்றறிவது எ—று, [ ]

## கெஜகர்மம்.

கந்துகங்கொடிறுமாசிகரம்பனையிந்துதோணி
முந்தியகரும்புசோதிமும்மையுத்தரங்களோணம்
வந்தபுள்ளுருளிந்நாளின்மதியவன்மறையோன்வெள்ளி
புந்திவாராதியோரைபுகக்கெசகர்மம்போக்கே.

(இ-ள்.) அசுவினி பூசம் மகம் அத்தம் அனுஷம் மிருகசீரிடம் இரேவதி புநர்பூசம் சோதி உத்தரத்திரயம் திருவோணம் அவிட்டம் உரோகிணி இந்நாட்களிலே சந்திர வியாழ சுக்கிர புதவாரோதயாம்சங்கள் சம்பவிக்க; கெசகர்மஞ் செய்யலாம் எ-று. [கடு]

## யானையேற, அங்குசம்பிடிக்க.

நல்லவர்சிறந்தவோரைநாட்டியகால்கள்சாரப்
புல்லியபக்கம்நன்றாய்ப்பொருந்தவெங்கரிக்கும்வெய்ய
மல்லலங்குசமேற்கொள்ளமதித்ததாமரையோரீதிற்
சொல்லலில்சாலைகட்டற்குரைத்ததுமிவ்வாறன்றே.

(இ-ள்.) சுபக்கிரகங்களுடைய காலவோராம்சங்கள் சம்பவிக்கச் சுபதிதிகளிலே யானைகளுக்கு அங்குசம்வைக்க ஆரோகணம்பண்ண நன்று. இதற்குப் பந்திகட்டவு மிப்படியே கொள்ளப்படும் எ-று. [கசு]

## சதுர்ப்பாதசாலை.

வேறு.

அங்கியினிருதியீதிலானசமெருமைவாயுத்
தங்கியதிசையிலாகுஞ்சாருமீசானமீது
துங்கமாவுறைதற்காகுந்துவாரத்திற்கிடமேயாகி
லெங்குமாந்தந்திவாசியிவையுடைசாலையென்னே.

(இ-ள்.) அக்கினிகோணத்திற் பசுச்சாலைகட்ட நன்று. நிருதியில் ஆட்டுச்சாலைகட்ட நன்று. வாயுகோணத்தில் மகிடச்சாலைகட்ட நன்று. ஈசானத்தில் யானை குதிரைப்பந்தி கட்ட நன்று. கர்த்தாவினுடைய கிருகத்துவாரத்துக்கு வாமபாகமாகில் எந்தத்திக்கினும் யானை குதிரைப்பந்திகட்ட நன்று எ-று. [கஎ]

## அசுவகன்மம்.

பரிகளைசோதிதோணிபரணியிந்தங்கிகாக்கை
குருமுறமிவைவில்வெள்ளிகூரியோன்செம்பொன்றிங்கள்
விரவியவாரமாதிமிகத்திரனெண்டுசாரப்
புரவியின்கருமஞ்செய்யப்புனையிழையிரித்தைபோக்கே.

(இ-ள்) அசுவினி புநர்பூசம் சோதி இரேவதி பரணி மிருகசீரிடம் கார்த்திகை அவிட்டம் பூசம் விசாகம் இந்நாட்களிற் சுக்கிர புத வியாழ சந்திர வாரம்சாதிகளும் திரராசிகளும் கடகமும் இரித்தையொழிந்த திதிகளும் அசுவகன்மஞ் செய்தற்கு நன்று எ-று. [கஅ]

## பால்கறத்தல், தறிநாட்டல், தயிர்கடைதல், வெண்ணெயுருக்கல்

கண்ணியநல்லநாளிற்கதிர்மதியுதிக்குமோரை
நண்ணப்பால்கறக்கச்சேர்க்கநற்றயிர்கடையநன்றாந்
தண்மதிவாரத்தோரைசசியெழத்தறிக்குநன்று
வெண்ணெயதுருக்கத்திங்கள்மேவுநாட்சுளகுநன்றே.

(இ-ள்.) சுபதினத்திலே சந்திரோதய லக்கினத்திலே பசுக்கட்டக் கறக்கத் தயிர்கடைய நன்று. சந்திரவாரமும் சந்திரோதய லக்கினமும் சம்பவிக்கத் தறிநாட்ட நன்று. சந்திரவாரமும் விசாகநட்சத்திரமுங்கூட வெண்ணெயுருக்கநன்று.எ-று.

## சுவாதி சம்பாதியோகம்.

விளக்கினிற்சுடரோன்காலமேவியவுலகுள்ளோர்க்குத்
துளக்குறுபீடைசெய்யுஞ்சுவாதிசம்பாதியோகங்
கிளக்குமக்காலைசாந்திகேண்மைமன்னவர்க்குவேண்டுங்
குளப்புறுகற்கிசாந்திகோல்வளைவிதித்துக்கொள்ளே.

(இ-ள்.) சுவாதிநாளிலே ஆதித்தன் நிற்குங்காலை சுவாதி சம்பாதியோகமாம். இக்காலம் உலகத்திற்குப் பீடையுண்டென்கையால் இராசாக்களாற் சாந்திபண்ணுவிக்கப்படும். விசேடித்து அசுவாதிகட்குத் தீங்குவாராமல் இக்காலத்திற் சாந்திபண்ணவேண்டும் எ-று. [உ0]

## அசுவசாந்தி கெஜசாந்தி.

ஐப்பசிமாதமன்றியங்கிநான்மாதமாத
லெய்ப்புறுமுதலாம்பக்கத்திருநான்குபன்னொன்றீரா
றெப்புறுதிதிகள்கூடவோரைகளசுவசாந்தி
மெய்ப்புறச்செய்யினுய்யும்வேந்தயம்வேழமின்னே.

(இ-ள்.)ஐப்பசி கார்த்திகை மாதத்திலே பூருவபக்கத்தில் அட்டமி பூரணை துவாதசித் திதிகளும் பெலம்பெற்ற சுபலக்கினங்களும் சம்பவிக்கச் சாந்திசெய்யில் அரசர்க்கும் யானைக்கும் குதிரைக்குஞ் சுகமுண்டு எ-று. [உக]

## திருவாண்டெழுதல்.

ஆதவன்மிதுனத்தன்றியலவனினிற்குங்காலத்
தோதியபுநர்தஞ்செங்கையில்லனுகூலவோரை
தீதறுபெலன்கள்பெற்றுத்திகழ்ந்தெழமகிழ்ந்துவேந்தை
யேதமில்திருவாண்டேற்றவெழுத்தினையிடுவிப்பாயே.

(இ—ள்.) ஆனிமாதத்திலாதல் ஆடிமாதத்திலாதல் புநர்பூசம் திருவாதிரை இந்நாட்களும் சுபலக்கினமுஞ் சம்பவிக்கத் திருவாண்டெழுத நன்று எ—று. [உஉ]

## அகத்தியபூசை.

கன்னிநாட்டன்னில்வெய்யோன்கலந்திடுகாலத்தாய
மின்னியபகன்முகத்துவிளம்புதெக்கிணத்துக்கும்பந்
தன்னிடைப்பிறந்தோற்கர்க்கியந்தரணியில்வேந்தர்நல்லோ
ரன்னவரளிக்கில்வாழ்வுமாயுவும்புகழுமாமே.

(இ—ள்.) அத்தநட்சத்திரத்தில் ஆதித்தன் நிற்கும்காலம் உதயகாலத்திலே தெக்கிணதிக்கிலே கும்போற்பவராகிய அகஸ்தியருக்கு அரசர்முதலியோர் அர்க்கியங்கொடுத்துப் பூசை செய்தால் வாழ்வும், ஆயுளும், கீர்த்தியுமுண்டாம் எ-று. [உரு]

வேந்தர்வினைப்படலம் முற்றிற்று.

ஆ விருத்தம் உரூக.

---

# யாத்திரைப்படலம்.

## யாத்திரைக்குக் கோசரசுபம் முதலியன.

நன்மைசால்கோசரங்கணயந்திடுகாலமாக
விண்மலிபுகரோன்புந்திமேதினிமைந்தனென்போன்
முன்னிடமொழிந்துமற்றைமொழிகுருவெள்ளியாயோர்
புன்மைகளொழிந்துநன்றாய்ப்புகலுயாத்திரைக்குப்பொன்னே.

(இ—ள்.) சென்மலக்கினத்துக்கும் சந்திரலக்கினத்துக்கும் கோசரசுபம்பெற்றகாலத்து வெள்ளி புதன் செவ்வாய் இவர்கள் எதிரும் வாமமுமொழிந்து குரு சுக்கிராஸ்தமயனங்களுந் தவிர்ந்து யாத்திரை செய்தல்வேண்டும் எ-று. [௧]

## கோசரவிதி சென்மமுதல்.

வேறு.

கோளனைத்தும்பன்னொன்றுமாறுமூன்றுகுலவியபத்தருக்கற்காமிதிற்பத்தோம்பில், வாளுறுசெய்மந்தற்காமூன்றுபத்து வழங்காறேழொன்றுபனிமதிக்காம்பத்துத், தாமுறுமேழாறொழிந்தவெல்லாம்வெள்ளிதனக்காமைந்திரண்டேழ்தக்கவொன்பான், கேளுறுமந்திரிக்காமாறெட்டுப்பத்துக்கிளரிரண்டினன்கிற்புதன்கிட்டினன்றே.

(இ—ள்.) ஏகாதசந்தன்னில் நவக்கிரகங்களும் நல்லர். ஆதித்தன் ௬-ல் ௩-ல் ௧௦-ல் நல்லன். செவ்வாய் சனி ௩—ல் ௬—ல் நல்லர். சந்திரன் ௩—ல் ௬-ல் ௭—ல் ௧௦—ல் ௧—ல் நல்லன். சுக்கிரன் ௧௦-ம் ௭-ம் ௬—ம் ஒழிந்தவிடங்களின் நல்லன். வியாழன் ௫—ல் ௨-ல் ௭—ல் ௯-ல் நல்லன். புதன் ௬—ல் ௮-ல் ௧௦—ல் ௪—ல் ௨-ல் நல்லன் எ—று. [௨]

## சந்திரலக்கினகோசரவிதி.

வேறு.

நற்பதியக்ற்றும்போதநடைதருமரசர்தம்மாற்
பொற்புறுசெல்வங்காட்டும்பொருந்துநோய்பீடைசேர்குஞ்
சொற்படுவினைசள்தீர்க்குந்தூரம்போநோய்சாவாக்கும்
பற்பொருள்பூமிநல்கும்பழிதருமிரவிபாவாய்.

(இ—ள்.) ஆதித்தன் நிற்கப்பெறுஞ் சென்மம் பதியகற்றும். உ சலிப்புண்டாக்கும். ௩ அரசராற் செல்வந்தரும். ச வியாதிதரும். ரு துக்கப்படுத்தும். சு சத்துருவைச்செயிப்பிக்கும். எ பிரயாணப்படுத்தும். அ வியாதிதரும். கூ மரணந்தரும். ௧௦ அர்த்தலாபந்தரும். ௧௧ பூமிலாபந்தரும். ௧௨ தீங்குதரும் எ-று. [௩]

## சசிபலம்.

ஓதனமுதவுமத்தமொழிக்கும்பொன்பெருக்குநோயாம்
மேதகுகருமக்கேடாம்விளைந்திடும்வித்தமேமந்
தீதறவிளைக்குஞ்சாவாந்திகழ்மன்னர்பயமுண்டாக்கு
மாதியசுபமிலாபமளிக்கும்பொன்னகற்றுமாலோன்.

(இ—ள்.) சந்திரனிற்குஞ் சென்மம் அன்னந்தரும். உ தனமழிக்கும். ௩. திரவியந்தரும். ச வியாதியுறுத்தும். ரு கருமமழிக்கும். சு திரவியலாபமுண்டாக்கும். எ அர்த்தந்தரும். அ மரணந்தரும். கூ அரசர்கோபந்தரும். ௧௦ சௌக்கியப்படுத்தும் ௧௧ லாபிப்பிக்கும் ௧௨ சேதந்தரும் எ-று. [ச]

## சனி குசன் அரவு பலம்.

பெருக்குமெய்ச்சோபங்கெடுபிறங்கியவெற்றிநோய்க
ளருக்கியமோகநன்மையாம்பழிவிதனம்பீடை
நெருக்கியவிவாதங்காட்டுநிகழ்ந்திடும்விவாகங்கூட்டுந்
தருக்கியவிரோதஞ்சேர்க்குஞ்சனிகுசனரவுதாமே.

(இ—ள்.) சனி குசன் அரவு மூன்றும் நின்ற சென்மம் வியாதியுறுத்தும் உ நாசந்தரும். ௩ வெற்றிதரும். ச நோய்செய்யும். ரு மோகிப்பிக்கும். சு நன்மைசெய்யும். எ பழிப்படுத்தும். அ துக்கப்படுத்தும். கூ கிலேசப்படுத்தும். ௧௦ பகைப்பிக்கும். ௧௧ விவாகந்தரும். ௧௨ விரோதிப்பிக்கும் எ-று. (ரு)

## புதன்பலன்

பிணிப்புமெய்ப்பொருளோடொன்னார்பெரும்பயமிடியுண்டாக்குந்
தணிப்பறுகலஞ்னெய்மானந்தரும்பயமளிக்குந்தக்க
கணிப்புறுமழகுசெல்வங்காட்டுநோய்படுக்குஞ்சித
வணிப்பணிக்கிரணக்கற்றையம்புலிமைந்தன்றானே.

(இ-ள்.) சென்மத்திற் புதன்னின்றுற் சிறைப்படுத்தும். உ அர்த்தலாபம். ந. சத்துருபயம். ச. தரித்திரம். ரு. பூஷணம். சு தூக்கம். எ. மரணம். அ. பயங்கரம். கூ கணிப்பு. க0. சுகம். கக. செல்வம். கஉ. வியாதி. எ-று. [சு]

## குருபலன்.

மனத்தடுமாற்றங்கல்விவாதுநோய்நன்மைதுக்கந்
கனப்படுசெல்வமாக்குஞ்சருதியசோகங்காட்டுஞ்
சினக்கயல்விழியார்ச்சேர்க்குந்திகழ்பதிபிரிக்குமேம
மினப்பழுதளிக்குமண்டத்திமையவர்குரவனென்னே.

[இ-ள்.] சென்மத்தில் வியாழன்னின்றுல் சித்தப்பிரமம். உ. கல்வி. ந. விரோதம். ச நோய். ரு சுகம். சு துக்கம். எ சோபனம். அ வியாதி. கூ ஸ்திரீசேர்வு. க0 தானநாசம். கக லாபம். கஉ வெந்து நாசம். எ-று. [எ]

## சுக்கிரன்பலன்.

நோயறும்புகழ்சிர்நன்மைநுவன்மகவளிக்குமத்த
மாய்வுறுஞ்சிந்தைநோவுவருத்துமெய்ப்பொருள்பூணுக்கு
மேயுமெய்ப்பீடைகாட்டுமெவைகளுமிலாபமாக்குங்
காயமேபெருக்குஞ்செல்விகலைப்பெருங்கவியோன்கானே.

[இ-ள்] சென்மத்திற் சுக்கிரன்னின்றுல் ஆரோக்கியம். உ கீர்த்தி. ந செல்வம். ச சோபனம். ரு புத்திரவிருத்தி. சு அர்த்தசேதம். எ மனஸ்தாபம். அ தனலாபம். கூ பூஷணம். க0 வியாதி. கக பலபொருளிலாபம். கஉ தேகபுஷ்டி. எ-று. [அ]

## சூரியகோசரவேதை

### வேறு

அறைகதிர்பன்னேன்றுறமூன்றீரைந்தமறுகோட்களெந்திரா
றிறைதருமொன்பானுன்குறில்விருத்தமெட்டுளான்கைந்திரண்
டொன்பான், மறைதருமொன்றேழாறிரண்டாகாமன்னியவெ
ட்டுமூன்றுறே, மறையிரண்டீரைந்தொருமையேழ்பன்னென்
சிறன்றி னன்றுறுசனியொழித்தே.

[இ-ள்] ஆதித்தன் கக-ல் நல்லன். சனியொழிந்தகிரகங்கள் ரு-ல் நிற்பின்விருத்தம். சு-ல் நல்லன். கஉ-ல் கோள்நிற்பின் விருத்தம் ந-ல் நல்லன் கூ-ல் கோள் நிற்பின் விருத்தம். க0-ல் நல்லன். ச-ல் கோள்நிற்பின் விருத்தம் அ-ல்- ஆகான். அதிற்கோள்நிற்பின் விருத்தம். சல் ஆகான். ந-ல் கோள்

நிற்பின் விருத்தம். ரு-ல் ஆகான். கூ-ல் கோள்நிற்பின் விருத்தம் உ-ல் ஆகான். அதிற்கோள்நிற்பின் விருத்தம். கூ-ல் ஆகான் க௦-ல் கோள்நிற்பின்விருத்தம். சென்மத்திலாகான். அதிற்கோள் நிற்பின் விருத்தம். எ ல் ஆகான். அதிற்கோள்நிற்பின்விருத்தம கஉ ஆகான். கக ல் கோள்நிற்பின் விருத்தம். எ—று. [கூ)

## சந்திரகோசரவேதை

அம்புலியேழொன்றுபன்னொன்றீரைந்துமூன்றுமிரண்டைந்து, வம்பில்பன்னிரண்டெட்டிரண்டொன்பான்மற்றவர்விருத்தமாமிரண்டு, நம்புநான்கைந்தெட்டாறிரண்டொன்பானன்றலவொன்றுமூன்றெட்டே, றிம்பர்பன்னொன்றுபத்துறின்வேதையிரும்புதனொழிவதாமியல்பே.

[இ—ள்] சந்திரன் ஏ—ல் நல்லன். புதனொழிந்த கிரகங்கள் உ—ல் நிற்பின் விருத்தம் க—ல் நல்லன். ரு்ல் கோள்நிற்பின்விருத்தம் கூ ல் நல்லன். கஉ ல் கோள்நிற்பின்விருத்தம். கக ல் நல்லன் அ ல் கோள்நிற்பின்விருத்தம். க௦-ல் நல்லன். ச-ல் கோள்நிற்பின் விருத்தம். ரு-ல் நல்லன். கூ-ல் கோள் நிற்பின் விருத்தம். உ-ல் தீயன். க ல் கோள்நிற்பின்விருத்தம். ச—ல் தீயன். ரு-ல் கோள் நிற்பின் விருத்தம். ரு-ல் தீயன். அ-ல் கோள்நிற்பின் விருத்தம். அ-ல் தீயன். எ-ல் கோள்நிற்பின் விருத்தம் கஉல் தீயன். கக-ல் கோள்நிற்பின்விருத்தம். கூ-ல் தீயன். க௦ல் கோள்நிற்பின் விருத்தம். எ—று. (க௦)

## புதகோசரவேதை

புந்தியாறெட்டுப்பத்துநான்கிரண்டுபுகழ்பதினொன்றழகல்லார் வந்தவொன்பானொன்றெட்டுமூன்றைந்து மருவுபன்னிரண்டெனில்விருத்தம், முந்துமொன்றுன்பானைந்துபன்னிரண்டேழ் மூன்றுமிற்றீயனொன்றீரைந், தைந்துபன்னொன்றேழ்நான்கினினன்றுமம்புலியொழிவதாமணங்கே.

(இ—ள்.) புதன் கூ ல் நல்லன். சந்திரனொழிந்தோர் கூ-ல் னிற்பின் விருத்தம். அ நல்லன். க ல் நிற்பின் விருத்தம். க௦ நல்லன் அ-ல் நிற்பின்விருத்தம். ச நல்லன். ரு விருத்தம். உ நல்லன் ரு—ல் நிற்பின்விருத்தம். கக நல்லன். கஉ ல் நிற்பின்விருத்தம் க—ல்தீயன். அதிற்கோள் நிற்பின்விருத்தம். கூ தீயன். க௦ல் கோள்நிற்பின் விருத்தம். ரு தீயன். அதிற்கோணிற்பின் விருதம்.

௧௨ தீயன். ௧௧ ல் நிற்பின் விருத்தம். ௭ தீயன். அதிற்கோணிற்பின் விருத்தம். ௩ தீயன். ௪ ல் கோணிற்பின் விருத்தம், எ—று

## குருகோசரவேதை.

குருவிரண்டொன்பதேழ்பதினொன் றுகுலவுமைந்தழகுபன்
னிரண்டு, விரவியபத்துமூன் றிருநான்குவிளம்புநான்கொழிந்த
வர்விருத்தங், கருதுதீதொன் றுமூன் றுநான்கெட்டுக்காட்டுபன்
னிரண்டுபத்திருமூன், றெருவுமொன் றிரண்டைந்தேழ்பதினொ
ன்றேறுடொன்பதாறுறினலனேதே

(இ-ள்.) வியாழன் ௨ நல்லன். ௧௨ ல் கோணிற்பின் விருத்தம். ௯ நல்லன். ௧௦ ல் நிற்பின் விருத்தம். ௭ நல்லன். ௩ ல் கோணிற்பின் விருத்தம். ௧௧ நல்லன். ௮-ல் கோணிற்பின் விருத்தம் ௫ நல்லன். ௪ ல் கோணிற்பின் விருத்தம். ௧ தீயன். அதிற்கோணிற்பின் விருத்தம். ௩ தீயன். ௨ ல் கோணிற்பின் விருத்தம். ௪ தீயன். ௫ ல் கோணிற்பின் விருத்தம். ௮ தீயன். ௭ ல் கோணிற்பின் விருத்தம். ௧௨ தீயன். ௧௧ ல் கோணிற்பின் விருத்தம். ௧௦ தீயன். ௯ ல் கோணிற்பின் விருத்தம். ௬ தீயன். அதிற்கோணிற்பின் விருத்தம். எ-று. (௧௨)

### சுக்கிரகோசரவேதை

ஒள்ளியோனுக்கொன்றிரண்டுமூன்றீராறொன்பதெட்டீரண்
டோதுந், தெள்ளுபன்னொன்று சிறப்பிலாறொன்பான்றிகழ்ந்த
வெட்டேழொன்பதாறு; விள்ளுபன்னொன்றைந்தொருபத்துமூன்று
மேவிடில்விருத்தமாறீரைந், தெள்ளுமேழாகாவென்றுபன் னிர
ண்டாறிரண்டுறில்நன்றெனவியம்பே-

(இ-ள்.) சுக்கிரன் ௫ நல்லன். ௯ ல் கோணிற்பின் விருத்தம். ௧ நல்லன். ௮ ல் நிற்பின் விருத்தம். ௨ நல்லன். ௭ ல் கோணிற்பின் விருத்தம். ௩ நல்லன். ௯ ல் கோணிற்பின் விருத்தம். ௧௨ நல்லன். ௬ ல் கோணிற்பின் விருத்தம், ௯ நல்லன். ௧௧ ல் கோணிற்பின் விருத்தம் ௮ நல்லன். ௫ ல் கோணிற்பின் விருத்தம். ௪ ல் நல்லன். ௧௦ ல் கோணிற்பின் விருத்தம். ௧௧ நல்லன். ௩ ல் கோணிற்பின் விருத்தம். ௬ ல் தீயன் ௧௨ ல் கோணிற்பின் விருத்தம் ௧௦ தீயன். ௬ ல் கோணிற்பின் விருத்தம். ௭ தீயன். ௨ ல் கோணிற்பின் விருத்தம். எ-று

## கோசர சுபாசுப காலங்களிலே செய்யத் தகுவனவும் செய்யத்தகாதனவும்.

### வேறு-

அவ்வவரோரையாதியாயடைவிலாங்குறுகோசரப்பலன்க
ளிவ்வகையுணர்ந்துநன்றெனிற்கருமமெவைகளுமியற்றுதலியல்பா
ஞ், செவ்வியமுலையாய்கோசரகாலந்தீதெனிற்பிறமனைச்செலவு
வெவ்வியல்வேட்டைவாகனமாடல்வேண்டலென்றியம்பினர்மே
லோர்.

(இ-ள்.) அவ்வவர்களுடைய சென்ம ராசியாதியாகச் சொல்லப்பட்ட கோசரவிதியையுணர்ந்து நன்றாகவிருக்கின்ற காலத்திலே யாத்திரை முதலான கருமங்களெல்லாஞ் செய்யப்படும். கோசரந் தீதானகாலத்தில் அன்னியக் கிருகப் பிரவேசமும் வேட்டையாடலும் வாகனமேறலும் யுத்தம் பண்ணலும் தவிரப்படும். எ-று. (௧௪)

## கோசரமிரண்டெனல்.

எண்ணுறவியந்தகோசரவிதிகளிவ்வகையின்றவாறியம்பிற்,
றிண்ணியவுடலாந்தண்மதியோரைசெனித்திடுமோரையதுயிரா
ம், நண்ணியவிவையேயுடலுயிரிரண்டும்நன்மைமிக்கமைந்துற
வெண்ணிப், பண்ணமர்மொழிவேல்விழிமதிமுகத்தாய்பகர்ந்த
னரொனப்பயன்பாரே.

(இ-ள்.) சென்மலக்கின கோசரமென்றும் சந்திரலக்கின கோசரமென்றும சொல்வதென்னையெனின், சந்திரலக்கினம் உடல், சென்மலக்கினம் உயிர் என்றுங் கூறப்படுதலால், உடற்கிதாகிதங்கடரும். சந்திரலக்கின கோசரமென்றும் உயிர்க்கிதாகிதங்கடரும். சென்மலக்கின கோசரமென்றும் கோசரவிதியிரண்டுபட்டதென்க. எ-று (௧௫)

## கிரகசாரசங்கியையும், பலன்செய்யுங் காலமும்.

கதிர்புதன்கவியோர்மாதமொன்றரையாங்காசினிமகனொருவருட
ஞ், சதிர்குருமந்தனிரண்டரையரவஞ்சாற்றியவிரண்டுமொன்றனா
யா, மதியிரண்டேகால்நாளெனச்சரிக்கும்வகைபலனுதியிற்கதிர்
சேய்,விதுபுதன்முழுதுங்கவிகுருநடுவாம்விடவராச்சனிகடை
யின்னே.

(இ-ள்) ஆதித்தன் புதன் வெள்ளி மூவரும் ஒருராசியி யிலே யொருமாதஞ் சரிப்பர். செவ்வாயொன்றரைமாதஞ் சரிப்பன். வியாழன் ஒருவருஷஞ் சரிப்பன். சனி இரண்டரை வருஷஞ் சரிப்பன். இராகு கேதுக்கள் ஒன்றரை வருஷஞ் சரிப்பர். சந்திரன் இரண்டேகால்நாட் சரிப்பன். ஆதித்தியவங்காரக பலன் ஆதிகண்டத்திலும், குருசுக்கிரர்கள் பலன் மத்தியகண்டத்திலும் இராகு கேது சனிபலன் அந்திய கண்டத்திலும், சந்திரன் புதன் பலன் எப்பொழுதுமாகுமென் றறியவேண்டும். எ-று. (௧௬

## வக்கிராதிசாரபலன்.

ஓதுவக்கிரகங்களுளதிசாரமுறிற்பலனுதயவோரையிலாஞ்சோதிமெய்க்குரு வுக்கப்படியன் றுது றுபலன் முன்பி லோரையிலாந் தீதறக்கனலிகவிபுதன்செவ்வாய்திகழ்பதினறுதினஞ்செம்பொன் போதலச்சனிமூவிரண்டதாந்திங்கட்புகல்முனம்பலம்பெறும் பொன்னே.

(இ-ள்) கிரகங்கள் வக்கிராதிசாரகாலத்து அவரவர் நின்ற ராசிக்கிலே பலன்களாம். வியாழனுக்கு வக்கிராதிசாரமானல் பூர்வராசியிலே பலன். ஆதித்தியன் புதன் சுக்கிரன் செவ்வாயிவர்கள் போகப் பதினறுநாளென்ன முன்னிராசிலே பலன். வியாழன் சனி யிவர்கள் போக ஆறுமாதமென்ன முன் னிராசிசிலே பலன். எ-று. (௧௭]

## புத்திரர்பலன்கள் பெற்ருருக்குந் தமக்கு மனுபவிக்குங்காலம்.

ஆடவர்க்கிரெட்டாண்டளவாகவரும்பலனன்னைதந்தையர்க்காம், பீடுறுமதன்மேற்றமக்குறுமன்றிப்பெண்மகார்க்கொன்பதாண்டளவுஞ், சேடுடையவ்வையையன்மாட்டாகுந்தேர்பலனதற்குமேலெல்லாங், சேடறுகொழுநன்புசிக்குமென் றறிந்தோர்இனிமொழி விளம்பினர்கேளே.

(இ-ள்.) புருஷர்க்குப் பதினறு வயதளவு முண்டாகிய பலன்களைப் பெற்ருரனுபவிப்பர். அதற்குமேற்ருமே யனுபவிப்பர். ஸ்திரீசெனங்களுக்குச் சென்மாதி யொன்பதுவயதளவுமுள்ளபலன்களைப் பெற்ருர்களனுபவிப்பார்கள். அதற்குமேலே பர்த்தாவனுபவிப்பனென்று மேலோர் சொற்றனர். எ-று, (௧௮

## இவ்விவர்களைக் கிரகதோஷந் தீண்டாவெனல்.

மறையவர் தம்மைவழிபடு வோர்க்குமன்னியகுருவழிநிற்போர்க், கறநெறியுடையோர்மொழிசெவிப்படுவோர்க்காரணங்கேட்பவர்க்கோமத், துறைதவந்தருமஞ்செய்பவராகத்திற்சுத்தமேயுறுபவர்க்கமைந்த, குறைவறுநியமஞ்செபமுள்ளோர்க்காகாக்கோசரம்பலிக்குமோகொடியே.

[இ-ள்.] பிராமணரைவழிபடுவோர்க்கும், ஆசாரியனுபதேசப்படி யொழுகுவோர்க்கும், சற்சனருடைய வசனங்கேட்போர்க்கும், வேதப்பொருளைக் கேட்போர்க்கும், யாகந் தருமந்தவஞ்செய்வோர்க்கும், சித்தசுத்தியுடையோர்க்கும், நியமானுட்டானந் தவறாதோர்க்கும் கோசரம் பொலல்லாததாயிருப்பினும் பலியாது. எ—று. கோசரப்படலம் முற்றிற்று. ஆகச்செய்யுள் உ௫0.

## யாத்திரைப்படலம்—யாத்திரைமாதவிதி.

வேறு-

உத்தமமார்கழியுடனேயாவணிசித்திரைமூன்றுமுரைதேர்
மாசி,சுத்தமுறுவைகாசிபுரட்டாதியையப்பசிதைதுலங்குமானிமத்
திமமாங்கார்த்திகைபங்குனியாடிமதிக்குங்காலதமமாகும் மெத்த
வுமவ்வாடிதனைப்பழித்தனர்கள்சோதிடனூல்மிகுத்துளோரே.

(இ-ள்) மார்கழி ஆவணி சித்திரை இம்மூன்று மாதமும் உத்தமம். மாசி வைகாசி புரட்டாதி ஐப்பசி தை ஆனி இவ்வாறு மாதமும் மத்திமம். கார்த்திகை பங்குனி ஆடி இம்மூன்று மாதமும் அதமமாம். விசேஷித்து ஆடி மாதம் யாத்திரைக்கு வர்சிக்கப்படும். எ-று. [க)

## யாத்திரா திதிசூலம்.

ஓங்குயர்முற்பக்கதிலாறெட்டுப்பன்னிரண்டொன்றுவிட்டி
பாங்கிருத்தைபிற்பக்கம்பழிப்பாகுமிவையன்றிப்பனூநந்தை
தீங்கறுபத்திரைசயைபூரணைகீழ்த்திசையாதிசிறப்பதாகுந்
தூங்கியவெட்டாறென்றீராறுகிழக்காதிதிதிசூலமென்னே

[இ-ள்) திதிகளில் பூருவபக்கத்து சட்டி அட்டமி துவாதசி பிரதமை. விட்டி இருத்தை இவைகளும் அபரபக்கமுந்தவிரப்படும் விசேடித்து நந்தை கிழக்கிற்குநன்று. பத்திரை தெற்கிற்கு நன்று. சயை மேற்கிற்குநன்று- பூரணை வடக்கிற்கு நன்று அட்டமி கிழக்கிற்கு ஆகாது. சட்டி தெற்கிற் காகாது பிரதமைமேற்கிற்காகாது. துவாதசி வடக்கிற்காகாது ஆகையாலிவை திதிசூலமென்றறிக, எ—று. (உ)

## யாத்திரா நக்ஷத்திரசூலம்.

மறையவனைப்பசிபெண்ணைமதியவிட்டங்கரமோணம்வழங்குதோணி, குறைவறுமிந்நாட்கடிகையெவையிற்குநன்றென்றுகுறித்தாரன்றி, யுறையுமனல்நாளாதியேழேழாயபிசித்தொடுய்த்துமின்னே, நிறையுறுகீழ்த்திசையாதிநான்கினுக்குமாஞ்செலவுநேருங்காலே.

(இ-ள்] பூசம் அசுபதி அனுஷ்ம் மிருகசீரிடம் அவிட்டம் அத்தம் திருவோணம் இரேவதி இந்நாட்கள் நான்கு திசைக்குஞ்செல்ல நன்று. கார்த்திகை முதலாக வேழுநாள் கிழகிற்கு நன்று. மகமுதலேழுநாள் தெற்கிற்கு நன்று. அனுஷமுத லேழுநாள் மேற்கிற்கு நன்று. அவிட்டமுத லேழுநாள் வடக்கிற்கு நன்று. எ-று [௩)

## பரிகசக்கரம்.

மன்னுபெரும்பரிகமதுவன்னியினும்வாயுவினும்வரையொன்றுக்கித், துன்னியநாள்மகமாதிபரியந்தம்மேற்கினுக்குந்துலங்குந்தெற்காய்ப், பன்னியவத்திசையினுக்கும்பாம்பந்தம்புள்ளாதிபயிலுநாட்கள், உன்னியவுத்தரத்திற்குங்கிழக்கிற்குமாங்கடக்கிலுறுநோய்தானே.

(இ-ள்) அக்கினிகோணந்தொடங்கி வாயுகோணமளவாகவொருரேகை வரைந்து மகமுதலாகத் திருவோணமளவும் நிறுத்தி வாயுகோணமுதல் அக்கினிகோணமளவும் அவிட்டமுதல் ஆயிலியமளவு நிறுத்தி யந்தந்த நாட்கள் நின்ற திசையினுக்கு யாத்திரை செய்யலாம் ரேகைகடக்கினது மிகுதியும் பொல்லாது எ-று (௪)

## யாத்திரைக்குவாரவிசேஷம்

வேறு

உரம்பயில்குருவாராதியுத்தமம்புந்திவாரந்.
தரும்புகர்வாரமாதிமத்திமமன்றித்திங்ள்.
கரம்பெறுவெய்யோனாரல்கருதுவாராதிதீதாஞ்.
சுரும்பணிகுழலாய்பின்னுஞ்சொற்னர்திங்கடயோர்

இ-ள். வியாழன்வாராம்சாதிகளுத்தமம். புதசுக்கிரவாரர்ம்சாதிகள்மத்திமம். சனிசந்திரசூரியசெவ்வாய்வாராம்சாதிகள் அதமமென்றுஞ்சொல்லப்பட்டன. விசேஷித்துச்சந்திரவாராம்சாதியெல்லாம்யாத்திரைக்குநன்றென்றுவேறுமதாந்தரங்களிற்சொல்லப்பட்டன. எ—று (௫)

திசையாத்திரைக்குராசி

ஓரைகள்*சரங்கண்மேனைக்குற்றவைசிரோதயங்கள்
சீரிதெத்திசைக்குமேடஞ்சிலையரிகிழக்கிற்காகுங்
காரிகைகலைகோதெற்காங்கடந்துலைதண்டுமேற்காம்
வாரிமீன்றேளேநண்டுவடக்கிற்காமடநல்லாயே.

இ-ள், இராசிகளாவன, சரராசிகளும்ஊர்த்துவமுகராசியும்சிரோதயராசிகளும்நான்குதிசைகளுக்குங்கொள்ளப்படும். விசேஷித்து மேடம் சிங்கம் தனு கிழக்கிற்காம். கன்னி மகர மிடபம் தெற்கிற்காம் கும்பம் துலாம மிதுனம் மேற்கிற்காம். மீனம் விருச்சிகம் கடகம் வடக்கிற்காம் எ—று (௬)

யாத்திரைக்குராசிவிசேஷம்

அன்றியிலுபயவேரையறையின்மத்திமமேயாகுங்
கன்றியதிரத்திற்சேறல்கருதவுமாகாதென்பர்
நன்றுநற்கோட்களோரைநவிலுங்காலவையின்மீன
மொன்றொழிந்திடுதனன்றென்றுரைத்தனர்சுருதியோரே

இ—ள். இன்னுமொருவிதியிற்சொன்னபடி. உபயராசிகளெல்லாம்மத்திமம். திரராசிகள்தமமென்றும் சுபக்கிரகத்திருட்சியானராசிகளெல்லாம்நன்றென்றுஞ்சொல்லப்பட்டன. மீனம்யாத்திரைக்குஆகாது. எ—று (௭)

யாத்திரைக்குவேண்டுமிராசிசுத்தம்

விதித்தவவ்விராசியாதிவிளம்புமாறிரண்டில்நற்கோ
ளுதித்திடனன்றாம்வெள்ளியோங்கியவேழிற்பொல்லா
தெதிர்த்தமூன்றுறுபன்னொன்றிவையொழிந்தாகார்க்காக
துதித்தபொன்வெள்ளியோரைதோய்தனன்றஞ்சுதூய்தே

---

*சரராசிகள்;—மேடம். கர்க்கடகம், துலாம், மகரம்.—ஊர்த்துவமுகராசி சூரியனிற்கின்றராசிக்குப்பின்புள்ளராசி.—எனவே—சூரியனிற்குமிராசி, அதோமுகமும், அதற்குமுன்னிராசி. திரியங்முகமுமாம். சிரோதயவிராசிகள்—மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம், என்பவைகளாம்.

இ—ள் இலக்கினத்துக்குபன்னிரண்டாமிடத்திலும்இரண்டாமிடத்திலும்சுபக்கிரகங்கள்நிற்பி நன்று, சுக்கிரனேழிற்பொல்லான்மூன்று ஆறுபதினொன்றில்பாபர்நலமர்குரு சுக்கிரர்குருவரும்லக்கினத்தில்நிற்கலாம் லக்கினத்துக்குஐந்தாமிடஞ்சுத்தியாக வேண்டும் எ—று [அ]

## நக்ஷத்திரதிசாசூலம்.

கிழக்கினுக்கோணங்கேட்டைகிளர்பரிபுரட்டாதெற்கு
வளக்குருள்சகடுமேற்குவடக்கிற்குத்தரமோடத்தம்
பழிப்பில்கிழாதிக்குப்பகர்ந்திரண்டிரண்டாய்க்கேட்டை
துளக்குறுபுரட்டை-தேருத்தரமிவை சூலந்தானே.

[இ-ள்] திருவோணமும் கேட்டையும் கிழக்குச் சூலம் அசுவினி பூரட்டாதி தெற்குச்சூலம் பூசம் ரோகிணிமேற்குச்சூலம். உத்தரம் அத்தம் வடக்குச்சூலம். இந்நாட்களில் அத்திசைகளிற் செல்லலாகாது. விசேஷத்துக்கேட்டை கிழக்கிற்கும் அக்கினித்திக்குஞ் சூலமென்றும, பூரட்டாதி தெற்கிற்கும் நிருதிக்கும சூலமென்றும், ரோகிணிமேற்கிற்கும் வாயுவுக்குஞ் சூலமென்றும், உத்தரம்வடக்கிற்கும் ஈசான்னியத்துக்கும் சூலமென்றுமறிக எ—று [கூ]

## சூலதோஷப்பிரத்தியக்ஷம்.

வச்சிரநாளிற்கிழக்கினிற்சென்றுமாவலிபெஞ்சிறைப்பட்டான்
அச்சுறுமுரனும்புரட்டையிற்றெற்கேயடைந்தலர்க்கண்ணனாலழிந்தான், பச்சிமமதனிற்றோர்மிசைச்சென்றுபடைமுசியரிக்கப்பட்டான், மெச்சுறுவடபாலுத்தரத்தேகிவிந்தனன்சம்பரன்மின்னே.

[இ—ள்] கேட்டையிற் பூருவதிக்கிற்சென்று மாவலிசிறைப்பட்டான். பூரட்டாதியில்தெற்கேசென்று முரனென்பானவிட்டுணுவினாற்சங்கரிக்கப்பட்டான். ரோகிணியின் மேற்கேசென்று முசியென்பான் விட்டுணுவாலழிந்தான் உத்தரத்து வடக்கேசென்று சம்பரனென்பானு மழிந்தானெனச் சாத்திரங்கள் சொல்லுகையால் ஆவசியகம் சூலநாட்கள் அந்தந்தத்திக்குகளுக்குத்தவிர வேண்டுமென்று பெரியோர்சொல்லுவர் எ—று

## வாரசூலம்

அம்புலிமந்தன்கீழ்குருதென்பாலாதவன்பார்க்கவன்மேற்கு
வம்பவிழ்புந்தியாரனுத்தரத்துவருதினச்சூலமாமதித்து
நம்புவச்சிரத்தோன்குபேரனுமிவர்கள்நாட்டியவாதியந்தத்துத்,
தம்பமாமிந்துசனிகுருவெள்ளிதபனன்மால்குசனெனச்சாற்றே

(இ-ள்.) திங்களுஞ்சனியுங்கிழக்கேசூலம். வியாழன் தெற்கேசூலம். ஞாயிறும் வெள்ளியும் மேற்கே சூலம் செவ்வாயும் புதனும் வடக்கேசூலம். கிழக்குத்திங்களும், அக்கினி சனியும் தெற்கு வியாழனும், நிருதி வெள்ளியும், மேற்கு ஆதித்தியனும் வாயுபுதனும், வடக்கு குச்செவ்வாயும், சூலமென்று வாரசூலமறிப்படும். எ-று [௧௧)

## திசையாத்திரையின்பலன்.

இந்திரன்றிசையிற்சேயினிலேகிலிரைபயாந்தெற்கினில்மந்தன்
சந்திரன்றினத்திற்றணந்திடற்றனமாஞ்சாற்றியமேற்கினிற்செம
பொன். புந்தியிலிகப்பிற்காரியமாகும்பொருந்தியவுத்தரத்தசுர
மந்திரிகனலிதினத்திடைப்படரின்மன்னியசுபமெனவழங்கே.

[இ-ள்.) திக்குகளுக்கு வாரங்களைச் சொன்னபடி செவ்வாய் கிழக்கேசெல்லலாபம். சனியுந்திங்களும் தெற்கே செல்லில் திரவியமுண்டாம். வியாழனும்புதனும் மேற்கேசெல்லக் காரியம்பலிக்கும். வெள்ளியும் ஞாயிறும் வடக்கேசெல்ல மிகுதியுஞ் சுபமுண்டாம். எ-று (௧௨)

## யாத்திரா திக்குவிசேஷமும். பக்ஷணமும்.

நடுப்பகலந்திநள்ளிராவுதயமநான்கிலைகிழ்த்திசையாதி
கொடுத்ததிற்சேறனன்றிமாவிரதந்தேரோடுநரனென்குறிக்கும்
படுத்தவாகனங்களவையுமப்படியாமளிதிலமதுபயம்நான்கும்
படிக்குமாவனையாய்கிழ்த்திசையாதிபட்சணமாமெனப்பகரே

[இ-ள்.) திக்குச் சந்தியாவன மத்தியானங்கிழக்குநன்று. அந்திக்காலந்தெற்குநன்று. அர்த்தராத்திரி மேற்குநன்று. உதயகாலம் வடக்குநன்றுஎன்று சந்திகளையும், கிழக்குயானைநன்று தெற்குத்தேர்நன்று. மேற்கு குதிரைநன்று. வடக்குநரவாகனம் நன்றுஎன்று திக்குவாகனங்களையும், கிழக்குத்தயிர். தெற்கு எள்ளு. மேற்குத் தேன். வடக்குப் பால் இப்படித் திக்குப் பக்ஷணங்களையும அறியவேண்டும்.

## நக்ஷத்திரபக்ஷணம்.—வேறு

அடுமுழுங்கோதனங்கிரமமே சோறாலரிசியதாமரைக்கிழங்கு குருதிபுடோல்கிருதம், பரிபயமெட்டேசாறன்னம்பாலெள்ளி பண்ணிகாரம்பலவன்னச்சோறு நெல்லிக்கனிகொள்ளெட்கிழங்கு, வடிவுடையபாதாளங்கனிநற்பாலன்னஞ் சோறுய்மதுக்கண்டுடனே றியூன்பால்பயறென்றிவைகள், தொடுபடுமைமடநல்லாய்புரவிமுதலுணவாய்ச் சொற்றனர்சோதிடந்தெரிந்ததூயவர்கடுணிந்தே.

[இ—ள்.] அச்சுவினி யுழுந்தஞ்சோறு. பரணிபால். கார்த்திகை தயிர்ச்சோறு. ரோகிணி மாமிசம். மிருகசீரிடம் தாமரைக்கிழங்கு. திருவாதிரை இரத்தம். புனர்பூசம் புடோல். பூசம் நெய். ஆயிலியம் பால். மகம் திலான்னம். பூரம் நல்லோதனம். உத்தரம பால். அத்தம் பண்ணிகாரம். சித்திரை பலவன்னச்சோறு. சுவாதி நெல்லி. விசாகம் கழி. அனுஷம் கொள்ளு. கேட்டை எள்ளு. மூலம் கிழங்கு. பூராடம் வாழைப்பழம். உத்திராடம் பானம். திருவோணஞ் சோறு. அவிட்டம் தேன். சதயம் சருக்கரை. பூரட்டாதி வராகமாமிசம். உத்தரட்டாதி பால். இரேவதி பயறு இவ்வண்ணமாகவே நட்சத்திரபக்ஷணங்களை யறியவேண்டும். எ—று

## திதிவாரபக்ஷணம்.—வேறு

பத்திரைபசுவின்பாலொடுசோறுபயினந்தைதனக்கடகன்னஞ் சித்தமாஞ்சயைபண்ணிகாரமாமிரித்தைசெப்பியசர்க்கரைச் சோறு, முத்தமமானபூரணைகிழங்கொடுமுந்திவைமன்றியென்றுநி, சுத்தமாநெய்பால்சூழ்தளந்திலந்ததிதுவரையோடுழுந்திவைதுய்ப்பாய்

இ—ள். பத்திரைக்குப்பசுவின்பால். நந்தைக்குச்சரகோதனம். சயைக்குப்பண்ணிகாரம். இருத்தைகுளான்னம். பூரணைகிழங்கும் உழுந்தம்பருப்புமென்றுதிதிபக்ஷணமும், ஞாயிறுநெய். திங்கள்பால். செவ்வாய்சர்க்கரை. புதன்எள்ளு. வியாழன்தயிர், வெள்ளிதுவரைப்பருப்பு, சனிஉழுந்து, என்றுவாரபக்ஷணமுமறிக. எ—று

## பக்ஷணங்களுக்குப்புறநடை.

இப்படிவகுத்தவாரபட்சணமுமியம்பியதிதிகளினுணவுஞ் செப்பியநாளின்பட்சணமெனவையுஞ்செலவினிற்றுய்ப்பதுவிதி

யா, மப்படியதற்குக்காரணமல்லாததுவிடிற்றுடுகினுமமையும்
கொப்புறுகுழையாயதனிலுநினைக்கிற்கொண்டதின்பலனெனக்
கூறே.

இ-ள். முன்சொன்னபடி திதிவாரதினபக்ஷணங்களையெல்லாம் யாத்திரைகாலத்திற் கொள்ளுதன் முறைமை அல்லாதபோது அவ்வப்பதார்த்தங்களைப் பரிசித்தாலும் நினைத்தாலும் பலமொக்கும். எ-று (கக]

## யாத்திரைக்குப்புறப்படும்விதம்.

இடத்தினிற்பவனனியங்கிடக்கோட்கட்கிருங்கனலாகுதியியற்
றி, யடுத்தநான்மறையோர் தங்களுக்கன்பாலரும்பொருள்கலைப
லவளித்து, மடுத்துநற்றெய்வபூசையும்புரிந்துமகிழ்வுடன்றமர்
வரவலமா, நடைக்கழலெடுத்தெண்ணான்கடிநடந்துநாற்றியவாக
னமேறே.

இ-ள். யாத்திரைசெய்யுமிடத்து இடநாடியிலே சந்திரசரங்கண்டு கிரகயக்ஞஞ்செய்து பிராமணர்களுக்குத தானங்கொடுத்துதெய்வபூசையும் பண்ணித் தெக்ஷணபாதத்தை முன்னெடுத்துவைத்து பந்துக்கள் சூழ முப்பத்திரண்டடி நடந்து வாகனங்களிலேறுதலியல்பாம். எ-று. (கஎ)

## பிரயாணமுகூர்த்தபலனும்பிரதானதிரவியமும்

பொற்புனைகலனுதனம்படை ஆடிபுத்தகம்வாகனம் றத்திக
விற்கிடை நூறிலைம்பதில்விடுதல்பெய்ப்பிரதானமாம்விளம்பில்
அற்புதமாயதன்றியுங்கிரகணமடும்புயல்வாதமெனமிவைகண்
முற்படவேழுதினத்துறிலன்னுள்முனிந்துபின்வேறுநாள்முயலே

[இ-ள்] ஆபரணம் ஆசனம் ஆயுதம் கண்ணாடி புத்தகம் வாகனமிவைகள் நூறு அல்லது ஐம்பதுவிற்கிடைதூரத்திலாதல் பிரயாணம் பண்ணுவதியல்பாம் இப்படிப்பிரயாணம்பண்ணிய ஏழுதினத்துக்குள்ளாக உற்பாதங்கள் கிரகணம், மழை, காற்று, தோன்றினவிடத்தேபிரயாணமுகூர்த்தபலனழியும். எ-று

## பிரயாணமாய்இத்தனை நாட்களுள்புறப்படவேண்டுமென்பது

மேதினியிறைவற்கொன்பதாமன்றிவிருப்புமண்டலீகருக்கே
ழாம், போதமாமற்றோரெவர்க்குமைந்தாகும்புறப்படுநாளிவைபு
கலில், லாதுலர்பித்தர்பயத்தினர்கோபியருபிணியினருறப்பற்
றோர், இதனுமேபடியிலாபிறவிடுசெய்திடிறறீதெனச்செப்பே.

இ—ள், பிரஸ்தானஞ்செய்தவிடத்து. ௯. நாளைக்குள்ளேபூமண்டலத்துக்கதிபதியாயினோர்புறப்படவேண்டும். மண்டலாதிபர் ஏழுதினத்துக்குட்புறப்படவேண்டும். மற்றுமுள்ளோர்ஐந்துதினத்துட்புறப்படவேண்டும்பிரயாணத்திரவியங்கொண்டுபோய்வைக்குமிடத்துத்; தரித்திரர், பித்தர், பயங்சர், கோபிகள், வியாதியாளர்கள், அங்கவீனர், பேடிகள், இருப்பின் ஆகாது எ-று ௧௯

## சுபசகுனம்—வேறு

ஏறுகொடிவேசியர்கள்தேர்புரவிவேழமனையேசில்மறைபோ
ரிருவர்பால், நாறுமலர்பேரிலனைகோவடிசிலூனிளையநாரியர்க
ள்வீணைகனிதேன். கூறுசவமாலையிருமீன்முரசமாடையறல்
கோலுகுடமாசகலமே, தேறுகுழலோசையெழுதிமைபகல்வா
ய்மையினையேசறலெதிர்சாரலினிதே-

இ—ள். இடபம், துவசம், வேசியர், இரதம், குதிரை, யானை, தயிர், இரண்டுவிப்பிரர், பால், சுகந்தபுட்பம், பேரிகை, சங்கு, பசு, சோறு, மாம்சம், கன்னிகை, யாழ், பழம், தேன், பிரேதம், தோரணமாலை, உபயமச்சம், முரசம். வஸ்திரம், பூரணகும்பம், வேய்ங்குழலாதியானசத்தம்நன்மையாம் எ—று. ௨௦

## துன்னிமித்தம்.

மோரரவமாடையிலிட்டுமவிள்பேசிதுவர்முகர்நனையாடையுடையோர், சோரர்தயில்மேவுதலையாளர்துவராடையர்கள்தூமைமடவார்களலிபோர், நேர்பகைஞர்வேதனையர்தாபமுடையோர்சடிலர்நீறுடையவேடர்குருடர், ஆர்கனலிலேறுகலமோர்பிரமசாரியெதிராகிலுடன்மீள்வதழகே

இ—ள், தக்கிரம், பாம்பு, நிருவாணி, விரிதலையர், விறகுகட்டு, ஊமர், காவஸ்திரதாரிகள், கரவடர், எண்ணெய்த்தலையர், காஷாயவஸ்திரதாரிகள், தூரஸ்திரீ, நபுஞ்சகர், சத்துருக்கள், வியாதியாளர், பசியாளர், சடாதரர், தபசிகள். அந்தகர், வெந்தபாண்டம், ஒற்றைப் பிராமணனையும் கண்டால் யாத்திரை போகலாகாது எ—று. ௨௧

## தும்மல்விதி.

மல்கியகோவின்குகமதுநாசம்வருத்தமாம்பூனையின்குதமேற்
பல்கியவசமோடெருமைமங்கையர்நள்பலவுமாங்குதமதுதீதாம்
நல்கியநன்மைதருங்குதமருந்துநாற்றியவாகனமசனம்
புல்கியசயனமாசனம்வித்தைபொருந்துவித்திடற்கெனப்புகலே

[இ-ள்.] பசுவின் தும்மல் காரியநாசம். பூனையின் தும்மல் வியாதியுண்டு. ஆடு எருமையின் தும்மலும் ஸ்திரீஜனங்களின் தும்மலும் மிகுதியுமாகாது. அவுடதங்கொள்ளுதல் வாகனமேறல் போசனகாலம் ஆசனத்திருக்குங்காலம் கல்விகற்குங் காலம் வித்திடுங்காலம் இவற்றிலுண்டாகிய தும்மல் நல்லது, எ-று. உஉ.

## ஸ்திரீயாத்திரை.

மன்னுடிபுரட்டாதிமாசியெனுமிவைமூன்றுமதித்தகுலேல்
முன்னுபநான்காறெட்டாமாதமுங்கழித்துமொழிந்தவெள்ளி
பின்னையபுதனிவர்சுடினங்களுமுத்தராநாளும்பிரதமைதானும்
முன்னுதுமற்றெனவையும்யாத்திரைப்பொ மங்கையருக்காகாதெ
ன்னே.

இ—ள். ஆடி, புரட்டாதி, மாசியாகிய மூன்றுமாதங்களுங் கருப்பவதிக்கு நாலு, ஆறு, எட்டாகிய மாதங்களும் சுக்கிரன் புதன் வாரமும் உத்தர நட்சத்திரமும் பிரதமையுந் தவிர்ந்து மற்றவையெல்லாஞ் சுபயாத்திரைக்குச் சொன்னபடியே ஸ்திரீயாத்திரைகொள்ளப்படும். எ—று. (உங)

## சலயாத்திரை.

ஓணமாதிகரந்தானுமுயர்பவனப்புரவிகலமுறைதேர்விட்டுஞ்
சேணவிருமிந்நாளிறகவிபுநதிதிங்கள்செம்பொன்றினங்களாதி
பேணுமநற்பக்கதுப்பிறள்விட்டிசகுனதியிரித்தைதள்ளி
வாணுதலாய்சராசிகளூர்த்துவங்களெழுநீர்ச்செலவுமன்னுவாயே

இ—ள். திருவோணம், மிருகசீரிடம், அத்தம், அனுஷம், சுவாதி, ரேவதி, அசுவினி, ரோகிணி, அவிட்டம் இந்நாட்களும், சுக்கிர, புத, சந்திர, வியாழ வாரோதயங்களும், பூருவபக்ஷமும் பொருந்த விட்டி, சகுனம், சதுட்பாதம் நாகவம், கிம்ஸ்துக்கினம், இரித்தை இவை வர்ச்சித்துச் சராசிகளும், ஊர்த்துவமுக ராசிகளும் உதிக்கச் சலயாத்திரை செய்யலாம். எ—று.

## இறவுமது.

நவையிலுயர்கண்ணிறைந்தநாளவையிலுத்தமமாநாட்டிய க
ண்ணென், றுவமையில்செம்பாதியுயிர்பெற்றவைகள்மத்திமமா
மொழிந்தவையாகா, வவமறுகண்டகமீராறுயதிரிகோணத்திலா
குநல்லோர், கவையிலோர்மூன்றுபன்னொன்றுபெறநன்றுங் கரு
துங்காலே.

இ—ள். முழுப்பிராணனு மிருகண்ணுமுள்ள நாட்களுத்தமம். ஒருகண்ணுமரையுயிருமுள்ள நாள்மத்திமம். அல்லாதவையதமம். லக்கினத்துக்குக் கேந்திரத்தும் துவாதசத்தும் திரிகோணத்தும சுபர்நிற்க வேண்டும். பாபர் உபசயத்து நிற்கச் சலயாத்திரைபண்ணலாம் எ—று. [௨௫]

இதுவுமது

பேதித்தபிறபக்கத்தசைந்தவையும்பின்னிலைந்துப் பேணின ன்றுஞ், சோதித்தவிருநான்கேசுத்தமுறவைந்திடத்துச்சோமனன்றுட, வாதித்தவிவையல்திக்திசைமாதந்தினமாதிபறுமெல்லாங் காதுறறகண்மடவாய்யாத்திரைபோமசெலச்செலவுங் கண்டுகொள்ளே.

இ—ள். முன்னுகாதென்றஅபரபக்கத்தில் விட்டி இரித்தை திரகரணம் ஏகாதசிமுதலைந்து தவிர்த்து மற்றைத்திதிகளைக் கொள்ளலாமென்பாருமுளர். அட்டமசுத்தியுண்டாகவேண்டுமென்பமறுல சந்திரன் நன்றுமென்றுஞ் சொல்லப்பட்டது. மற்றுள்ளமாததிநாதுகளெல்லாமயாத்திரைக்குச் சொற்றவிதிப்படி கொள்க. எ—று ௨௬

## கோயாத்திரை.

புரந்தரன்மாசிபாம்புலியங்கிபுரவிமுப்பூராடுத்தரமுன்றுரந்தருமாபன்கலஞ்சகடடுப்போடொளிர்முறனுசெக்கெனுமிவையில்,நிரந்தெழுதிங்களந்தணண்வாரந்நேரமீன்றசர்விடைசிலையாழ். கரந்தொளிர்சியமுதலியவோரைகலக்ககோயாத்திரை முயலே.

இ—ள். கேட்டை,மகம்,மிருகசீரிடம்,கார்த்திகை,அசுவினி,பூரத்திரயம,உத்தரத்திரயம்,திருவோணம், இரேவதி,ரோகிணி, பரணி, விசாகம், சதயம்,இந்நாட்களிலே.சந்திரவியாழவாரங்களும். மீன,மேட, இடப, மிதுன, சிங்க, தனுராசிகளும சம்பவிக்கக் கோயாத்திரைக்குநன் . எ-று. ௨எ

இதுவுமது

நாலிரண்டிடமதமூக்கறவேண்டுநாற்றியவதனிடை வெள்ளிகோவினுநன்றுமற்றவையாவுஞ்சலவுகயாத்திரைப்படிபோநிலன்மாவிரவிவெள்ளிசேய்வாரநேடல்காலுதயங்கணிசியென்றெனுமிவ்வகைகோயாத்திரைக்குற்றவிருகுலநாசமென்றியம்பே.

இ—ள். லக்கினத்துக்கு அ.ல். ஒருகிரகமும்நிற்கலாகாது. சுக்கிர னிற்கைநன்று. மற்றையலக்கினங்கோசரமெல்லாஞ்சுபயாத்திரைகு விதித்தபடியேகொள்க. சனியுந்த சூரிய சுக்கிர வங்காரக வாரோ ரோதய. திருஷ்டிகளும இராத்திரிகாலமும் சபபஞ்சக்கோயாத் திரைபண்ணுகிறகோவினகுலமும், கர்த்தாவின் குலமும், நசிக்கும் எ-று ௨அ

நாற்கால் இருகாலுள்ளவைகட்கு யாத்திரைவிதி.

மதகரிபரித் திரொட்டகமதற்குவயப்புலிகடாப்பொரியுமு லவக், கிதப்லிபசுக்கட்கிசைந்தநாற்சரணத்தெனைவகட்குங்கா லெனுமிவைபாற், றிநமுறுகோவினியாத்திரைப்படியாஞ்செப்பி யவிருபதத்தெனைக்கும், விதமலிநரர்பேலெலவடவ்துக்கள் வளபிருர்தடியிடைமின்னே.

(இ-ள்.) யாத்திரைக்கு யானை குதிரை ஒட்டகம் சிங்கம் வியாக்கிரம பசு முதலைகளும மற்றுமுள்ளநாலுகாற்பிராணிகட்கெ ல்லாம் கோயாத்திரைக்குச்சொன்னபடியும், இருகாலுள்ளவை கட்கெல்லாம். மனுஷர்க்குச்சொன்னபடியும கொள்வதே முறை மையென்று சோதிடமுணர்ந்த பெரியோர்களாற்சொல்லப்பட்ட து எ—று

யுத்தயாத்திரை

அரிபரிமூங்கிலம்பலிகலந்தேர்விட்ட மூன்றுந்தரமனுஷங் குருகுபொற்றோனாவான்மருணைவிரலாக்குறிக்குநாள்கைசளி லோரை, திமரியெட்டுத்திகழ்ந்தெழமற்றுஞ்செப்பியயாத்தி ரைப்படியே, மருமலிகுழலாய்திறுதிகணன்றுய்வரவிகல்யாத் தி ரைமருவே,

[இ—ள்] திருவோணம், அசுவினி, புநர்பூசம், மிருகசீரிடம், ரேவதி, ரோகிணி, அவிட்டம, உத்தரத்திரயம், அனுஷம், மூல ம், பூசம், சித்திரை, சதயம, அத்தம், இந்நாட்களும்தராசிகளு ம சத்துருவினட்டமராசியும் யுத்தயாத்திரைக்குநன்று. திதி வாராதிகளெல்லாம் சுபயாத்திரைப்படியேகொள்க எ—று [௩௦]

இதுமுதல ௬ செய்யுட்கள்யாத்திரையில்வெற்றியடையும் லக்கினகோசரவிதி. வேறு

அண்டர்புரோகிதனுதிப்பவாறகத்திற்கனற்கதிரோனுசத்திங்க, ளெண்டருநாலிரண்டொழியவிசற்சேகில்நெடுந்தரங்கமிரங்குகூலத், தெண்டிரைசூழ்பணவையர்கோன்செகராசசேகரமன்செவ்வேல்வென்றி, கண்டுதிறைபுரிந்தவர்போலுரம்பகராதஞ்சலிப்பர்கருதலாரே.

[இ-ள்.] லக்கினத்திலே வியாழன்நிற்ப, ௬. ல். ஆதித்தியனிற்க, ௮. ஒழிந்தவிடத்துச் சந்திரனிற்கப்பெற்ற முகூர்த்தத்திலே யுத்தயாத்திரைசெய்யிற் சத்துருக்கள் யாவரும் தங்களூற்றங்கெட்டுநமஸ்கரிப்பர். எ-று ௬௧

இதுவுமது

விண்ணென்றபுந்திசுருக்கவியிவர்கள்கேந்திரத்துவிளங்கத்தீயோர், கண்ணென்றமூன்றுபெற்றெளிரவயர்க்கேகிற்சறைந்தாட்சூதப், பண்ணென்றுசததளத்தார்ச்செகராசசேகரமன்பகைஞர்தம்மிற், றுண்ணென்பவெருவுதல்போல்விளியிணைகடுயிலாவரந்துன்னவார்க்கே.

[இ-ள்.) புதன் வியாழன் சுக்கிரன் இவர்கள் கேந்திரத்துநிற்க, பாபர். ௩. ௬. ல் நிற்கப்பெற்ற முகூர்த்தத்திலே யுத்தத்துக்குச்சென்றால் சத்துருக்கள்ச்சமிகுந்து கண்டுயிலார். எ-று

இதுவுமது வேறு.

இரண்டிலரசன்கவியிசைந்தபுதனிற்பப்
பரந்தகதிரம்புலியதேழிடைபரிப்ப
வரம்படுபெருங்கனலியோரையுறவேகில்
அரும்பகையிரிந்துபுதலங்கைபடுமம்மா.

(இ-ள்.) ௨. ல் வியாழன் வெள்ளி புதன்னிற்ப, ௭. ல் சந்திரன்னிற்ப, லக்கினத்திலே ஆதித்தன்னிற்கப்பெற்ற முகூர்த்தத்திலே யுத்தத்துக்குச் சென்றால் சத்துருக்களுடைந்தோடிப்புல்லேந்துவர் எ-று

இதுவுமது

சுக்கிரனொடம்புலியகன்றுதயலக்கினத்
தொக்கவுறவம்புலியமேழிடையுதிப்பத்
திக்கிசைபொலிந்தரசர்செல்லிலிகல்மல்லற்
றக்கவர்பெறும்படி தருஞ்சடைதரிப்பே.

[இ—ள்.] சுக்கிரனும் புதனும் உதிப்பச் சந்திரன். எ. ல் நிற்கப்பெற்ற முகூர்த்தத்திலே யுத்தத்துக்குச் செல்லில் சத்துருக்கள் தோற்றோடிச் சடாமுடிதரிப்பர். எ—று. [ҧச]

## இதுவுமது

ஐந்திலரசன்கவியமைந்துறவிலக்கினத்
துந்துபதினொன் றிடையுதிப்பவிருமைக்கோள்
நந்தரிசிறந்தவிருநான்கெழநடந்தால்
வந்தெதிரெழும்பகைஞர்மாள்வரொருநோடி

[இ—ள்.] சத்துருவுக்கட்டமராசியுமாய் ஐந்தாமிடத்து வியாழனும் லக்கினத்துச்சுக்கிரனும், கக. ல் பாபராதல் சுபராதல் நிற்கப்பெற்ற முகூர்த்தத்திலே யுத்தயாத்திரை செய்யிற் கோடிசத்துருக்கள் யுத்தஞ்செய்ய வரினும் செயிக்கப்படுவர் எ—று. (ҧரு)

## இதுவுமது

கட்டுகரவெங்கனலியாறிட்டைகலப்ப
வட்டமதியேழொழியவன்னமறையோன்வந்
தொட்டியெழுமோரையெழவெய்திலிகலோரார்
இட்டமுளர்பொன்களிறிருந்திறையிடற்கே.

[இ—ள்.) கூ. மிடத்திலாதித்தனும், எ. ஒழிந்தவிடத்திற் சந்திரனும், வியாழனுதயமும், பெற்றலக்கினத்து யுத்தஞ்செய்யப்போனால் சத்துருக்களஞ்சிப் பொன்னும் யானை முதலான திறைகளும் கொடுத்தற்கு இசைவார்கள். எ—று

## இதுவுமது

கண்டகவிடஞ்சுரர்குருத்தனிகலப்ப
வெண்டருபனிக்கதிரிரண்டினிலிருப்ப
மண்டலமதித்தநிருபோர்செலவுமன்னிற்
றண்டரசர்புக்கணிகொட்டாள்பணிவர்தாமே.

[இ—ள்] வியாழன் கேந்திரத்துநிற்ப, இரண்டாமிடத்திற்சந்திரனிருப்ப இராசாக்கள் யுத்தயாத்திரைசெய்யில் சத்துருவரசர்கள் வந்து அடிபணிவர் எ—று [ҧ௭]

## இதுவுமது

அங்குரவனேழினுறவாறுகுசனைகச்
சுங்கனிகலைவாரியிடைதோபவொருமூன்றிற்

பங்குறையநான்கினெழுபண்டிதன்மைந்தே
தங்க விகல் சாரிலடை யார்கள்தரியாரே

(இ—ள்) எழா மிடத்துப்பிரகஸ் பதியும்,ஆறுமி டத்துச் செவ்வாயும்,லக்கி னத்துச் சுக்கிரனும், மூன்று மிடத்துச்சனியும், நாலா மிடத்துப் புதனும் நிற்கப் பெற்ற முகூர்த் தத்திலே போர்க்குச்செல்லிற் சத்துருக்கள் பூமியிற் றரிக்க மாட்டார் கள் எ—று

## இதுவுமது

ஓரையுறு கண்டக முழும்புகர் பொனென் போர்
தார வுயர் நல்லவர்கள் நாவில்விழி தோயும்
பார்வை பெற மன்னவர்கள் பாசறை யிலேகிற்
சேரலர் விசும்பினிடை சேர்ந் திடுகை திண்ணம்

(இ—ள்) இலக் கினத் தினுங் கேந்திரத்தினும் சுக்கிரனும் வியாழனும் நிற்க மற்றைய சுபர் இலக்கினத்தை நோக்கப் பெற்ற முகூர்த் தத்திலே இரா சாக்கள் முனைமேற் செல்லிற் சத்துருக்கள் வீர சொர்க்க மடைவார்கள். எ—று. இப்படியே யுத்த யாத்திரையோகங்கள், நர பதி விஜய மென்கின்றசாத்திரத் திற் சொல்லப்பட்டன ௩௬

## சரக்கிரியை, வேறு

நக்கனை மலாடிந் திரன் மாசி மாநல்ல ராப் பூரமூன்றடுப்புச் செக்கு மீன் சுவை சோதி யென்றிவை களிற் சேய் குருச் சனி சுடர் வாரந், தொக்ககாலுதிப் பாட்சி கள்பார்வை நாட் டோய்ந் திடக் கதிர்மதி குறைந்த, பக்க மாசயை யிரித்தைகள்விட்டிகள் பயிலு நாளம் பெயப் பகரே.

இ—ள்.திருவாதிரை கார்த்திகை கேட்டை மகம் அசுவினி ஆயிலியம்பூரததிரயம் பரணிசதயம் சித்திரை சுவாதி யிந் நாட்களும் செவ்வாய் வியாழன் சனி ஆதித்தன்வாரோதயாமசகேத்திரநக்ஷத்திர திருஷ்டிகளும்அபர பக்கமும் சயை யிரித்தை விட்டிகளும் சரக்கிரியை களுக்கு நன்று. எ—று

## இதுவுமது

பகைஞர் சென் மங்களட்டம ராசி நாட் பயில் பொருந் தாதவை யிந்து, தகை யிலட்ட-ம நாட்கள்வைநாசி கஞ்சார்ந்த நாளி ராசியிற்றனக்கு·மிகவுநல்லனுகூலமதாசவே வேண்டுமா கணேவிடு மதற்குத், தொகையவ்வாரநாளாதியாமயோகதின் றேஷமுநன்றெனச்சொல்லே

(இ—ள்) விசேஷித்து:சத்துருசென்மத்திரயங்களும், அவனுடையவட்டமராசி நாட்களும், பிரதிகூலநாட்களும், சந்திராட்டம வைநாசிகநாட்களும் இந்தவிராசிகளுஞ்சம்பவிக்கத் தனக்கநுகூலமானநாளிலே சரக்கிரியைசெய்யவேண்டும்.வாரநட்சத்திராதி தோஷங்களெல்லாம நல்லனவாம் எ—று (சுக)

## இதுவுமது வேறு

கண்டகந்தூணங்குளிகஞ்சரநாட்கள்கண்ணிலிதூமமாதியதாய், எண்டருங்கோரதோஷமாமெவையுமியம்பியசூலமாசூலந் தண்டருந்துட்டயோகமவ்வியதிபாதநற்கட வெம்முயல மண்டியகாளயோகமென்றிவைகளாதியாயளகமாக்கணங் கே

(இ—ள்) கண்டக்தோஷம் தூணதோஷம் தெத்தசுவாலாதோஷம் குளிகன் சூலம் மகாசூலம் துட்டயோகம் வியதிபாதம் சகடதோஷம் முயலயோகம் விஷயோகம் அந்தக மிவையாதியான' தோஷங்களனைத்தும் சரக்கிரியைக்கனுகூலமாம் எ—று

இருள்வெளி.

திசைதொறுமேமேழ்வரையமைந்தனல்கீழ்த்திசைநடுவதனில் வைத்தெண்ணி,யிசையுநாளறைமுன பின்மூன்றேன் பானியம்பியமூன்றுமூன்றேழு,வசையின்மூன்றுகாவிருணலநதமும்பாமன்னியவெளியதுசாவா, மிசைபயில்விழியாய்முன்பின்பக்கம்விளம்பிடின்வலமிடம்வேண்டே

(இ—ள்) நான்குதிக்கிலும் அபிசித்துக்கூட்டியேழேழ்வரையாகஇட்டுஅதிற்கிழக்குக்நடுவரையிலேகார்த்திகையைவைத்துப்பூருவபக்கமாயின்வலமாகவும்அபரபக்கமாயிலிடமாகவும்அற்றைநாளளவுமெண்ணி முனபின்னெவ்வொன்று கூட்டி மூன் நாளும் வெளி ஆகா அப்பால் ஒன்பதுமிருளிறசெயமுண்டாம அப்பால் மூன்றும் நல்லன. அப்பால மூன்றுந் தழும்புண்டு அப்பாலஏழும் வெளி யிதிற்செயமுண்டாம். அப்பால் மூன்றுமமரணமுண்டாகுமென்றும் துவந்துவயுத்தம் சேனையுத்தமே யிரண்டு பெலம் பிரதானமாகையால் பெலன்களெல்லாம் பூபலமாதயாக தத்துறங் கண்டு கொள்ளச்சேறல். எ—று

யாத்திரைப்படலம் முற்றிற்று

ஆக விருத்தம்—௨௬௯

## மனைவினைப்படலம்.
## பூபரீக்ஷை.

மேதினியதனைச்சமதலமாக்கிவிளை பியநிலங்களாக்ருதி
பேதயோங்காழ்கலிரசமண்ணிவைகள்பெட்புறுசகுனமுதெல்லையும்
நீதறவுணர்ந்துமறையவரரசர்செட்டிகள்சூத்திராய
சாதிகளுன்கிற்கமைந்ததேவாதிதங்களுக்கியைந்தவைசாற்றே.

(இ—ள்.) பூமியைச்சமமாக்கி, வன்னங்கள், ஆக்ருதிகள், கந்தங்கள், ரசங்கள், இடங்கள், சகுனங்களென்று சொல்லப்பட்ட விதிகளெல்லாம் பரீக்ஷித்துநான்கு வருணத்தாருக்குந் தேவர்களுக்குமிடமான பூமியையறிந்துசொல்லவேண்டும் எ—று. (க)

### பூமியின் நிறம் சுவை.

தவளமந்தணரும்பொன்னிறமாயி சாற்றியவரசருஞ்செம்மை
திவளுமவ்வணிகன்கருமையதாகிற்செப்பியசூத்திரனைப
விவைகளாநிறத்தினியல்கள்சுவைகளினிமைதுவர்க்குமது
வர்ப்புக்,கவையில்மன்னவர்க்குப்புளிப்பு வைசியர்க்குக்காரப்புமக்
களமருக்காமே.

(இ—ள்) வெண்மை நிறம்பிராமணனும், பொன்னிறங்க்ஷத்திரியனும், சிவப்புநிறம் வைசியனும், கருநிறம சூத்திரனும் என நிறங்களையறிக. பிராமணருக்குஇனிப்பும், க்ஷத்திரியருக்குத் துவர்ப்பும், வைசியருக்குப் புளிப்பும், சூத்திரருக்குக் காரப்புமாம்.

### பூமியின் ஆகிருதி; கந்தம்.

வட்டநாற்கோணமவச்சிரங்கமடமச்சமுக்கோணமாதியதா
ய்ப், பட்டவாகிருதிநல்லவாங்கோணிபணிசுளகுரல் மணியாத்
தி, தொட்டவானரமாற்சாரமாமாதுசொற்றிடிற்றீயவா பால்வீ
யிட்டமாங்கிழங்குநீரெனுமணநான்கிசைந்தவந்தணன் முதலி
யர்க்கே.

[இ—ள். விருத்தம், சதுச்சிரம், வச்சிராயுதம், கூர்மம், மச்சம். திரிகோணம், முதலிய ஆகிருதிகளெல்லாம் நல்லவைகளென்றும், வராகம், பாம்பு, சுளகு, உரல் மணி, யோத்தி, மர்க்கடம். பூனை, ஆதியான ஆகிருதிகளெல்லாம் ஆகாவென்று மாகிருதிபேதங்கள் சொல்லப்பட்டன. பால்மணம பிராமணஜாதி, பூமணம் க்ஷத்திரிய ஜாதி, கிழங்குமணம் வைசிய ஜாதி, ஜலமணஞ் சூத்திரஜாதி என்கின்ற மணங்களையும் அறியவேண்டும். எ—று

## சகுனபலன்

எதிரெழு சகுனநல்லவையாகிலிசைந்திடுநன்மைதீதாகில் முதிர்பெருப்பழியெனவறியிவையின்றிமுன்னியகுழியில்நீர்விடுத்துத், துதிபெறு*பன்னமிட்டிடில்வலமாய்சுழல்வதுநல்லதாமிடத்தே, பிதிர்வுறிற்பரநக்கி சநத்தார்மன்னுபேசினர்மனைவாதி பின்னும.

[இ-ள்) பூமிப்பரீக்ஷை செய்யச் செல்லுமிடத்துச்சுபசகுனம் பெற்றால் மிகுதியுஞ் சோபனமுண்டு. துர்ச்சகுனம்பெற்றால் அக்கருமந் தவிரப்படும். பூமியின் நடுவே ஒரு குழியுண்டாக்கி அதிற் சலத்தைவிட்டு ஓர் பத்திரத்தை அதன்மேலிட்டால் அது பிரதக்ஷணமாகில் மனிதர்க்கு நன்றாம். அப்பிரதக்ஷணமாகில் தேவர்களுக்கு நல்லதென்றாம் அறிக.

இதுவுமது

பன்னமதமைந்து துயிலுபவ்விராசிபாற்படிற்பழிப்பதாமென்றே, முன்னுறநடையுமிருக்கையுநிலையும்முயனறவவ்விராசியிற்சேரிற், றென்னவர்பரவும்பொலன்மணிக்கழலான் செகராசசேகரனென்னும், மன்னவர்மனனுமாதிநாரணன்சீர்பவினர்நிகர்க்குமப்புவிமேல்.

(இ-ள்) துயிலுமிராசிகளிலே அப்பர்ணமானது போயொதுங்கிற்றுமாயின் அம்மனை எவராலும் பழிகசுப்படும. நடந்தவிராசி, இருந்தவிராசி, நின்றவிராசிகளிலே போயொதுங்கிநிற்பின், பாண்டியன முடிமேல் இராசாக்களாற் பரவப்படும் பொன்னிறமுடைய, மணியிழைத்த, இயற்றிய வீரக்கழலைத்தரித்த பாதங்களையுடைய செகராஜசேகரனென்கின்ற, வேந்தருக்கெல்லாம் தலைவனான, ஆதிநாராயணனது சீரைப்படித்த மனிதர்போல அப்பூமியும வெகுசம்பத்துப்பெறறு அந்த காலம் வாழும். எ-று.

இராசிகளிலே துயில்வன, நடப்பன, நிற்பன, இருப்பன.

கலைவிடைமங்கைதுயிலுமீன்கொச்சைகைச்சிலைநடக்குநன்றேமுழு, முலைவறுஞெண்டுஞ்சிங்கமுநிற்குமோங்கியகுடந்துலைமிதுனம், நிலைபெறவிருக்குமென்றிவையனைத்துமடநெருங்கியவனமுலைசித்ரச், சிலைநுதல்மடவாய்முனிவருமுணர்ந்துசெப்பினராமெனத்தெளியே.

(இ-ள்) மகரம், இடபம், கன்னி, துயிலுமிராசியென்றும், மீனம், மேடம், தனு நடக்குமிராசியென்றும், விருச்சிகம், கடகம், சிங்கம், நிற்குமிராசியென்றும கும்பம், துலாம், மிதுனம், இருக்குமிராசியென்றும் பெரியோர் சொல்லினர். எ-று

* பன்னம்-இலை

குழிலக்ஷணம்.

சானுவினுழங்கோணநான்காகத்தடங்குழிவகுத்ததைமறைப்பின்
மேனிரம்பிடினுத்தமஞ்சமமாயின்விளம்பியமத்திமமாகு
மானகங்குறையிலதமமாங்குழியிற்றவளைதேளரவுமண்ணுற
மினமாம்புழுநீறிருந்தைஇந்தனமென்பவையுமம்மனையிலிகழே

(இ—ள்.) முழந்தாளளவாகச் சதுரப்பட ஒருகுழிவகுத்து அம்மண்ணை மீளவுங் குழியிலிட நிறைந்து அதிகமாயிருக்கிலுத்தமம் சமமாயிருக்கில் மத்திமம். மண் குறையினும் குழியிற்றவளை, தேள், பாம்பு, பூநாகம், கிருமி, சாம்பர், காஷ்டம், என்பு, இவைகளுறினும், அம்மனையாகாது. எ—று. (எ)

இதுவுமது

ஏமமாரசிதமுதும்பிரஞ்சர்ப்பமிபற்றியநவமணித்தொகைக
ளாமிவையிரும்புதானியமாதியவையுமிற்கிராமங்கள்கிரகந்
தோமில்பத்தனங்கள்நாடுகளன்றிச்சுராலயங்கோபுரதரங்கந்
காமருயாகசாலைமன்றரங்கங்கட்டநன்றெனக்கருதே

இ—ள் பொன், வெள்ளி, செம்பு, நாகமுதலான தாதுக்களும், நவரத்தினங்களுமிரும்புந்தானியங்களுமிருந்தால்கிராமம் கிருகம் பட்டணம், நாடு, தேவாலயம், கோபுரம், நீர்நிலை, யாகசாலை, சபை, போர்க்களம், இவைகளைக்கட்டநன்று எ—று அ

## வாஸ்த்துவின்னியாசம்

பரித்தவப்பெரியகிராமவின்னியாசம்பகரிலவ்விதங்களெட்டவ
ற்றில், விரித்ததெண்டகஞ்சுவத்திகமொடுபாரவம்விளம்பியநந்தி
யாவர்த்தம், பெருத்தபிறதாமம்பரமகஞ்சிறீபிரதிட்டிதம்பிறகிர
ணம்எனவாக், தெரித்திவைக்குற்றவீதியுமியல்பும்தேமொழீபிறி
தினிற்றெளியே.

இ—ள். கிராமவின்னியாசபேதங்கள் தெண்டகம், சுவதிகம், பாரவம், நந்தியாவர்த்தம், பிரதாமம், பிறமகம், சிறீபிரதிட்டிதம், பிரகிரணமென்றெட்டுவகைப்படும். இவற்றிற்குண்டாகிய வீதிபேதங்களும் லக்ஷணங்களும் விரிக்கிற்பெருகுமாதலால் அவ்வவற்றிற்குரிய சாஸ்திரங்களிலே கண்டுகொள்க எ—று

## மனைப்பொருத்தம்

ஜநமுனாம, அல்லது தற்காலம் வழங்கிவரும் ஜாதி அடியால் தனக்கு அனுகூலமான இராசியில் வருத்தமனையை அளந்து நீளத்தை அகலத்தாற்பெருக்கிவந்தது துருவம், இந்தத் துருவத்தை எட்டிற் கழித்து வந்தமீதம் கெர்ப்பம், துருவத்தை ௮ற்பெருக்கி ௧௨ல் கழித்தமீதம் ஆயம், ௯ல் பெருக்கி ௧௦ல் கழித்தமீதம் செலவு, ௩ற் பெருக்கி ௮ற் கழித்தமீதம் யோனி, ௮ல் பெருக்கி ௨௭ற் கழித்தமீதம் நக்ஷத்திரம், ௪ல் பெருக்கி ௩௦ற் கழித்தமீதம் திதி, ௯ல் பெருக்கி ௭ல் கழித்தமீதம் வாரம், ௭ல் பெருக்கி ௧௨ல் கழித்தமீதம்ராசி, ௯ல் பெருக்கி ௪ல் கழித்தமீதம் ஜாதி, ௪ல் பெருக்கி ௯ல் கழித்தமீதம் அம்சம், ௨௭ல் பெருக்கி ௧௦௦ல் கழித்தமீதம் வயது, ௮ல் பெருக்கி ௫ல் கழித்தமீதம் சூத்திரம். மீதமில்லையாயின் பெருக்கிடுதொகையை வைத்துக்கொள்க. ௧௯ பொருத்தமாகவும் சில கிரந்தங்களிற்சொல்லப்பட்டன. கெற்பம் ௮, ஆயம் ௧௨, செலவு ௧௦, யோனி ௫, நக்ஷத்திரம் ௨௭, திதி ௩௦(௧௫ ௧க்குள் பூர்வபக்ஷம் ௩௦க்குள் அபரபக்ஷம்) வாரம ௭, ராசி ௧௨, ஜாதி ௪, அம்சம் ௯, வயது ௧௦௦ சூத்திரம ௫.

சேகராசசேகரமாலை முற்றிற்று.

இந்நூல் செய்வித்தோன் பெயரால் வழங்கப்பட்டதலால் ஆசிரியோன்பெயர் வழங்கவில்லை. பாயிரத்தில் "சேகராசசேகரமாலையைச் செய்தான் பொருந்துமேன்மைத் தோன்றுலவு மிராசவிராமேசனருள் சோமனெனுஞ் சுருதியோனே" எனக்காணப்பட்டது.

ஆக விருத்தம் ௩௦௩.

॥शुभमस्तु॥

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ௨௭ | ௧௪ | சௌளம் | சௌரம் |
| ௩௧ | ௧௨ | நீக்கித் | நீக்கி |
| ௩௨ | ௧௯ | புதஸ் | புத |
| ௩௪ | ௨௩ | சாயை | சாகை |
| ௪௧ | ௨ | ஸ்திதிரீ | ஸ்திரீ |
| ௫௪ | ௨௫ | காத | கரசாத |
| ௯0 | ௫ | அமாவரை | அமாவா |
| ௯௧ | ௯ | தேளெழு | தேளெழ |
| ௯௨ | ௪ | முலம் | மூலம் |
| ௯௫ | ௧ | யாத்திரை | கோசரம் |
| ௧0௩ | ௧ | கோசரம் | யாத்திரை |
| ௧0௫ | ௨௧ | பெஞ் | பெருஞ் |
| ௧௧௭ | ௨௭ | விருதம் | விருத்தம் |
| ௧௧௮ | ௨௯ | அந்த | அநந்த |

☞ சில இடங்களிலே உத்திரம் இருத்தை கிரசம் சௌளம் என்பவற்றை உத்தரம் இரித்தை கிருசம் சௌரம் எனத்திருத்திவாசிக்க. இவைகளும் பிறவும் மறுபதிப்பிற் திருத்தி அச்சிடுவோம்.